Registered as a News Paper in Sri Lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

தினமுரசு

THINAMURASU

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2045 மார்கழி 01 செவ்வாய்க்கிழமை (16.12.2014) பக்கங்கள் 20 ஓசை – 077

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

## ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு மற்றுமொரு சர்வதேச நிபுணர்

காணாமற் போனோர் தொடர்பில் விசாரணை செய்வதற்காக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழுவுக்கு, மற்றுமொரு சர்வதேச நிபுணரை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நியமித்துள்ளார் என ஆணைக்குழுவின் தலைவரும் ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதியுமான மக்ஸ்வல் பராக்கிரம பரணகம தெரிவித்தார்.

முன்னாள் சர்வதேச நீதிபதியும் ஜப்பானைச் சேர்ந்தவரு

(19) ஆம் பக்கம் பார்க்க

## வடமாகாண "பட்ஜெட்" மாகாண உறுப்பினர்கள் கண்டனம்

வடமாகாண சபையின் பாதீட்டு அறிக்கை தன்னிச்சையாக தயாரிக்கப்பட்டுள்ளதாக வடமாகாண சபை ஆளும் கட்சி மற்றும் எதிர்கட்சி உறுப்பினர்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

வடமாகாண சபையின் பாதீட்டு அறிக்கை தொடர்பாக ஆராயும் கூட்டம் நேற்று யாழ்.பொது நூலகத்தில் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக் னேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

அதன்போது,ஆளும் கட்சி

(19) ஆம் பக்கம் பார்க்க

## சுமந்திரன் மீது சிவாஜி சீற்றம் உட்கட்சி மோதல் உக்கிரம்



கள்வன் என கூறப்படும் நான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருப்பதால் கள்வனின் கூடாரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என நீங்கள் கூறுகின்றீர்களா? என சுமந்திரன் மீது கேள்விக்கணை தொடுத்துள்ளார் வடமாகாணசபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம். யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே சிவாஜிலிங்கம் இவ்வாறு கேள்விகளை அடுக்கிச் சென்றார்.

நேற்று முன்தினம் வவுனியாவில் இடம்பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் என்னைப்பற்றி சுமந்திரனினால் பல அவதூறான கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன. எனக்கு அங்கிருந்து தகவல் தரபலர் இருக்கிறார்கள் 2010 இல் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட சிவாஜிலிங்கம் ஜனாதிபதி மகிந்தவிடம் இருந்து 45கோடி ரூபாவை பெற்றதாகவும் ஜனாதிபதிக்கு ஆதரவளித்ததாகவும் தெரிவித்துள்ளார்.

இனப்படுகொலை சம்பந்தமான தீர்மானத்தை கொண்டு வந்ததற்கும். ஜனாதிபதியிடம் பணம் வாங்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவளிக்க வேண்டாம் என தடுத்தபோதும் சம்பந்தன் ஐயா கண்ணீர் மல்கியதைக் கண்டு தான் நான் அமைதியாக போனேன். அதிலும் நான் எதிர்த்து தான்

(19) ஆம் பக்கம் பார்க்க

# மகிந்த ஆட்சியிலேயே தமிழருக்கான தீர்வு சாத்தியம்

## எதிரணியினரிடம் தீர்வுத்திட்டம் எதுவுமில்லை



**இன்றைய ஆட்சி தொடர்ந்தும் நீடித்தாலேயே எமது தமிழ் மக்களுக்கான அரசியல் உரிமைப் பிரச்சினைக்கு நீடித்திருக்கக் கூடிய தீர்வு சாத்தியம் ஆகும். இதுவே உண்மையும் யதார்த்தமும் ஆகும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதித் தேல்தலில் யாரை தமிழ் மக்கள் ஆதரிக்க வேண்டும் என்பது தொடர்பாக விளக்கமளித்து வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,**

எம் இனியமக்களே!....

மறுபடியும் ஒரு ஜனாதிபதித்தேர்தல் எம்மைத் தேடிவந்திருக்கிறது. எங்கள் வாக்குகளின் பலத்தால் அதிகாரத்தில் இருக்கப் போகின்றவர்களுடன் அரசியல் பேரம் பேசும் சந்தர்ப்பத்தை நாம் சரிவரப் பயன்படுத்தவேண்டும்.

நாங்கள் வாக்களித்தால் எமதுமக்களுக்கு எதைத்தருவீர்கள்?..... இதையே நாம் ஆதரிக்கப்போகும் ஜனாதிபதி வேட்பாளர்களிடம்

(19) ஆம் பக்கம் பார்க்க

## பல்கலைக்கழகங்களுக்கு பாதிப்பு புலிகளும் ஜே.வி.பி.யுமே காரணம்

### அமைச்சர் எஸ்.பி. தெரிவிப்பு



விடுதலைப் புலிகளும் ஜே.வி.பி கட்சியுமே இலங்கையின் பல்கலைக்கழகங்களை நாசமாக்கியதாக உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

1980ஆம் ஆண்டு முதல் 2005ஆம் ஆண்டு வரையில் இந்த நிலைமை நீடித்து வருவதாகத் தெரிவித்துள்ளார். வேந்தர்கள், துணைவேந்தர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், செனட்டர்கள் உள்ளிட்டவர்கள் பல்கலைக்கழக நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை எனவும் தெற்கில் ஜே.வி.பியும், வடக்கில் விடுதலைப் புலிகளும் பல்கலைக்கழகங்களை கட்டுப்படுத்தியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகங்களை கட்டுப்படுத்தும் முனைப்புக்கள் காரணமாக வடக்கிலும் தெற்கிலும் இரண்டு துணை வேந்தர்களை புலிகளும், ஜே.வி.பியினரும் படுகொலை செய்ததாகத் தெரிவித்துள்

(20) ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு வருகிறார் ஜனாதிபதி

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வார இறுதியில் வடபகுதிக்கான பயணத்தை மேற்கொள்ளவுள்ளார்.

நாளை மறுதினம் 18ஆம் திகதி கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொள்ளும் ஜனாதிபதி அங்கு தேர்தல் பரப்புரை கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுவார்.

19ஆம் திகதி முல்லைத்தீவுக்கான பயணத்தை மேற்கொண்டு தேர்தல் பரப்புரை கூட்டத்தில் உரையாற்றுவார் தொடர்ந்து யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளார். (25)

## திடீர் இடமாற்றம்

யாழ்.போதனாவைத்தியசாலை பணிப்பாளர் திருமதி பவானி பசுபதிராசாவுக்கு திடீர் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. இதன்படி அவர் வவுனியா மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.


## காணாமற்போனோர் விசாரணை வவுனியாவில் சாட்சியங்கள் பதிவு

வவுனியா மாவட்டத்தில் காணாமற் போனவர்கள் முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெற்றுள்ள 230 முறைப்பாடுகள் தொடர்பில் இரண்டாவது நாளான நேற்று வாக்குமூலம் பெறப்பட்டதாக ஆணைக்குழுவின் செயலாளர் எஸ்.டபிள்யு.குணதாஸ தெரிவித்துள்ளார்.

குறித்த 230 சாட்சிகள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்வதுடன், புதிய முறைப்பாடுகளையும் தெரிவிக்க வாய்ப்புக் கிடைக்கும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

முறைப்பாடுகள். தொடர்பாக

(19) ஆம் பக்கம் பார்க்க



# தொண்டைமானாறு கிராமத்தில் "குறைகேள்" கலந்துரையாடல்

(வடமராட்சி)

வடமராட்சி தொண்டைமானாறு கிராம மக்களின் குறைபாடுகள் தொடர்பாக் ஆராயும் கூட்டம் ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும் வடமராட்சி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவருமான சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தலைமையில் இடம்பெற்றது.



இந்நிகழ்வின்போது கிராமத்து மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் தேவைப்பாடுகள் குறித்து ஆராயப்பட்டதுடன் கிராமத்து மக்களின் நிலைமைகள் ஆராயப்பட்டதுடன் வறிய குடும்பங்களினைச் சேர்ந்தோருக்கான வாழ்வாதார உதவி வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலில் பருத்தித்துறை பிரதேசசபை எதிர்க்கட்சித்தலைவரும் வடமராட்சி அமைப்பாளருமான ஸ்ரீரங்கேஸ்வரன், வல்வெட்டித்துறை நகரசபை எதிர்க்கட்சித் தலைவர் கைலாயினி, பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர்.

# முருகேசு ரவீந்திரனின் இரு நூல்கள் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

முருகேசு ரவீந்திரனின் 'நிலவு நீரினுள் தெரியும்' (சிறுகதைத் தொகுப்பு) 'அனைத்தும்' (படைப்பிலக்கியம் பற்றிய பார்வை) ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நாவலர் வீதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் சுன்னாகம் வாழ்வகத் தலைவரும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி விரிவுரையாளருமாகிய ஆ.ரவீந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் வரவேற்புரையினை திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலய அதிபர் ஆர்.பசுபதீஸ்வரன் நிகழ்த்த வாழ்த்துரைகளினை உளசமூக சீராளன் எழுத்தாளன் யோசப்பாலா, யாழ்ப்பாணம் இந்தக்கல்லூரி அதிபர் ஐ.தயனந்தராஜா ஆகியோர் வழங்கவுள்ளார்கள்

நிலவு நீரினுள் தெரியும் நூலுக்கான வெளியீட்டுரையினை உடுவில் மான்ஸ் மகாவித்தியாலய அதிபர் ப.சுதானந்தராஜா வழங்குவார் நூலின் முதற்பிரதியினை லயன் ஆர் .பேரின்பநாதன் பெற்றுக்கொள்வார்.

அனைத்தும் நூலுக்கான வெளியிட்டுரையினை ஆசிரியை செல்வி கீதா கணேஷ் வழங்கவுள்ளார். முதற்பிரதியினை யாழ்ப்பாணம் மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் கே.சுசீந்திரன் பெற்றுக்கொள்வார். நூலுக்கான நயப்புரைகளினை விசேட உளநல மருத்துவ நிபுணர் வைத்தியகலாநிதி ம.கணேசன் யாழ். இலக்கியக்குவியத்தின் தலைவர் வேலணையூர் தாஸ் ஆகியோர் வழங்கவுள்ளார்கள்.

ஆர்வலர்களையும், நலன் விரும்பிகளையும் வருகைதந்து நிகழ்வினை சிறப்பிக்குமாறு விழா ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளார்கள். (63)

# யாழ்ப்பாணத்தில் 75 எயிட்ஸ் நோயாளர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இதுவரையில் 75 எயிட்ஸ் நோயாளிகள் இனம் காணப்பட்டுள்ளதாக யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதிகாரி யசிதரன் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்.கலைத்தூது கலையகத்தில் இடம்பெற்ற சர்வதேச எயிட்ஸ் விழிப்புணர்வு நிகழ்வில் கலந்துகொண்டு தகவல் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையில் 1950 பேர் இனம்காணப்பட்டுள்ள போதிலும், 5000 பேர் வரையில் இந் நோய்த்தொற்றுக்கு இலக்காகி இருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

இவ்வாறு இனம் காணப்பட்டவர்கள் தாமாகவே பரிசோதனைக்கு ஆளாகாது வேறு நோய்ப்பரிசோதனையின் போதே கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது இங்கு திறந்ததொரு சமுதாய நிலை காணப்படுகிறது. இதனால் இந்நோயின் தொற்று ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக இருக்கின்றது. இதனைத் தடுக்கும் வகையில் இளைய சமுதாயத்தினருக்கு இந்நோய் பற்றிய விழிப்புணர்வு மிக அவசியமாகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# கல்லுண்டாய் கழிவுகளால் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

## – நாளை ஆராய்வுக்கூட்டம்

(நவாலி)


கல்லுண்டாயில் கொட்டப்படும் ஆபத்தான மலக்கழிவு, திண்மக்கழிவு என்பவற்றால் நவாலி, ஆனைக்கோட்டை மக்களுக்கு ஏற்படவுள்ள பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடல் நாளை மாலை 4 மணிக்கு ஆராயப்படவுள்ளது.

நவாலி முருகானந்தா சனசமூக நிலையத்தில் மேற்படி இடர் குறித்த கலந்துரையாடல் சந்திரன் முருகமூர்த்தி ஆலய பரிபாலன சபைத்தலைவர் செ. மகேந்திரன், சனசமூக நிலையத் தலைவர் கு.சிவலிங்கம் ஆகியோரின் இணைத்தலைமையில் நாளை இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத்தில் எடுக்கப்படும் தீர்மானத்தைத் தொடர்ந்து கல்லுண்டாயில் எந்தவிதமான கழிவுகள் கொட்டப்படுவதோ, மலக்கழிவுகள் கொட்டப்படுவதோ முற்றாக நிறுத்தப்பட்டு புனிதம் பேணப்படவேண்டும்.

எனவே பேரிடர் குறித்த கலந்துரையாடலில் நவாலி, ஆனைக்கோட்டையில் உள்ள பொது அமைப்புக்கள், சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், ஆலய பரிபாலன சபை நிர்வாகிகள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கோரப்பட்டுள்ளனர். (92)

# நத்தார் இன்னிசை வழிபாடு



(கிளிநொச்சி)

தென்னிந்திய திருச்சபையின் ஒருங்கிணைந்த நத்தார் இன்னிசை வழிபாடு கடந்த 13 ஆம் திகதி கிளிநொச்சி தென்னிந்திய திருச்சபையில் பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்றது.

இவ்வழிபாட்டில் தென்னிந்திய திருச்சபையின் பேராயரும், அமெரிக்கன் இலங்கை மிஷன் தலைவருமான டானியல் செல்வரத்தினம் தியாகராஜா, செயலாளர் வணபிதா சொலமன், கிளிநொச்சி, வன்னி குருமுதல்வர்கள், ஊழியர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இவ்வழிபாட்டில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் உள்ள தென்னிந்திய திருச்சபை நத்தார் பாடல் குழுவினர் கலந்து கொண்டு பாடலிசைத்ததுடன், நிறைவில் சிறுவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (29)

# புனரமைக்கப்படாத தம்பாலை மயான வீதி

(அச்சுவேலி)

அச்சுவேலி தம்பாலை இந்து மயானத்திற்குச் செல்லும் வீதியானது நீண்டகாலமாக புனரமைப்பின்றிக் காணப்படுவதாக வீதியைப் பயன்படுத்துவோரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த வீதியானது போக்குவரத்துச் செய்யமுடியாதா நிலையில் கற்களுடன் குண்டும் குழியுமான நிலையில் காணப்படுகிறது.

அத்துடன் இந்த வீதியை அண்டியே அப்பகுதி மக்களின் விவசாய நிலங்கள் அமைந்துள்ளதால் விவசாயச் செய்கையினை மேற்கொள்வோரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

மேலும் மழை காலங்களில் வெள்ள நீர் வீதியின் நடுவே தேங்கிநிற்பதால் வீதி சேறும் சகதியுமாக காட்சியளிப்பதுடன், தொற்று நோய்கள் ஏற்படும் நிலையும் காணப்படுகிறது.

இந்த வீதி திருத்தம் தொடர்பில் ஏற்கனவே தெரியப்படுத்தியும் அது தொடர்பில் எந்த தரப்பினரும் நடவடிக்கை எடுக்கவில்லை என இப்பகுதி மக்களும், சமூக நலன் விரும்பிகளும் கவலை வெளியிட்டுள்ளனர். (85)


## சிறு விளம்பரம்

**டயானா பிளாஸ்ரிக் ரீசைக்கிள் (மீள்சுழற்சி)**

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

(இலுப்பையடிச் சந்தி அருகாமை)

021 222 8680, 077 592 5088.

(C/3589)


## DDTV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| நேரம் | செவ்வாய் |
|---|---|
| AM 05.00 | ஆலய தரிசனம் (பக்தி பாடல்கள்) |
| AM 07.00 | காலை கதிர் |
| AM 08.00 | நாளிதழ் நேரம் |
| AM 09.00 | SMS Time (Live) |
| AM 09.58 | காலை செய்தி |
| AM 10.00 | HELLO DD |
| AM 10.30 | தெரிந்தால் சொல்லுங்கள் |
| AM 11.00 | சிரிக்க சிரிக்க |
| AM 11.30 | சிரிக்க சிரிக்க |
| PM 12.00 | அதிர்வுகள் |
| PM 12.30 | அதிர்வுகள் |
| PM 01.20 | பாடல்கள் |
| PM 01.30 | காதல் திரைப்படம் |
| PM 03.58 | மாலை செய்தி |
| PM 04.00 | மழலைகள் |
| PM 05.00 | சிரிக்க சிரிக்க |
| PM 06.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00 | அதிர்வுகள் |
| PM 07.30 | அதிர்வுகள் |
| PM 08.00 | பிரதான செய்தி |
| PM 08.20 | பாடல்கள் |
| PM 08.30 | HELLO DD |
| PM 09.00 | திரைப்படம் |
| PM 11.30 | நீங்காத நினைவுகள் |

# வாடிக்கையாளர்களை ஏமாற்றும் விற்பனை முகவர்களின் செயற்பாடு

## கவனமெடுக்குமா தனியார் நிறுவனங்கள்?

(யாழ்ப்பாணம்)

ரெலிக்கொம், டயலொக் மற்றும் ஏனைய பல நிறுவனங்களால் அனுப்பப்படும் விற்பனை முகவர்களால், கடைகளில் பணிபுரிவோர், வீதிகளில் பயணிப்போர் எனப் பல்வேறு தரப்பினரும் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுப்பதாக விசனம் தெரிவித்துள்ளனர்.


இவ்வாறு நிறுவனங்களால் அனுப்பப்படும் விற்பனை முகவர்கள் அவசர தேவைகளின் நிமித்தம் செல்வோரையும் ஏனையவர்களையும் இடைநிறுத்தி தாம் விற்கும் பொருட்கள் பற்றி தெரிவிப்பதுடன் அவற்றைக் கொள்வனவு செய்யுமாறும் வற்புறுத்துவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவங்களால் பாதிக்கப்பட்டுள்ள ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்த நவம்பர் மாதம் 21 ஆம் திகதி வலி.தென் மேற்குப்பகுதிக்கு விஜயம் செய்த டயலொக் நிறுவனத்தின் விற்பனை முகாமையாளர் ஒருவர் “300 பக்கேஜ்” எனக் கூறி யுவதி ஒருவருக்கு சிம் அட்டையினை விற்பனை செய்துள்ளார்.

ஆனால் கடந்த 21 ஆம் திகதி முதல் 4 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கான தொலைபேசி கட்டண பற்றுச்சீட்டில் ரூபா 1655.42 சதம் என கணக்கிடப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கும் யுவதி இது ஏமாற்று வேலையா? என கேள்வி எழுப்பியுள்ளார்.

மேலும் இவ்வாறு வாடிக்கையாளர்களுக்கு போதிய விளக்கத்தினை வழங்காது சிம் அட்டையினையோ அல்லது வேறு எந்த பொருட்களையோ விற்பனை செய்யும் முகவர்கள் தொடர்பில் நிறுவனம் கண்காணிக்க வேண்டுமெனவும் வாடிக்கையாளர்கள் தெரிவிக்கின்றனர்.



யாழ்.தமிழச் சங்கத்திற்காக ஆறுமுகநாவலரின் திருவுருவப்படத்தை தமிழாசிரியரும் தமிழ்ச் சங்கத்தின் உறுப்பினருமான ச.சந்திரசேகர் இரண்டு நாட்களில் ஓவியமாக வரைந்துள்ளார். அவருடன் அவர் வரைந்த திருவுருவப் படத்தைக் காணலாம்.

# இளமையில் சாதனை படைப்போருக்கும் கலாபூஷணம் விருது வழங்கவேண்டும்

## வேண்டுகோள் விடுத்துள்ளார் சபாரத்தின சிவம் குருக்கள்

(யாழ்ப்பாணம்)

நாடு தழுவிய ரீதியில் 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு வழங்கப்படும் கலாபூஷணம் விருது போன்று இளமைக்காலங்களில் சாதனை படைக்கும் பல்வேறு துறையினருக்கும் இந்து கலாசார அமைச்சால் விருதுகள் வழங்கப்பட வேண்டும்.

இவ்வாறு நவாலி வடக்கு பெத்தனாச்சி அம்மன் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ.இ.சபாரத்தினசிவம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இளவயதினருக்கான சாதனையாளர் விருது எனும் தலைப்பில் சிவஸ்ரீ.இ.சபாரத்தினசிவம் நவாலி ஹேமலதா ஞாபகார்த்த சனசமூக நிலையத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்டபோதே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்து கலாசார அமைச்சு வருடந்தோறும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு கலாபூஷணம் என்ற விருதினை நாடு தழுவிய ரீதியில் வழங்கி வருகின்றது.

இந்த விருது நமது நாட்டில் பல்வேறு துறைகளில் சாதனை படைத்து வரும் வயது முதிர்ந்தவர்களுக்கான விருதாகும். ஆனால் 60 வயதிற்கு உட்பட்ட 25 வயதில் இருந்து 55 வயதுக்குட்பட்ட வகையில் இளமையானவர்கள் தாம் வாழும்காலத்தில் தமது சாதனைகளுக்கு எவ்வித அங்கீகாரமும் இல்லையென ஏங்குகின்றனர்.

எனவே வடக்கினை பிரதி நிதித்துவப்படுத்தும் தமிழ் மக்களின் தலைவராக் பணிபுரியும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நாடுதழுவிய ரீதியில் இளம் சமூக சாதனையாளர்களும் விருதுகள், உயர்பட்டங்கள் பெறுவதற்கு ஏற்ற முன்மொழிவுகள், முன்வரைகளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து உயிரோட்டம் கொடுக்க வேண்டும் என விரும்புகின்றோம்.

அதேநேரம், 2015 இல் இளம் சமூக சாதனையாளர்கள் விருதுகள் பெறுவதற்கு இந்து கலாசார அமைச்சும், இதற்கு மேலாக அமைச்சர் டக்ளஸ் தேவனாந்தாவும் முனைப்புடன் செயலாற்றினால் நாடு தழுவிய சிறப்பு இளம் சமூகத்திற்கு கிடைக்கும் என்றார். (92)

# அடிமடியில் கவனமாக இருக்க வேண்டாமா...?




போரினாலும் அரசியற் பிரச்சினைகளாலும் மிக நீண்டகாலமாகப் பல இழப்புகளையும் பாதிப்புகளையும் பின்னடைவுகளையும் சந்தித்த மக்கள் மாகாண–சபையின் மூலமாக ஒரு மாற்றமும் தீர்வும் கிடைக்கும் என்று எதிர்பார்த்தனர்.

ஆனால், மாகாணசபையை எடுத்துவைத்துக்கொண்டு நடத்துகின்ற அரசியற் கூத்துகளையும் பத்திரிகைச் செய்திகளையும் பார்த்து, 'என்னதான் நடந்து கொண்டிருக்கிறது? இதெல்லாம் தொடர்கதைதானா?' என்று விரக்தியிலுள்ளனர் மக்கள்.

இருக்காதா பின்னே, தேர்தல்களின்போது வெளிப்படும் வேகமும் வாக்குறுதிகளும், தேர்தல் முடிந்தவுடன் எங்கு போய்விடுகின்றன? இத்தனைக்கும் தேர்தல் முடிவு–கள் இந்தத் தலைவர்கள் எதிர்பார்த்தபடியே அமைந்த பின்னாலும், ஒன்றையும் செய்யமுடியாமல், எதுவும் நடத்த முடியாமல் திண்டாடிக் கொண்டிருந்தால் மக்களுக்கு ஏமாற்றம் மட்டுல்ல கோபமும் வந்தே தீரும்.

'மக்களுடைய கோபம் என்ன செய்யும்? அவர்கள் அதையெல்லாம் கொஞ்சக் காலத்தில் மறந்து விடுவார்கள்' என்று இந்தத் தலைவர்கள் கருதக் கூடும்.

என்றபடியால்தானே மக்களின் விருப்பங்கள் எதிர்பார்ப்புகள் எதுவும் தீராமல் ஆவேசக் கூத்துகள் மட்டுமே இங்கு அரங்கேறுகின்றன!

ஆட்சியமைத்துள்ள மாகாணசபையின் முன்னே ஏராளம் பொறுப்புகளும் கடமைகளும் உள்ளன. மக்களின் தேவைகளும் எதிர்பார்ப்புகளும் அதிகமாக இருக்கின்ற அளவுக்கு பொறுப்புகளின் கனதியும் கடமைகளின் அவசியமும் உண்டு.

ஆனால், மக்களிடமிருந்து அந்தப் பொறுப்பை ஏற்றவர்கள், தேர்தல் முடிந்த கணத்திலிருந்து தங்களுக்குள் குழிபறிக்கவும் குத்துவெட்டுப்படவும் ஆரம்பித்துவிடுகிறார்கள்.

இந்த லட்சணத்தில், எப்படி மலைபோலிருக்கும் மக்களின் தேவைகளை நிறைவேற்ற முடியும்? மக்கள் மனங்களிலிருக்கும் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்ய இயலும்?

முதலில் நல்லிணக்கம் உருவாக்கப்பட வேணும். இதை சர்வதேச சமூகமும் வலியுறுத்தி வருகிறது. நல்லிணக்கம் என்பது உடன்பாடு காண வேண்டிய தீர்வு காணவேண்டிய விசயங்களைப் பேசுவதற்கும் பேசும் விடயங்களை பரஸ்பரம் புரிந்து கொண்டு தீர்வை எட்டுவதற்குமான அடித்தளம்.

ஆனால், இலங்கையில் நல்லெண்ண நடவடிக்கைகள் என்பது இன்னும் நம்பிக்கையளிக்கக் கூடிய அடையாளங்களை உருவாக்கவில்லை.

அரசாங்க தரப்பில் இதை ஒரு ஏற்பாடாக வைத்துக்கொண்டு அங்கங்கே செயற்களங்களை உருவாக்க ஏதோ செய்யப்படுகிறது. பேச்சளவிலாவது இந்த நடவடிக்கைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

ஆனால், ஏனைய எந்தத் தரப்பிலும் நல்லெண்ண முயற்சிகள் புள்ளியளவிற்கூட ஆரம்பிக்கப்படவில்லை. அவர்களுடைய சிந்தனையிலேயே அத்தகைய ஒரு விசயம் இருப்பதாக உணரப்படவில்லை.

எல்லோரும் அரசாங்கத்தின்மீது குற்றங்களையும் பொறுப்புகளையும் பாரப்படுத்திவிட்டு தங்கள் தவறுகளையும் தாங்கள் செய்ய வேண்டிய கடமைகளையும் மறந்து விடுகிறார்கள். அல்லது அவற்றைத் திட்டமிட்டு மறைத்துப் புறக்கணிக்கிறார்கள்.

இலங்கையில் காயங்களுக்கும் பாதிப்புகளுக்கும் உட்படாமல் யாருமே தப்பவில்லை. எல்லாச் சமூகங்களும் காயமடைந்திருக்கின்றன.

ஒரு சமூகத்தை இன்னொரு சமூகம் ஏதோ ஒரு நிலையில் மிகக் கீழ்த்தரமாக நடத்தியிருக்கிறது. மிக மோசமான வன்முறையின் மூலம் சிதைத்திருக்கிறது.

ஆகவே, எல்லோருமே குற்றவாளிகள்தான். அல்லது குற்றங்களின் பங்காளிகளாகவே இருந்திருக்கிறோம்.

இதையெல்லாம் உணர்ந்து, இந்தத் தவறுகளால் ஏற்பட்ட இடைவெளியைக் குறைக்க வேண்டும் என்றால் நிச்சயமாக நல்லிணக்கம் அவசியமே.

அப்படிப் பார்த்தால் எல்லா இடங்களிலும் நல்லிணக்கம் அவசியமாக உள்ளது.

பால் ரீதியாக, இன ரீதியாக, பிரதேச ரீதியாக, மத ரீதியாக, சமூக ரீதியாக எனப் பல தளங்களில்.

இந்தத் தளங்களில் எல்லாம் நல்லிணக்கத்தை உண்டாக்குவதற்கு யார் தயார்?

ஒரு நண்பர் சொல்கிறார், 'அங்க இங்க எண்டு மற்றவையிட்ட நல்லிணக்கத்தைப் பற்றிக் கதைக்கிறீங்கள். முதல்ல இப்ப தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள்ளும் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கிடையிலும் நல்லிணக்கம் தேவைப்படுது. அவையள்தான் ஆளாளுக்கு அடிபட்டுக் கொண்டும் பிடுங்குப்பட்டுக் கொண்டுமிருக்கினம். வெற்றியைத் தரும் இந்த மாகாணசபை எண்டு வாக்குப் போட்ட ஆட்கள் எல்லாம் செருப்பைத் தூக்கிற கோவத்தில இருக்கினம்' என்று.

மற்றவர்களின் மடியைப் பார்க்க முதல் எங்களின் மடியைப் பார்த்துக் கவனமாக வைத்திருக்க வேணும் என்று தெரியாமலா சொன்னார்கள்.

பெருந்தன்மையான குணம் எல்லா நற்குணங்களுக்கும் ஆபரணம் போன்றது. - அரிஸ்டாட்டில்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## போர்க்குற்ற விசாரணை யார் மீது?

நாட்டில் நடந்து முடிந்த போரில் வெற்றிபெற்ற போர்க்குற்றவாளிகளை சர்வதேசம் விசாரணை செய்து தண்டித்தால், அதன்பிறகு தமிழ்மக்களுக்கான தீர்வு வந்துவிடும் என்று நேற்றுவரை ஆவேசமான குரலில் முழங்கிக் கொண்டிருந்தவர்கள் இப்போது அதுபற்றி என்ன சொல்கிறார்கள் என்று யாருக்காவது தெரியுமா?

தமிழ் மக்களின் கோபமான மனநிலையைப் பயன்படுத்தி இப்படி வெறும் ஜம்பமான சூளுரைகளே போதும்... அது நடக்குமா என்பதற்கோ அல்லது ஏன் நடக்காமல் போனது என்பதற்கோ எந்த விளக்கமும் சொல்லிக்கொண்டிருக்கத் தேவையில்லை என்பதுதான் நம் புத்திசாலித் தமிழ்ச் சமூகத்தின் விவஸ்தையாக இருக்கிறது.

ஒபாமா வென்றால் சரிவரும், கமரூனால் சரிவரும், மோடி வந்தால் சரிவரும், ஜெனீவா மாநாட்டால் சரிவரும், நவிப்பிள்ளை அம்மாவின் கோவம் சாதிக்கும்... என்று காலத்துக்குக் காலம் சொன்ன எதற்கும் பிறகு என்ன நடந்தது என்று யாரும் கேட்பதுமில்லை, யாரும் சொல்வதுமில்லை.

மீண்டும் அடுத்தடுத்த போலி நம்பிக்கைகளுக்குத் தமிழ் மக்களைத் தாவ வைத்துக்கொண்டேயிருக்கிறார்கள். அவர்களும் இது நடக்குமா நடக்கக்கூடியதுதானா என்றெல்லாம் யோசிக்காமலும் கேள்வி கேட்காமலும் – எதிரிக்கு எப்பவாவது சகுனம் பிழைக்குமென்றால் நல்லதுதானே என்று நினைத்துக் கொண்டு... மூக்குப் போவதைப் பொருட்படுத்தாமல் காத்திருக்கிறார்கள்.

இப்போது தமிழ் மக்களுக்கு உணர்த்தப்படும் நம்பிக்கை பொது எதிரணியின் வெற்றி. இதுவரைக்கும் இவர்கள் மறைமுகமாகவே உணர்த்தி வருவதுபோல் ஒருவேளை அந்த எதிரணியே வென்றாலும், அதன்பிறகு இந்தத் தமிழ்க் கூட்டமைப்புப் பயில்வான்கள் முகத்தைத் திருப்பி இந்த எதிரணிக்கெதிராகவும் குற்றப்பத்திரிகை வாசித்து நிற்பார்கள் என்பது யாவர்க்கும் தெரிந்ததே.

மக்களும், “அவர்களுக்குத்தானே வாக்குப்போட உணர்த்துகிறீர்கள்... சரி, வென்றபிறகு இனப்பிரச்சினைக்கு என்ன செய்வார்கள்?” என்று கேட்கப்போவதில்லை... அந்தக் கோதாரி விழுந்த கதை ஒருபுறம் இருக்கட்டும்.

இந்த ஜனாதிபதித் தேர்தல் வந்து, அனைத்துச் சர்வதேசத்திற்குமான குழப்பம் ஒன்றை உருவாக்கிவிட்டிருப்பதைத் தமிழ் மக்கள் கவனித்திருக்க மாட்டார்கள். அவர்களுக்குத்தான் மகிந்த போய் மைத்திரி வந்தால் போதும் மற்றதெல்லாம் பிறகு தன்னால் நடக்கும் என்ற நப்பாசையை ஊடகங்களும் தமிழ்க் கனவான்களும் ஊட்டிக் கொண்டிருக்கிறார்களே!...

என்ன குழப்பம் என்றால், சிங்கள வாக்குகளைப் பெறும் அத்தடியில், கிட்டத்தட்ட தெற்கிலுள்ள தலைவர்கள் எல்லாருமே “போர்க்குற்றவாளி நானே” என்று உரிமை கோருவதற்கு முந்தியடித்துக் கொண்டிருப்பதுதான்.

எதிரணியின் பொதுவேட்பாளரான மைத்திரிபால சிறிசேன, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வெளிநாடு சென்றிருந்த தருணங்களில் பதில் பாதுகாப்பு அமைச்சராக பணியாற்றியவர். போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டபோது கூட, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வெளிநாட்டில் இருந்தார். இங்கே மைத்திரிபால தான் பதில் பாதுகாப்பு அமைச்சராக இருந்தவர். அவருக்கும் போரில் பங்குண்டு என்று கூட்டங்களில் முரசறைகிறார்கள்.

அதேவேளை, எதிரணியில் இணைந்திருக்கும் ஜாதிக ஹெல உறுமய போர் வெற்றி தன்னுடையது என்கிறது. போரை முடித்துவைக்க நடவடிக்கை எடுக்குமாறு தாமே மகிந்தவுக்கு அழுத்தங்களை கொடுத்ததாக அண்மையில் ஜாதிக ஹெல உறுமய கட்சியின் செயலாளர் சம்பிக்க ரணவக்க உரிமை கோரியிருக்கிறார்.

போரின் இறுதி வெற்றிக்கான அடித்தளம், 2002ஆம் ஆண்டே போடப்பட்டு விட்டது. அதாவது, விடுதலைப் புலிகள் எப்போது, ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்துடன் போர்நிறுத்த உடன்பாட்டை கையெழுத்திட்டனரோ, அப்போதே அவர்களின் வீழ்ச்சி தொடங்கிவிட்டது. அந்தப் பொறியை கச்சிதமாக வைத்தவர் ரணில் விக்கிரமசிங்கவே. போரின் வெற்றிக்கான பெரும்பங்கு தங்களுடையது என்கிறது ஐ.தே.க.

75சதவீத போரினை முடித்திருந்தது தானே. மீதி 25சதவீதம்தான் இப்போதைய அரசாங்கத்தின் பங்கு என்று மேடைக்கு மேடை முழங்கி வருகிறார் சந்திரிகா.

போருக்குத் தலைமை தாங்கி, வியூகங்களை வகுத்து வெற்றியை கையில் பெற்றுக்கொடுத்தது தானே. போர்க்குற்றம் சுமத்தப்பட்டால், தான் மின்சாரக் கதிரையில் அமரத் தயார் என்கிறார் சரத் பொன்சேகா.

இப்படி தெற்கின் தலைவர்கள் எல்லோருமே போர்க்குற்றம் தங்கள் தங்களுடையதே என்று அங்கே அடிபட்டுக்கொண்டிருக்கிறார்கள். இங்கே நமக்கு, போர்க்குற்ற விசாரணையின் மூலம் தீர்வைக் கொண்டுவந்துவிடலாம் என்று “பாப்பா மலர்க் கதைகள்” சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் தமிழர்தம் வங்குரோத்துத் தலைவர்கள்!

- ஆசிரியர்

## தமிழரின் தேசியப்பிரச்சினைக்கு ஜனாதிபதித் தேர்தல் தீர்வு தராது

### கூறுகிறார் சுமந்திரன்

(கொழும்பு)

தமிழ்மக்களின் தேசியப் பிரச்சினைக்கு, வரும் ஜனாதிபதி தேர்தல் தீர்வைத் தரப் போவதில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு கருத்து தெரிவித்துள்ள அவர்,

“தமிழ்மக்களின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வைத் தரக்கூடிய தேர்தலாக இது இருக்காது என்ற ஆலோசனையை நாம் தமிழ்மக்களுக்கு கூற விரும்புகிறோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாரை ஆதரிப்பது என்று இன்னமும் முடிவு செய்யவில்லை. நாம் எமது மக்களுடன் தொடர்ந்து கலந்துரையாடி வருகிறோம். வாக்களிப்பது மிகவும் முக்கியமானது என்ற அறிவுரையை மக்களுக்கு நாம் கூறுகிறோம்.

தமது வாக்குகளை அளிக்கப்போகின்ற எமது மக்களின் ஆலோசனையைப் பெற்றே நாம் முடிவு எடுக்கவுள்ளோம். தேர்தலைப் புறக்கணிக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்துவதாக வதந்திகள் பரப்பப்படுகின்றன. இது முற்றிலும் பொய்யானது.

இன்னமும் நாங்கள் எந்த நிலைப்பாட்டை எடுப்பது என்று முடிவுக்கு வரவில்லை. கட்டாயம் வாக்களிக்குமாறு மக்களைக் கோருவது என்று மட்டும் இப்போது முடிவு செய்துள்ளோம். இதனை மக்களுக்குத் தெளிவாக எடுத்துக் கூறுகிறோம்.

ஒவ்வொரு வாக்கும் முக்கியமானது. வாக்களிக்காமல் விடுவது குறித்தோ, தேர்தலைப் புறக்கணிப்பது குறித்தோ மக்கள் சிந்திக்கக் கூடாது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் நாம் எமது பலத்தை வெளிப்படுத்தியது போலவே, இந்த தேர்தலிலும், வாக்களிப்பதன் மூலம் எமது பலத்தை வெளிப்படுத்த முடியும்.

எல்லாத் தேர்தல்களிலும், குறிப்பாக தேசிய தேர்தல்களில் வாக்களிப்பது ஒரு முக்கியமான கருவி. எமது மக்களுக்கு நாம் கூறும் ஆலோசனை இது ஒன்று தான். எல்லாப் பிரிவுகளுடனான எமது கலந்துரையாடல்களையும் நாம் முடித்து விட்டோம். எமது நிலைப்பாட்டை விரைவில் அறிவிப்போம்.

எமக்குள்ள தெரிவுகள் குறித்து கிராம மட்டத்தில் மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்று அறிந்து கொள்ள நாம் மக்களுடன் கலந்துரையாடியுள்ளோம்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி எம்முடன் பேச வேண்டிய தேவை இல்லை என்று ஏற்கனவே கூறிவிட்டது. அவர்கள் எம்முடன் பேச விரும்பவில்லை.

பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேன, தேர்தலுக்குப் பின்னரே தேசியப் பிரச்சினைக்கான தீர்வு குறித்து கலந்துரையாட முடியும் என்று கூறியுள்ளார்.

இரு பிரதான வேட்பாளர்களுமே, தேசியப் பிரச்சினையை ஒரு தேர்தல் விவகாரமாக கருத்தில் எடுத்துக் கொள்ளத் தயாராக இல்லை. வாக்களிக்க முன்னதாக, மக்கள் இதனைக் கருத்தில் எடுத்துக் கொள்வது முக்கியம்.

நாம் தமிழ் வாக்காளர்களை எமது முடிவுக்கு இழுத்து வரவில்லை. நாம் ஒரு பிரபலமான கட்சி என்ற வகையில், மக்களுடன் கலந்துரையாடியுள்ளோம். இந்தக் கலந்துரையாடல் மக்களுக்கு நம்பிக்கையளிக்கும்.

நாம் உயர்மட்டத்தில் இருந்து முடிவுகளை எடுக்கவில்லை. எமது முடிவை எடுப்பதற்கு முன்னர், அவர்களின் கருத்துகளை அறிந்து செயற்படுகிறோம்” என்றும் அவர் கூறியுள்ளார்.

## 18 ஆவது திருத்தச்சட்டத்தை இரத்துச் செய்ய வாக்களியுங்கள்

### பல்கலை பேராசிரியர்கள் கோரிக்கை

(கொழும்பு)

18 ஆவது திருத்தச் சட்டத்தை இரத்துச்செய்ய வாக்களிக்கப்பட வேண்டுமென பல்கலைக்கழக பேராசிரியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள விசேட ஊடக அறிக்கையில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எதிர்கால சந்ததியினரைக் கருத்திற் கொண்டு எதிர்வரும் ஜனாதிபதித்தேர்தலில் மக்கள் தீர்மானம் எடுக்க வேண்டும்.

18 ஆவது திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்யும் ஓர் வேட்பாளருக்கே ஆதரவளிக்கப்பட வேண்டும்.

எதிர்பார்க்கும் அனைத்து மாற்றங்களையும் ஓரே இரவில் அல்லது ஓர் அரசாங்கத்திடமிருந்து பெற்றுக் கொள்ள முடியும் என எதிர்பார்க்கவில்லை.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் நல்லாட்சி மற்றும் ஜனநாயகம் தொடர்பில் கூடுதல் முக்கியத்துவம் உடைய தேர்தலாக கருதப்படுகின்றது.

கடந்த ஒரு தசாப்த காலமாக நாட்டில் நல்லாட்சி மற்றும்ஜனநாயக நெறிமுறைகள் வீழ்ச்சியடைந்துள்ளன.

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் அரசியலமைப்பு திருத்தங்கள் தொடர்பில் ஆராயப்பட உள்ளதாக பல்கலைக்கழக பேராசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

நாட்டின் பல பாகங்களிலும் காணப்படும் பல்கலைக்கழகங்களின் பேராசிரியர்கள் பலர் இந்த ஊடக அறிக்கையில் கையொப்பமிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வயதான கோழிபோல் கொக்கரிக்கும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா

### இப்படிக் கூறுகிறது தேசிய சுதந்திர முன்னணி

(கொழும்பு)

தனது இரண்டு பதவிக் காலத்திலும் பாரிய பிரச்சினைகள் எதற்கும் தீர்வு காண முடியாத முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க. தற்போது வயதான கோழி போல் கொக்கரிப்பாதாக தேசிய சுதந்திர முன்னணி குறிப்பிட்டுள்ளது.

மேலும் வயதான கோழி எப்படி கொக்கரித்தாலும் முட்டை கிடைக்காது என்பது நாட்டின் புத்தியுள்ள மக்களுக்குத் தெரியும் எனவும் அந்தக் கட்சி கூறியுள்ளது.

தேசிய சுதந்திர முன்னணியின் மத்திய மாகாண சபை உறுப்பினர் நிமல் பியதிஸ்ஸ இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பிரதி அமைச்சர்களாக இருந்த இராதாகிருஸ்ணன் மற்றும் திகாம்பரம் ஆகியோர் மைத்திரிபால சிறிசேனவிற்கு ஆதரவு தெரிவிப்பதாக கூறியதை சுட்டிக்காட்டிய நிமல் பியதிஸ்ஸ தோட்டத் தொழிலாளர்களின் வீட்டுப் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்காமை காரணமாகவே கட்சியில் இருந்து விலகியதாக கூறியது புச்சைப் பொய் எனவும் குறிப்பிட்டார்.

தோட்டத் தொழிலாளர்களின் வீட்டுப் பிரச்சினைக்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டினர்.

அத்துடன் இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் தோட்டத் தொழிலாளர்களுக்கு 50,000 வீடுகள் கட்டிக்கொடுக்க முன்மொழியப்பட்டமையையும் அவர் குறிப்பிட்டார்.

அவர்கள் கட்சியூடாக அயல் நாடுகளுக்கு உளவு பார்க்கும் பணிக்காகவே மைத்திரிபாலவுக்கு ஆதரவு வழங்கியதாகவும் நிமல் பியதிஸ்ஸ மேலும் தெரிவித்தார்.

# இரத்ததான நிகழ்வு



(யாழ்ப்பாணம்)

வல்வை பொலிஸ் நிலையத்தின் TVS Lanka (PVL) Ltd ஏற்பாட்டுடன் நேற்று முன்தினம் காலை 9 மணிக்கு ஆரம்பமாகிய இரத்ததானம் 10.30 மணி வரை நடைபெற்றது.

இரத்ததான முகாமில் பொலிஸார் உட்பட பொதுமக்கள் பலரும் கலந்து தமது குருதியினை நன்கொடையாக வழங்கியிருந்தனர்.

வல்வெட்டித்துறையில் இதுபோன்ற இரத்ததான முகாம்கள் பல்வேறு தரப்புக்களின் ஏற்பாட்டில் குறித்த கால இடைவெளியில் நடாத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சட்டவிரோதமான முறையில் மின்சாரம் வழங்கியது கிளிநொச்சி மின்சாரசபை

## குற்றம்சாட்டுகின்றார் கடை உரிமையாளர்


(முழங்காவில்)

முழங்காவில் பகுதியில் தற்காலிகமாக மின் இணைப்பு துண்டிக்கப்பட்ட வியாபார நிலையமொன்றில் சட்ட விரோதமான முறையில் புதிதாக பிரதான மின்சாரப் பெட்டி பூட்டப்பட்டு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கு கிளிநொச்சி பகுதி மின்சார சபை அதிகாரிகள் உடந்தையாக செயற்பட்டுள்ளதாக கடை உரிமையாளர் குற்றம் சாட்டியுள்ளார்.

ஒரு வியாபார நிலையத்துக்கு இரண்டு மின்சாரப் பெட்டிகள் இருக்க முடியுமா எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

முழங்காவில் பகுதியிலுள்ள வியாபார நிலையம் ஒன்றில் வாடகைக்கு வியாபாரத்தை மேற்கொள்ளும் ஒருவர் வியாபார நிலையத்துக்கான ஒப்பந்தத்தை புதுப்பித்துக் கொள்ளாததாலும், வாடகையை ஒழுங்கான முறையில் செலுத்தாமையாலும் கடை உரிமையாளர் மின்சார நிலையததிறகு தெரிவித்த நிலையில் நிலையத்தின் பிரதான மின் இணைப்புக் பெட்டியின் இணைப்பு துண்டிக்கப்பட்டிருந்தது.




ஆனால் குத்தகைக்கு வியாபார நிலையத்தை நடாத்துபவர் சட்டவிரோதமான முறையில் தனியாக மின் இணைப்பை பெற்றுள்ளதாக குற்றம் சாட்டும் வியாபார நிலையத்தின் உரிமையாளர் இச் சம்பவத்துக்கு மின்சார சபையும் உடந்தையாக செயற்பட்டமை மிகவும் வேதனையளிப்பதாக தெரிவித்துள்ளார்.

முன்னர் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மின் இணைப்பு பெட்டி அவ்வாறே இருக்க அருகில் புதிதாக இணைப்புக்கள் வழங்கப்பட்டிருப்பது சட்ட விரோதமான செயலாகும். அதுமட்டுமன்றி இவ்வாறு சட்டவிரோதமாக வழங்கப்பட்டுள்ள மின் இணைப்பு குத்தகைக்கு வியாபார நிலையத்தை நடாத்துபவரின் பெயரில் வழங்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஒரு வியாபார நிலையத்துக்கு எவ்வாறு இரண்டு பிரதான மின்சாரப் பெட்டிகள் இருக்க முடியுமென உரிமையாளர் மின்சார சபையிடம் கேள்வி எழுப்பியுள்ளார். (36)

# வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வீடா, பாடசாலையா பட்டிமன்ற நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.சுன்னாகம் பொதுநூலகத்தின் ஏற்பாட்டில் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பட்டிமன்ற நிகழ்வு அண்மையில் சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி நூலக மண்டபத்தில் இடம்பெற்றது.

இன்றைய மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தைப் பெரிதும் தூண்டுவது வீடா? பாடசாலையா? எனும் தலைப்பில் இடம்பெற்ற பட்டிமன்ற நிகழ்வில் உரும்பிராய் சந்திரோதய வித்தியாலய அதிபர் கவிமணி ஆனந்தராஜா நடுவராக கலந்து கொண்டார்.



'வீடே' எனும் தலைப்பில் ஈவினை அ.த.க. பாடசாலை அதிபர் செ.பரமேஸ்வரன், சமயச் சொற்பொழிவாளர் த.மனோஜ்குமார், தெல்லிப்பளை யூனியன் கல்லூரி ஆசிரியர் த.சிறிபிரகாஸ் ஆகியோர் வாதிட்டனர்.

'பாடசாலையே' எனும் தலைப்பில் உடுவில் மான்ஸ் தமிழ்க்கலவன் பாடசாலையின் அதிபர் இரா.ஜெயக்குமார், அளவெட்டி தெற்கு அமெரிக்க மிஷன் அ.த.க.பாடசாலை அதிபர் த.வாமதேவன், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர் ப.ஆன்சலோ பெஜின் ஆகியோரும் வாதிட்டனர்.

சிந்தைக்கு விருந்தாக அமைந்த இந்தப் பட்டிமன்ற நிகழ்வில் இன்றைய மாணவர்களின் வாசிப்பைப் பெரிதும் தூண்டுவது வீடே? என முடிவு அறிவிக்கப்பட்டது. (48)

# நோயாளர்களுக்கு நிதி

(யாழ்ப்பாணம்)

கைதடி மக்கள் நலன்பேணும்நட்புறவுக் கழகத்தின் டென்மார்க் கிளையின் நிதி அன்பளிப்பின் மூலம் வறிய நிலையிலுள்ள 4 நோயாளர்களுக்கு தலா 25,000 ரூபா நிதி நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு வழங்கப்பட்டது.

கைதடி வடக்கு செல்வா சனசமூக நிலையத்தின் கேட்போர் கூடத்தில் கழகத்தின் உப தலைவர் வீ.சின்னத்தம்பி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சிறுநீரகம் பாதிக்கப்பட்ட 2 பேருக்கும், இருதய நோயாளிகள் 2 பேருக்குமே தலா 25,000 ரூபா வீதம் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் மூத்த உறுப்பினரும், ஓய்வுநிலை அதிபருமாகிய லயன் ப.செல்லத்துரை, மக்கள் வங்கியின் பரந்தன் கிளை முகாமையாளர் க.சிறிதரன், கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (90)

# ஆறுமுக நாவலர் சிலை நிறுவப்பட்டது வட்டக்கச்சியில்

(யாழ்.நிருபர்)

வட்டக்கச்சி கந்தசுவாமி கோவிலில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரது சிலை நிறுவும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. கொழும்பு றோயல் கல்லூரியின் முன்னாள் பிரதி அதிபர் நா.கணபதிப்பிள்ளையின் ஏற்பாட்டில் கொழும்பு நாவலர் நற்பணி மன்றத்தினால் நாவலர்சிலை நிறுவப்பட்டுள்ளது.

சி.புவனேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நாவலர் நற்பணி மன்றத்தலைவர் கருணையானந்தன் கொழும்பு றோயல் கல்லூரி முன்னாள் பிரதி அதிபர் நா.கணபதிப்பிள்ளை ஆகியோர் இணைந்து நாவலர் சிலையை ஆலயத்தில் நிலை நிறுத்தினர்.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் இந்து கலாசார திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சி.கிருஷ்ணகுமார், கரைச்சி பிரதேச செயலகத்தைச்சேர்ந்த சி.ஜெயமதி ஆகியோர்ரும் கலந்து கொண்டனர். (10)

# முரசின் இன்றைய பலன்

(16.12.2014 செவ்வாய்க்கிழமை)

ஜய வருஷம் கார்த்திகை மாதம் 01 ஆம் திகதி.
வாக்கிய பஞ்சாங்கப்படி 16.12.2014 இல் சனீஸ்வர மாற்றம்
நவமி / சித்தம். அத்த நட்சத்திரம் மாலை. 06.29 வரை. பின் சித்தம்.
இராகு காலம் 03.22 - 04.52 வரை. சுபநேரம் 10.52 - 12.22 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**
தற்காலிக பாதுகாப்பு விசா கிட்டவாய்ப்பு, சுபகாரியம் நிகழும்.

**ரிஷபம்**
வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், கலகலப்பான தகவல் வந்து சேரலாம்.

**மிதுனம்**
தற்காலிக பதவி நிரந்தரமாக்கப்படல், உறவினர்களின் வருகையால் உள்ளம் மகிழ்தல்.

**கடகம்**
எடுத்த காரியங்களில் சில தடங்கல்களை எதிர்பாருங்கள், சிக்கனமும் செலவும் தக்க வைக்கும்.

**சிம்மம்**
தொலைபேசி வழித்தகவல்கள் நன்மையளிக்கும், சுபகாரியப் பேச்சில் முன்னேற்றம் ஏற்படும்.

**கன்னி**
ஆரோக்கியத்தில் கவனமெடுப்பது நன்மை விளைவிக்கும், பெரிய மனிதர்களின் சந்திப்பு நிகழும்.

**துலாம்**
மாற்றங்களினால் ஏற்றம் பெறவைக்கும் நிகழ்ச்சி உருவாகும், தொழில் நலன் கருதி முக்கிய முடிவினை ஏற்படுத்தல்.

**விருச்சிகம்**
காலையில் தடங்கிய காரியங்கள் நண்பகலின் பின் சித்தி தரும், போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர்.

**தனுசு**
புதியன கொள்வனவு செய்ய பணவரவு கிட்டும், பகையாளி நட்புக்கு கரம் நீட்டுங்கள்.

**மகரம்**
திருமணம் பற்றிய இனிய செய்தி வந்தடையும், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள்.

**கும்பம்**
புத்திர பாக்கியம் கிட்டும், மாமன்மாருடன் சுமுகமான உறவினைப் பேணவும்.

**மீனம்**
வேலைத்தளத்தில் சக ஊழியர்களின மன அழுத்தம்நீங்கும், நிகழ்வுகளில் கலந்து சிறப்பிக்க அழைப்புக்கள் வருதல்.

# அமைச்சர் எஸ்.பி.யின் கருத்திற்கு முஸ்லிம் காங்கிரஸ் கண்டனம்



சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை ஆதரிக்க முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியிட்ட அமைச்சர் எஸ்.பி.திசநாயக்கவுக்கு, முஸ்லிம் காங்கிரஸ் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

நாவலப்பிட்டியில் நேற்றுமுன்தினம் நடாந்த கூட்டம் ஒன்றில் உரையாற்றிய அமைச்சர் எஸ்.பி.திசநாயக்க, ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை ஆதரிக்க முஸ்லிம் காங்கிரஸ் முடிவு செய்திருப்பதாக கூறியிருந்தார்.

அமைச்சர் எஸ்.பி.திசநாயக்கவின் இந்தக் கூற்றை நிராகரித்துள்ள சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் ஊடகப் பேச்சாளர், நிசாம் காரியப்பர், தமது கட்சி இன்னமும் எந்த முடிவையும் எடுக்கவில்லை என்று கூறியுள்ளார்.

முஸ்லிம் காங்கிரசின் உயர்நிலைக் கூட்டம் கடந்த சனிக்கிழமை நடத்த திட்டமிட்ட போதும், அது நடைபெறவில்லை. அந்தக் கூட்டம் எப்போது என்பது தொடர்பாக இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை. என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஐ.நா. விசாரணைமூலம் நீதி கிடைக்கமாட்டாது

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு



இலங்கை தொடர்பாக மேற்கொள்ளப்படும் ஐ.நா.தலைமையிலான அனைத்துலக விசாரணை நீதியானதாக அமையாது என வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.ஐ.நா.மனித உரிமை ஆணையாளர் பணியகத்தினால் மேற்கொள்ளப்படும் விசாரணைகள் தொடர்பாகவே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது முறையானதொரு விசாரணையல்ல என்பது எமக்குத் தெரியும்.

இந்த விசாரணை அரசியல் ரீதியானது பக்கச்சார்பானது.

விசாரணைகள் முடிவுக்கு வர முன்னதாகவே,விசாரணையின் முடிவு தீர்மானிக்கப்பட்டு விட்டது. இது தான் இந்த விசாரணையின் நிலை.

இந்த அனைத்துலக விசாரணை நீதியை வழங்குவதாக அமையாது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் தமிழர்களை குழப்ப சூழ்ச்சி

## சம்பிக்க குற்றச்சாட்டு



ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான தமிழ் சமூகத்தின் மனோநிலையை மாற்றும் முயற்சியில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சக்திகள் ஈடுபட்டுள்ளதாக குற்றம்சாட்டியுள்ளார் ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச்செயலர் சம்பிக்க ரணவக்க.

2005ஆம் ஆண்டு தேர்தலைப் புறக்கணித்தது போன்ற ஒரு முடிவுக்குள் தமிழர்களைத் தள்ளிவிட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சக்திகளால் ஒரு சூழ்ச்சித் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

இந்த தேர்தல் தமிழர்களுடன் தொடர்புடையது அல்ல என்றும், இந்த தேர்தல் மூலம், தமிழர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வு வரப்போவதில்லை என்றும், அவர்களால் பரப்புரைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இது தவறான கருத்து. இந்த தேர்தல் நாட்டில் உள்ள ஒவ்வொருவருடனும் தொடர்புடையது.

இந்த தேர்தல் எல்லோருக்கும் அரசியல் மற்றும் சமூக ரீதியான மாற்றங்களை ஏற்படுத்தக் கூடியது. என்றும் அவர் தெரிவிதுள்ளார்.

# சிறைச்சாலை கைதிகளும் தேர்தல் பிரசார பணியில்

## என்கிறது பவ்ரல்

PAFFREL

தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக சிறைச்சாலை கைதிகள் ஈடுபடுத்தப்படுவதாக தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாக பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப்பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி இதனைத் தெரிவித்துள்ளார்.

அக்குரஸ்சயில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பிரசார கூட்டத்திற்கான மேடை அமைப்பு மற்றும் ஏனைய பணிகளுக்கு சிறைச்சாலை கைதிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், இது தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மைத்திரிக்கு ஆதரவு தெரிவித்து ஹெலஉறுமய 1000 கூட்டங்கள்

Jathika Hela Urumaya National Heritage Party


(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் பொது எதிரணியின் வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு திரட்டுவதற்காக ஜாதிக ஹெல உறுமய கட்சி ஆயிரம் கூட்டங்களை நடாத்த முடிவு செய்துள்ளதாக அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கிராம, நகர, பிரதேச மாவட்ட மட்டங்களில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டங்களில் பெருமளவு இளைஞர், யுவதிகளைக் கலந்துகொள்ள வைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனவும் அக்கூட்டங்களில் தற்போதைய அரசின் கண்மூடித்தனமான போக்கும். எதிர்காலத்தில் பொதுவேட்பாளர் முன்னெடுக்கவுள்ள திட்டங்கள் பற்றியும் விரிவாக விளக்கப்படும் எனவும் ஹெல உறுமய கட்சியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

# தீவிரவாதிகள் அரசியலில் உள்ளபோது படையினர் ஈடுபட்டால் குற்றமா?

## கேட்கிறார் கோத்தாபய



தீவிரவாதிகள் அரசியலில் ஈடுபடும் போது, அரச படையினர் அரசியலில் ஈடுபட்டால் என்ன என கேள்வி எழுப்பியுள்ளார். பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ச.

ஓய்வுபெற்ற படையினரையும், சேவையில் உள்ள படையினரையும், ஜனாதிபதிக்கு ஆதரவு திரட்டும் பணியில், அரசாங்கம், ஈடுபடுத்தியுள்ளதாக, எதிர்க் கட்சிகள் சுமத்தி வரும் குற்றச்சாட்டு தொடர்பாகவே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு ஆதரவாக தேர்தல் பரப்புரைக்கு ஓய்வுபெற்ற படையினரை ஈடுபடுத்துவதாக என்மீது குற்றம்சாட்டுபவர்கள் ஒன்றை மறந்து விட்டனர்.

சரத் பொன்சேகா கூட்டுப் படைகளின் தளபதியாக இருந்து கொண்டு தான் அரசியலில் பிரவேசித்தார்.அப்போது அவர் ஜெனரல் தரத்தில் இருந்தார்.

2010ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் தாம் போட்டியிடப் போவதாக அறிவித்த பின்னர் தான், சரத் பொன்சேகாவின் பதவி விலகலை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டார்.

2009 ஒக்ரோபர், நவம்பரில் அமெரிக்காவின் உள்நாட்டு பாதுகாப்புத் திணைக்களம் நேர்காணலுக்கு அழைத்தமை தொடர்பாக, அமெரிக்காவில் இருந்து சரத் பொன்சேகா தம்முடன் கலந்துரையாடினார் என்பதை ஜே.வி.பி. வெளிப்படுத்தியுள்ளது.

இந்த தேர்தலில் பெரும்பாலான படையினர் அரசாங்கத்தையே ஆதரிப்பர்.

போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கு சிறந்த அரசியல் தலைமையை வழங்கிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை குற்றச்சாட்டுகள் மூலம் வீழ்த்தி விட முடியாது.

ஓய்வுபெற்ற படையினர் அரசியலில் ஈடுபடுவதற்கோ, தேர்தலில் போட்டியிடுவதற்கோ, எந்தக் கட்சிக்கும் ஆதரவு தெரிவிப்பதற்கோ, எந்தத்தடையும் இல்லை. அது அவரவர் விருப்பம்.

ஜனநாயக கட்சியின் தலைவர் சரத் பொன்சேகாவை விட, மேலும் பல ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகள் அரசியலில் ஈடுபட்டுள்ளனர்.பல்வேறு அரசியல் கட்சிகளிலும் அவர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

ஓய்வுபெற்ற படை அதிகாரிகள் ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சிக்கு ஆதரவு தெரிவிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிப்போர், 1989ஆம் ஆண்டு காலப்பகுதியில் விடுதலைப் புலிகள் அரசியல் கட்சியாக அங்கீகரிக்கப்பட்டதை மறந்து விட்டனர்.

1980களின் பிற்பகுதியில் விடுதலைப் புலிகள் தவிர ஏனைய எல்லா தீவிரவாத அமைப்புகளும் அரசியல் கட்சியாக பதிவு செய்து கொண்டு தேர்தலில் போட்டியிட்டன. என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# நாளாந்தம் அதிகரிக்கும் தேர்தல்கால வன்முறை

ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய வன்முறைச் சம்பவங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தேர்தல் கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய வன்முறைச் சம்பவங்கள் குறித்து இதுவரை 178 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

இதில் 50 முறைப்பாடுகள் துப்பாக்கிகள் பயன்படுத்தப்பட்ட வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையவை என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி குறிப்பிட்டார்.

இதேவேளை, தேர்தல் சட்டமீறல்கள் குறித்து இதுவரை 139 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக கபே அமைப்பின் நிறைவேற்றுப்பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் குறிப்பிட்டார்.

அத்துடன் தேசிய தேர்தல் கண்காணிப்பு மத்திய நிலையத்திற்கு இதுவரை ஒன்பது முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக நிலையத்தின் தேசிய அமைப்பாளர் ரசாங்க ஹரிஸ்சந்திர தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட நாளில் இருந்து நேற்றுமுன்தினம் வரை 32 வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய 115 முறைப்பாடுகள் தேர்தல்கள் செயலகத்திற்கு கிடைத்துள்ளன.

இதில் 20முறைப்பாடுகள் பாரதூரமான சம்பவங்கள் தொடர்பில் பதிவாகியுள்ளதாக தேர்தல்கள் செயலகத்தின் முறைப்பாடு ஏற்றுக்கொள்ளும் பிரிவு தெரிவித்துள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் இருந்து 16 முறைப்பாடுகளும்,கண்டி மாவட்டத்தில் இருந்து 10 முறைப்பாடுகளும், அநுராதபுரம் மாவட்டத்தில் இருந்து 8 முறைப்பாடுகளும் இதுவரை பதிவாகியுள்ளன.

அரச சொத்துக்கள் தவறான முறையில் பயன்படுத்தப்பட்டமை, அரச அதிகாரிகளுக்கு முறையற்ற விதத்தில் இடமாற்றம் மற்றும் பதவி உயர்வு வழங்கப்பட்டமை என்பன தொடர்பிலும் 55 முறைபாடுகள் கிடைத்துள்ளதாக தேர்தல்கள் செயலகம குறிப்பிட்டுள்ளது.

# 104 பேருக்கு அனுமதி

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் 104 வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் மட்டும் தேர்தல் கடமையில் ஈடுபடுத்தப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. தேர்தல்கள் திணைக்களம் மற்றும் பவ்ரல் கண்காணிப்பு குழு ஆகியன சார்பிலேயே வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் அழைக்கப்படவுள்ளனர். தெற்காசிய தேர்தல்கள் கண்காணிப்பு கூட்டமைப்பு, தெற்காசிய தேர்தல் கண்காணிப்புகள் சபை, பொதுநலவாய நாடுகள் தேர்தல்கள்கண்காணிப்பு அமைப்பு, ஆசிய தேர்தல்கள்கண்காணிப்பு வலையமைப்பு ஆகிய நிறுவனங்களின் பிரதிநிதிகள் இலங்கை வரவுள்ளனர்.

# பிரதேசமட்ட கழகங்கள், அமைப்புக்கள் மக்கள் நலனிலும் பங்காற்ற வேண்டும்

## - வடமாகாண சமூகசேவைகள் திணைக்கள பணிப்பாளர் தெரிவிப்பு -

(கிளிநொச்சி)

பிரதேச மட்டத்திலுள்ள கழகங்கள் அமைப்புக்கள் அப்பிரதேசத்தில் வறுமை நிலையிலுள்ள மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதில் காத்திரமான பங்களிப்பினை வழங்கவேண்டும். அந்தவகையில் கைதடி மக்கள் நலன் பேணும் நட்புறவுக் கழகத்தின் செயற்பாடுகள் ஏனையவர்களுக்கு முன்னுதாரணமாக திகழ்கிறது என வடமாகாண சமூகசேவைகள் திணைக்களப்பணிப்பாளர் திருமதி நளாயினி இன்பராஜ் தெரிவித்தார்.

கைதடி மக்கள் நலன்பேணும் நட்புறவுக்கழகத்தின் முதியோர் கௌரவிப்பு விழா அண்மையில் கைதடி வடக்கு கயிற்றசிட்டி முருகன்கோவில் மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவிக்கையில்,

கைதடி பிரதேசத்தில் எமது வடக்கு மாகாணத்தின் சமூக சேவைகள் திணைக்களத்தின் தலைமை அலுவலகம் அமைந்துள்ளது. இதனால் இந்தப் பிரதேசத்தினை பற்றி அறிய முடிகிறது. சில மாதங்களுக்கு முன்பாக கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தில் நடைபெற்ற ஆண்டு விழாவிலும் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டேன். அப்போது அந்த சனசமூக நிலையமும் வறிய நிலையிலுள்ள அங்கத்தவர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தல், வறியோருக்கு இலவச மூக்குக் கண்ணாடிகளை வழங்குதல், பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு கல்வி உதவி வழங்குதல் போன்ற செயற்பாடுகளை மேற்கொண்டதனைக் கண்டேன்.

இன்றும் முழுக் கைதடி கிராமமும் ஒற்றுமையாக ஓரணியில் நின்று சமூக சேவைப் பணிகளை ஆற்றுவதனைக் காணுகிறேன்.

கைதடி மக்கள் நலன் பேணும் நட்புறவுக் கழகத்தின் செயற்பாடுகள் ஏனைய ஊரவர்களுக்கு முன்மாதிரியாக கூறக் கூடியது.

புலம்பெயர் நாடுகளில் உள்ள கைதடியினைச் சேர்ந்த உறவுகளின் முன்மாதிரியான செயற்பாடுகள் பாராட்டுதற்குரியவை.

வடமாகாணத்தில் கைதடி கிராமம் ஒரு முன்மாதிரியான கிராமமாக உள்ளது. இன்றைய பணியில் மூத்தோர் தலைமை தாங்குவதனையும் இளையோர் அவர்களுடன் கரம் கோர்த்து நிற்பதனையும் காணுகிறேன்.

மூத்தோருக்கு அடுத்ததாக இளையோர்கள் எதிர்காலத்தில் இந்த நன்மைக் காரியம் தொடர கைகொடுக்கப் போவதனை இது காட்டுகின்றது. இது மிக முக்கியமான ஒரு விடயம். மூத்தோர், இளையோர் நடுத்தர வயதினர் என யாவரும் இணைந்து நிற்பது காலம் காலமாக சமூக சேவை விடயங்கள் தொடரப் போவதனைக் காணும் போது மனமகிழ்வைத் தருகிறது என்றார். (90)

## சமுர்த்திச் சங்கம் இடமாற்றம்

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் இயங்கி வந்த வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படைச் சங்க (சமுர்த்திச் சங்கம்) அலுவலகம் இடமாற்றப்பட்டுள்ளது.

நுணாவில் மத்தி வைரவர் கோவிலுக்கு அருகிலுள்ள தனியார் கட்டடத்தில் தற்போது இயங்கி வருவதாக சங்கத் தலைமைக் காரியாலய முகாமையாளர் அறிவித்துள்ளார்.

## திருவாசக முற்றோதல்

வேம்பிராய், மீசாலை வடக்கு தமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞானக்கோட்டை திருவருட்பாவோதலும் திருவாசக முற்றோதலும் கடந்த முதலாம் திகதி முதல் ஆரம்பமாகி 31 ஆம் திகதி வரை ஞானக்கோட்ட வழிபாட்டு மண்டபத்தில் நடைபெற்று வருகிறது.

உலக அமைதி வேண்டி நடாத்தப்படும் இந்நிகழ்வில் அனைவரையும கலந்து சிறப்பிக்குமாறு ஞானக்கோட்டத்தினர் வேண்டியுள்ளனர். (11)

## விவசாயிகளுக்கான காப்புறுதி வழங்குமாறு கோரிக்கை

வலி.தென்மேற்கு பிரதேசசெயலர் பிரிவிற்குட்பட்ட நவாலி வடக்கு - நவாலி தெற்கு பிரதேச விவசாயிகளுக்கு 2013 ஆம் ஆண்டுக்கான காப்புறுதி நிதி இன்னும் கிடைக்கவில்லை.

கடந்த மூன்று வாரங்களுக்கு முன்னர் சகல காப்புறுதி நிதி செலுத்திய விவசாயிகளுக்கும் காப்புறுதி கொடுப்பனவு வழங்கப்படும் என கமநலபிரதி ஆணையாளர்களினால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இன்னும் இந்த 2014 ஆம் ஆண்டு நிறைவடைய 15 நாட்களே உள்ளன. கூடிய விரைவில் 2013 இல் வறட்சியால் பேரழிவினை சந்தித்த நவாலி விவசாயிகளுக்கு காப்புறுதி நிதியை வழங்கி உதவவேண்டும் என முன்னாள் நவாலி விவசாய சம்மேளன செயலாளர் கோரிக்கை விடுத்துள்ளார். (92)

## வல்வை மாலுமிகள் நலன்புரிசங்கத்தின் பொதுக்கூட்டமும், கலந்துரையாடலும்

வல்வை மாலுமிகள் நலன் புரிச் சங்கத்தின் (Valvai seaman welfare association - vaiswas) 4 ஆவது வருட பொதுக்கூட்டமும் கலந்துரையாடலும் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

வைஸ்வாவின் உபதலைவர் சிவானந்தம் தலைமையில் பிற்பகல் 4 மணியளவில் வல்வை மத்திய நவீன சந்தை (பழைய) மேல்மாடியில் ஆரம்பித்திருந்த இந்த நிகழ்வில் அரச உத்தியோகத்தர்கள், மாலுமிகள் தற்போதைய அங்கத்தவர்கள் மற்றும் நலன் விரும்பிகள் சிலரும் கலந்து கொண்டிருந்தனர்

நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்ட குருநாகர் கடற்றொழில் மற்றும் கடலோட்டு இயந்திரவியல் கல்லூரியின் உதவிப்பணிப்பாளர் எம்கே.அனந்தகுமார், கரவெட்டி பிரதேசசபையின் அபிவிருத்தி அதிகாரி ஏ.சூரியகுமார் ஆகியோரினால் நவீன மீன்பிடித்துறையினையும், கப்பற்றொழிலையும் உள்ளடங்கிய பல விடயங்கள் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டிருந்தன.

இதனைத் தொடர்ந்து 17 பேர்கொண்ட புதிய உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

## திண்மக்கழிவுகள் கொட்டி எரிப்பதை கைவிட்டு பயன்தரு மரங்களை நாட்ட முன்வரவேண்டும்

### - ஹேமலதா சனசமூக நிலையம் வேண்டுகோள் -

(யாழ்ப்பாணம்)

காக்கைதீவு பிரதேசத்தில் குப்பைகள் திண்மக்கழிவுகள் கொட்டி எரிக்கும் விடயத்தை உடன் கை விட்டு அங்கு பயன் தருமரங்களை நாட்டி புனித பிரதேசமாக மாற்றுங்கள்.

இல்லாவிடில் நவாலி, ஆனைகோட்டை மக்கள் குடிபெயர வேண்டிய நிலையேற்படும் என நவாலி ஹேமலதா ஞாபகார்த்த சனசமூக நிலையம் வேண்டுகோளை விடுத்துள்ளது.

கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக காக்கைதீவு திண்மக்கழிவுகளின் மையமாக மாறிவிட்டது.

கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்னர் முன்னாள் அரசாங்க அதிபர். க.கணேஷ் மாவட்ட செயலக மட்டத்தில் "டிலெக்" (DELEC) கூட்டத்தில் எடுத்த தீர்மானத்தைத் தொடர்ந்து காக்கைதீவு பிரதேசத்தில் கழிவுகள் கொட்டப்படுவதை உடன் நிறுத்துவது என தீர்மானித்து கோரிக்கை விடுத்த நிறுவனங்களுக்கும் அரச அதிபரால் அறிவிக்கப்பட்டு திட்டம் நிறத்தப்பட்டு கழிவுகள வேறொரு இடத்தில் கொட்டப்பட்டன.

இதன்பின்னர் தற்போது சூழல் பாதிப்படையும் அளவிற்கும் புற்றுநோய், சுவாசநோய் ஏற்படும் அளவிற்கும் இன்று காக்கைதீவு மாறிவிட்டது.

பலதடவைகள், யாழ்.அரச அதிபருக்கும், உள்ளூராட்சி மன்ற ஆணையாளர், செயலாளர்களுக்கும் இவ்விடயம் தொடர்பில் தெளிவுபடுத்தியுள்ளோம்.

யாழ் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் சங்கரப்பிள்ளை ரவியின் கவனத்திற்கும் விசேடமாக கொண்டு வந்துள்ளோம்.

திண்மக்கழிவுகள் கொட்டப்படுவதால் நிலத்தடி நீர் மாசடைவதுடன் திண்மக்கழிவுகள் எரிக்கப்படுவதனால் ஏற்படும் புகைமூட்டத்தால் புற்றுநோய், சுவாச நோய்கள் ஏற்படுகின்றது.

எனவே இன்னும் சில காலங்களில் இங்கு ஏற்படப்போகும் பாதிப்புக்களை பலரும் கண்ணூடாக பார்க்கப் போகின்றீர்கள்.

எனவே, சம்பந்தப்பட்ட அனைத்து நிறுவனங்களும் குறிப்பாக உள்ளூராட்சி சபை, சண்டிலிப்பாய், சங்கானை, வைத்திய அதிகாரிகள், பொது சுகாதார, பரிசோதகர்கள் கூடுதல் கவனம் எடுத்தால் மட்டுமே, பாரிய அழிவில் இருந்து மக்களை காப்பாற்றலாம் என சனசமூக நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, விரைவில் நடைபெறவுள்ள மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் இதற்கு பொருத்தமான தீர்வை நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்னெடுக்க வேண்டும் எனவும், இது மனிதன் உயிர்வாழும் பிரச்சினையோடு சம்பந்தப்பட்டது எனவும் தெரிவித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (92)

## சிரமதானம்

பூநகரி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட நாச்சிக்குடா முழங்காவில், வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக அண்மையில் சிரமதானம் மூலம் துப்புரவுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன

இச் சிரமதானப் பணிகளை முழங்காவில் இராணுவத்தினரும், பொலிஸாரும் இணைந்து மேற்கொண்டதுடன் இச் சிரமதான பணி மூலம் வர்த்தக நிலையப்பகுதியும் துப்புரவாக்கப்பட்டது. (36)



யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் முன்னெடுத்த நாவலர் விழா நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடைபெற்ற போது கவிதைப்போட்டியில் வெற்றி பெற்ற மாணவி ஒருவருக்கு விருந்தினர் பரிசில் வழங்குவதையும் கரிகணன் நிறுவனத்தின் தலைவர் கௌரவிக்கப்படுவதையும் பட்டிமண்டப நிகழ்வினையும் காணலாம். (63)

# சுஜனின் அதிரடி அரைச்சதம்
# வென்றது கொக்குவில் காமாட்சி

(யாழ்ப்பாணம்)

**கொக்குவில் காமாட்சி விளையாட்டுக் கழகத்திற்கும் கொழும்பு ஆனந்தா கிரிக்கெட் கழகத்திற்குமிடையிலான கிரிக்கெட் போட்டியில் சுஜனின் அதிரடி அரைச்சதம் கைகொடுக்க கொக்குவில் காமாட்சி விளையாட்டுக் கழகம் அபாரமாக வெற்றியீட்டியது.**



இப் போட்டி கடந்தவாரம் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

35 ஓவர்கள் கொண்ட போட்டியாகவே இப் போட்டி இடம் பெற்றது. போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற கொழும்பு ஆனந்தா கழகம் முதலில் துடுப்பாடியது.

இதன்படி கொழும்பு ஆனந்தா கிரிக்கட் கழகம் நிர்ணயிக்கப்பட்ட 35 ஓவர்களில் 7 விக்கட்டுக்களை இழந்து 163 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் இந்திர 62 யசோ 41 அரவிந்த 24 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் கொக்குவில் காமாட்சி விளையாட்டுக் கழகம் சார்பில் சுரேந்திரன் 3 தீபநாதன் 2 கேதீஸ் மற்றும் சுஜன் தலா ஒவ்வொரு விக்கட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 35 ஓவர்களில் 164 என்னும் வெற்றி இலக்கோடு துடுப்பாடிய கொக்குவில் காமாட்சி விளையாட்டுக் கழகம் 5 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்த நிலையில் இலகுவாக வெற்றி இலக்கை தொட்டது. அதிரடியாக ஆடிய சுஜன் 59 ஓட்டங்களையும், தர்ஷன் 34 திவாகர் 20 ஓட்டங்களையும் பெறறனர். பந்து வீச்சில் டினோ 2 சஜீட் 2 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

# நடுவரை அவமதித்த சங்ககாரவுக்கு அபராதம்

(கொழும்பு)



ஐசிசி போட்டி விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் இலங்கை அணியின் நட்சத்திர வீரர் குமார் சங்ககாரவுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இலங்கை - இங்கிலாந்து அணிகளுக்கு இடையில் பல்லேகல மைதானத்தில் நடைபெற்ற ஆறாவது ஒருநாள் போட்டியில் நடுவரின் தீர்ப்பை மதிக்காது செயற்பட்டதாக சங்கக்கார மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதனால் போட்டி ஊதியத்தில் இருந்து 15 வீதத்தை அபராதமாக செலுத்துமாறு ஐ.சி.சி. சங்கக்காரவிற்கு உத்தரவிட்டது.

குமார் சங்கக்கார ஒருநாள் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற திட்டமிட்டுள்ள நிலையில் தனது பல்லேகல மைதான இறுதிப் போட்டியை விளையாடி சதம் அடித்து அசத்தினார்.

பல்லேகல மைதான இறுதிப் போட்டியில் அபராதம் விதிக்கப்பட்டமை குமார் சங்கக்காரவிற்கு மறக்க முடியாத அனுபவமாக இருக்கும்.

# டுமினிக்கு வாய்ப்பில்லை

(ஜோகன்னஸ்பேர்க்)

மேற்கிந்தியத் தீவுகள் அணி தென்னாபிரிக்காவில் சுற்றுப் பயணம் செய்து 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையட உள்ளது. தொடரின் முதல் போட்டி செஞ்சூரியனில் நாளை தொடங்குகிறது.

இந்தப் போட்டியில் தென்னாபிரிக்காவின் முன்னணி சகலதுறை வீரர் டுமினி விளையாட வாய்ப்பில்லை என்று அந்த அணியின் பயிற்சியாளர் டோமிங்கோ தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து தென்னபிரிக்க அணியின் பயிற்சியாளர் டோமிங்கோ கூறும்போது பெருமை மிகுந்த டெஸ்ட் கிரிக்கெட்டில் வீரர்களுக்கு இடம் கிடைத்தால் அவர்கள் விளையாட விரும்புவார்கள். எனவே, டுமினிக்கு இடமில்லை என்பது கடினமானதாகும். ஆனால், உலக கோப்பை போட்டியில் டுமினி இடம் பெற வேண்டும். அதில் டுமினியின் பங்களிப்பு அதிக அளவில் இருக்க வேண்டும் என்பதால் இந்த முடிவை நாங்கள் எடுக்க வேண்டியுள்ளது.

அடுத்த இரண்டு வாரங்களில் அவர் உடல்நிலை பற்றி ஆலோசிப்போம்.

டுமினிக்குப் பதிலாக வான் சைல் இடம்பெற வேண்டும் என்று தேர்வாளர்களிடம் கூறிய டோமிங்கோ, அவர் முன்கள வீரராக களம் இறங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## சனத்தை நெருங்கும் சங்கா

ஒருநாள் போட்டியில் அதிக ஓட்டங்கள் எடுத்த இலங்கை வீரர்களில் முதல் இடத்தில் இருககும் சனத் ஜெயசூர்யாவை சங்கக்காரா நெருங்கி வருகிறார்.

சனத் ஜெயசூர்யா 445 ஒரு நாள் போட்டியில் விளையாடி 13,430 ஓட்டங்கள் எடுத்துள்ளார். சர்வதேச அளவில் அவர் 3 ஆவது இடத்தில் உள்ளார்.

சங்கக்காரா 433 போட்டியில் 13,339 ஓட்டங்கள் எடுத்து 4ஆவது இடத்தில் உள்ளார். சனத் ஜெயசூர்யாவை நெருங்க அவருக்கு இன்னும் 91 ஓட்டங்கள் மட்டுமே தேவை. இங்கிலாந்து அணிக்கு எதிரான 6 ஆவது ஒருநாள் போட்டியில் சங்கக்காரா தனது 20 ஆவது சதத்தை பதிவு செய்தார். இதன் மூலம் அவர் சயீத் அன்வரை சமன் செய்துள்ளார்.

# 3 ஆவது ஒரு நாள் போட்டி
# பாகிஸ்தான் அபார வெற்றி



பாகிஸ்தான் - நியூஸிலாந்து அணிகளுக்கிடையில் ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தின் சார்ஜா மைதானத்தில் பகலிரவுப் போட்டியாக நேற்று முன்தினம் இடம பெற்ற 3ஆவது ஒருநாள் சர்வ தேசப் போட்டியில் பாகிஸ்தான் அணி 147 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி, முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அதற்கமைய, 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகளை இழந்து 364 ஓட்டங்களைக் குவித்தது. பாகிஸ்தான் அணி சார்பில் அபாரமாக விளையாடிய அஹமட்ஷேசாட்- 113 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்.

நியூஸிலாந்து அணியின் பந்து வீச்சாளர்கள் சார்பாக மட் ஹென்றி - 3 மிச்சல் மக்கிளேனகன், குரே அன்டர்சன், நதன் மக்லம் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

365 என்ற இமாலய வெற்றி இலக்கினை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி, 38.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 217 ஓட்டங்களை மட்டுமே பெற்று, படு தோல்வியடைந்தது.

நியூஸிலாந்து அணி சார்பில் அதிகூடிய ஓட்டமான 46 இனை வில்லியம்ஸன் பெற்றுக் கொண்டார்.

பாகிஸ்தான் அணியின் பந்து வீச்சாளர்கள் சார்பில் ஹீட் அப்ரிடி மற்றும் ஹரிஸ் ஷொஹைல் ஆகியோர் தலா 3, மொஹமட் இர்பான் 2, வஹாப் ரியாஸ் மற்றும் அஹமட் ஷேஷாட் ஆகியோர் தலா 1 விக்கெட்டி னையும் வீழ்த்தினர்.

போட்டியின் நாயகனாக அஹமட் ஷேசாட் தெரிவானார்.

5 போட்டிகளைக் கொண்ட குறித்த தொடரில் பாகிஸ்தான் அணி 2 இற்கு 1 என்ற் நிலையில் முன்னிலை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஆஸி டெஸ்ட் அணிக்கு தலைவராக சிமித் நியமனம்


இந்திய கிரிக்கெட் அணி அவுஸ்ரேலியாவில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகள் இடையேயான 4 டெஸ்ட் போட்டித் தொடரில் அடிலெய்டில் நடந்த முதல் டெஸ்டில் அவுஸ்ரேலியா 48 ரன்னில் வெற்றி பெற்றது.

இந்த டெஸ்டின்போது அவுஸ்ரேலிய கப்டன் கிளார்க் முதுகு வலியால் அவதிப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட காயம் காரணமாக எஞ்சிய டெஸ்ட் போட்டிகளில் இருந்து விலகினார். அவரது எதிர்கால கிரிக் கெட் வாழ்க்கை கேள்விக்குறியாகவே உள்ளது.கிளார்க் காயத்தால் வலகிய தால் அவுஸ்ரேலிய அணிக்கு பிரட்ஹடின் கேப்டனாக நிய மிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. கிளார்க்கும் தனது ஆதரவை அவருக்கு தெரிவித்து இருந்தார்.

இந்த நிலையில் அவுஸ்ரேலிய அணியின் தற்காலிக கப்டனாக ஸ்டீவன் சிமித் நியமிக்கப்பட்டுள்ளார். எஞ்சிய 3 டெஸ்ட்டுக்கு அவரை கப்டனாக தேர்வு செய்து அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

அவுஸ்ரேலிய டெஸ்ட் கப்டனாக நியமிக்கப்பட்ட 45ஆவது வீரர் சிமித் ஆவார். அவருக்கு 25 வயது 195 நாட்கள் தான் ஆகிறது. இதன்மூலம் இளம் வயதில் கப்டன் பொறுப்பை ஏற்ற 2ஆவது அவுஸ்ரேலிய வீரர் என்ற பெருமையை பெற்றார். 1979ஆம் ஆண்டு சிம்ஹியூக்ஸ் 25 வயது 57 நாட்களில் கப்டன் பொறுப்பை ஏற்றார்.






**யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் 2014/2015 ஆம் ஆண்டில் புகுமுக மாணவர்களுக்கான தடகளப் போட்டி நேற்று முன்தினம் பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்றது. இதில் கலைப்பீடம் முதலாவது இடத்தினையும், முகாமைத்துவபீடம் இரண்டாவது இடத்தினையும், விஞ்ஞானபீடம் மூன்றாவது இடத்தினையும் பிடித்துக்கொண்டன. (25)**




இளவாலை திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் நத்தார் தின விழா நேற்று முன்தினம் இடம்பெற்றது இதில் மன்ற மாணவிகளின் கலை நிகழ்வையும் கலந்து கொண்ட பார்வையாளர்களையும் காணலாம். (48)

# தமிழ் இலக்கியத்தின் மீதான ஆர்வம் மாணவர்களிடையே ஏற்படவேண்டும்

## பேராசிரியர் வேல்நம்பி தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

தற்போது இளம்பராயத்தினர் மத்தியில் தமிழ் மீதான ஆர்வம் குறைவடைந்து செல்வது கவலையளிப்பதாக உள்ளது. இதனைத்தடுத்து இளம்பராயத்தினரும் தமிழை வளர்த்த பெரியார்களைப்போல் தமிழ் மீது ஆர்வம் ஏற்பட தமிழ் சார்ந்த விழாக்களை நடாத்தவேண்டும் என யாழ். தமிழ்சசங்கத்தலைவர் பேராசிரியர் தி.வேல்நம்பி தெரிவித்தார்.

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் முன்னெடுத்த நாவலர் விழா நேற்று முன்தினம் பிற்பகல் 4.30 மணிக்கு நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடைபெற்றபோது அந் நிகழ்விற்கு தலைமை தாங்கி உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

எம்முடைய தமிழ் சார் ஊக்கமூட்டும் செயற்பாடுகளில் பாடசாலை மாணவர்களினை மையமாகக் கொண்ட செயற்பாடுகளினை நாம் மேற்கொள்கின்றோம். இந்நிகழ்விற்கு பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் வருகை தந்துள்ளார்கள். மாணவர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டு இவ்வாறான செயற்பாடுகளினை உள்வாங்கி தமிழ் அறிவினை வளர்த்து தமிழ் சார்ந்து செயற்பட திட்டமிட வேண்டும்.

இதற்காகவே மாணவர்களினை இலக்காகக் கொண்டு யாழ்.பல்கலைக்கழக தமிழ்த் துறையுடன் இணைந்து கவிதைப் பயிற்சிப்பட்டறை ஒன்றினை ஆரம்பித்து நடாத்தி கவிதைப் போட்டியினையும் நடாத்தி பரிசில்களினை வழங்குகின்றோம்.

அறிவு என்பதினை விட அறிவினை பிரயோகிக்கும் திறன் மாணவர்களிடையே இருக்க வேண்டும். திறனை வளர்க்கும் வகையிலான செயற்பாடுகள் கல்வித்திட்டங்களிலே நடைமுறைப்படுத்த வேண்டும். இதற்காக பல்வேறு விதமான செயற்பாடுகளினை மேற்கொள்ள வேண்டும்.

தமிழர்களுடைய இலக்கியத்திலே திருக்குறள் முக்கியமானது இத் திருக்குறளால் தமிழுக்கு செந்தமிழ் இலக்கணத்தை தந்துள்ளது . தமிழனுடைய இருப்புக்கு என்ன செய்யலாம் என்னும் வகையில் கருத்துக்களினை புரிந்து கொண்டு செயற்படும் வகையில் நீதி நூலாக விளங்குகின்றது.

பிள்ளைகளிடத்திலே இயல்பாகவே வாசிக்கும் திறன் பெற்றுக்கொள்ளப்படவேண்டும். வாசிப்பு திறன்களினை ஏற்படுத்தும் நோக்கில் செயற்பாடுகள் மெற்கொள்ளப்படவேண்டும். எதிர்வரும் காலத்தில் ஆய்வரங்காக தமிழை மையமாகக் கொண்ட வகையில் தமிழ்ச்சங்கத்தினால் முத்தமிழ் விழாவானது பாடசாலை மாணவர்களினை ஊக்கப்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்படவுள்ளது. என்றார். (63,48)

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் ஞானச்சுடர் சஞ்சிகை போட்டி

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்ததால் வருடந்தோறும் நடாத்தப்பட்டு வருகின்ற ஞானச்சுடர் வாகசர் போட்டி இந்த வருடமும் நடாத்தப்படவுள்ளது.

இதற்கான வினாக்கள் நவம்பர் 26 ஆம் திகதி ஞானச்சுடரில் வெளியிடப்பட்டுள்ளன. போட்டியில் எவரும் பங்குபற்றுவதுடன் ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட விடைகளை அனுப்பலாம். ஆனாலும் அவை ஒவ்வொன்றும் தனித்தனியாக அனுப்பப்படவேண்டும்.

கேள்விகள் இவ்வருடம் ஜனவரியிலிருந்து நவம்பர் மாதம் வரையான ஞானச்சுடரிலிருந்து எடுக்கப்பட்டுள்ளன. விடைகளை போட்டியாளர்கள் வாசகர் போட்டிக்குழு, சந்நிதியான் ஆச்சிரம சைவக்கலை பண்பாட்டுப் பேரவை செல்வச்சந்நிதி தொண்டைமானாறு என்னும் முகவரிக்கு எதிர்வரும் ஜனவரி 15 ஆம் திகதிக்கு முன்னர் நேரிலோ தபால் மூலமோ அனுப்பப்பட வேண்டும் என ஆச்சிரமத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

# பௌர்ணமி கலை நிகழ்வின் ஏழாவது விசேட அமர்வு



மகுடம் கலை இலக்கிய வட்டம் பௌர்ணமி தினங்களில் நடாத்திவரும் பௌர்ணமி கலை நிகழ்வின் தொடர் அமர்வின் ஏழாவது விசேட அமர்வு நேற்று முன்தினம் பிற்பகல் 4.30 மணிக்கு மட்.பொது நூலக கேட்போர் கூடத்தில் பேராசிரியரும், தமிழறிஞரும், கனடா இலக்கிய தோட்ட ஸ்தாபகருமான அமரர் செல்வா கனகநாயகத்தின் நினைவிடை தோய்தல் நிகழ்வாக பேராசிரியர் செ.யோகராசா தலைமையில் நடைபெற்றது இந் நிகழ்வில் பேராசிரியை சித்திரலேகா மௌனகுரு, மட்டக்களப்பு அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபை இறையியல் கல்வி இயக்குநர் கலாநிதி தர்சன் அம்பலவாணர் ஆகியோர் சிறப்புரை ஆற்றினார் . (90)

# யானைகளின் படையெடுப்பு; மல்லாவியில் பயிர்கள் நாசம்

மல்லாவி வடக்கு மங்கை நகர்ப் பகுதியில் யானைகளின் அட்டகாசம் அதிகரித்துக்காணப்படுவதுடன் பயிர்களும் நாசப்படுத்தப்படுவதாக அப்பகுதி விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இப்பகுதிக்கு படையெடுத்துவரும் யானைகள் அங்குள்ள தென்னை, வாழை, மரவள்ளி போன்ற பயிர்களை துவம்சம் செய்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் பொன்னுத்துரை ஜேரஞ்சனி என்பவரின் காணிக்குள் புகுந்த யானைகள் அங்கிருந்ததென்னை, குலையுடனிருந்த 13வாழை மரவள்ளி 100 ஆகியவற்றை துவம்சம் செய்துள்ளதாகவும் இதனால் அவருக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (140)

# சிறந்த நூலகங்கள் தெரிவில் முதலிடத்தை வடமராட்சியில் 2 பாடசாலைகள் பெற்றன

வடமராட்சி பாடசாலைகளின் சிறந்த நூலகங்கள் தெரிவில் வல்வை மகளிர் மகாவித்தியாலயம், வல்வை சிவகுரு வித்தியாலயம் ஆகியன முதலிடத்தைப் பெற்றுள்ளன.

தேசிய நூலக மாதத்தை முன்னிட்டு வடமராட்சி வலய பாடசாலைகளுக்கு இடையே நடாத்தப்பட்ட சிறந்த நூலகங்களை தெரிவு செய்வதற்கான போட்டியில் 1A.B பாடசாலைகளில் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரியும் 1சி பாடசாலைகளில் வல்வை மகளிர் மகாவித்தியாலயமும் தரம் 2 பாடசாலைகளில் வல்வை சிவகுரு வித்தியாசாலையும் முதலிடத்தை பெற்றுள்ளன.

நூலக வாரத்தை முன்னிட்டு பாடசாலைகளில் உள்ள நூலகங்களில் ஒழுங்கமைப்பு நிர்வாக மயமாக்கல் அழகுபடுத்தல், சிறந்த சேவை வழங்கல் உட்பட பல்வேறு விடயங்களை உள்ளடக்கி குறித்த இப்போட்டிகள் வடமராட்சி வலயத்தால் நடாத்தப்பட்டிருந்தது.

இப்போட்டிகளில் 1A.B. பாடசாலைகளில் முதலாம் இடத்தை பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரியும், இரண்டாம் இடத்தை உடுப்பிட்டி மகளிர் கல்லூரியும் மூன்றாம் இடத்தை நெல்லியடி மத்திய கல்லூரியும் பெற்றுள்ளன.

1 C. பாடசாலைகளில் முதலாம் இடத்தை வல்வை மகளிர் மகாவித்தியாலயமும் இரண்டாம் இடத்தை புற்றளை மகா வித்தியாலயமும். பெற்றுள்ளன. தரம் 2 பாடசாலைகளில் முதலாம் இடத்தை வல்லை சிவகுரு வித்தியாலயம் பெற்றுள்ளது.

# இளைஞர் கழகத்தின் புதிய நிர்வாகத் தெரிவு



(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் மேற்கு இளைஞர் கழகத்தின் புனரமைப்புக் கூட்டம் மானிப்பாய் மருதடி விநர்யகர் ஆலய அறநெறிப்பாடசாலை மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

மானிப்பாய் மேற்கு இளைஞர் கழகத்தின் தலைவர் அ.கீர்த்தனா தலைமையில் இடம்பெற்ற இக் கூட்டத்தில் அகவணக்கம், தேசிய இளைஞர் கழக செயலாளர் சமன்குமார ரணவீரவின் ஆத்மா சாந்திக்கான பிரார்த்தனை, இளைஞர் உறுதியுரை தலைவர் உரை, செயலாளரின் பொதுக்கூட்ட அறிக்கை என்பன இடம்பெற்றன.

இக்கூட்டத்தில் புதிய ஆண்டிற்கான நிர்வாகிகளாக தலைவராக பே.சாம்பவி செயலாளராக அ.கீர்த்தனா பொருளாளராக ச.கம்சினி அமைப்பாளராக ப.கௌசிகன், உபதலைவராக க.உஷாந்தன் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் துறை ரீதியான தலைவர்களும் தெரிவாகினர். இந் நிகழ்வில் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத் தலைவர் ச.செந்தில்குமரன், பிரதேச இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் க.உஷாந்தன், இளைஞர் சேவை உத்தியோகத்தர் சி.அனுஷன், இளைஞர் அபிவிருத்தி உத்தியோகத்தர் ச.சுகிர்தா, பிரதேச இளைஞர் கழகசம்மேளன உபதலைவர் செ.றொபின்ஷன் உள்ளிட்ட இளைஞர்கள் பலர் கலந்து கொண்டனர். (48)

# மகிந்தவுக்கு மைத்திரி கைலாகு கொடுக்க மறுத்தது ஏன்?

– ஸர்மிளா ஸெய்யித் –

2005இல் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக வென்றது, அரசியல் தூரநோக்கைப் பிழையாகக் கணித்த புலிகள் தமிழ் மக்களை வாக்களிக்க விடாது தடுத்ததினாலேயே.... இரண்டாம் முறையாக வென்றது, போர் வெற்றியின்



President Mahinda Rajapaksa with Opposition presidential candidate Maithripala Sirisena yesterday at the Elections Secretariat Rajagiriya
– Pic by Sudath Silva

நாயகன் அந்தஸ்தை சந்தைப் படுத்தியதனால்..... இவை அனைத்தும் மஹிந்தவின் மந்திரங்களால் நிகழ்ந்தவையில்லை....

இவரது அரசியல் சாணக்கியத்துடன் ஈடுகொடுக்க முடியாத சுடுதண்ணிப்பானைகள் அவரது மந்திரத்தையும், தைலத்தையும் பரப்பி அகழி தோண்டிக் கொண்டிருக்கின்றன. இந்த சதி அகழியில் விழப்போகிற வர்கள் அவர்களும்தான் என்பதைத் தெரியாமலேயே...

நியமனப்பத்திரங்கள் கையளிப்பின்போது, மைத்திரிக்கு கைலாகு கொடுக்கும் விதத்தில் மாந்திரீக தைலத்தை மஹிந்த தடவ முயன்றார் என்றும், அறிந்து கொண்ட மைத்ரி, கை கொடுக்காது வணங்கியதாகவும், எல்லோரும் தேர்தல் ஆணையாளரின் மேசையின் முன்னால் சென்று நியமனப் பத்திரங்களைச் சமர்ப்பித்த வேளை மஹிந்த மட்டும் மேசைக்கு உட்புறமாகச் சென்று கையளித்தார் என்றும் பரவலாகப் பேசப்படுகின்றது.

இந்தக் கதைகள் பெரிய கிடங்குகளுக்குச் சமனானவை. மக்களை ஏமாற்றுவதற்காகவே திட்டமிட்டுத் தோண்டப்படுகின்ற கிடங்கு. மைத்திரி போனாலும் சாஸ்திரிகளைக் கொண்டு மஹிந்த வென்றுவிடக்கூடும் என்கிற குருட்டு நம்பிக்கையை ஏற்படுத்துவதனூடாக ஏமாற்றத்தில் வீழ்த்துகிற உளவியல் ரீதியாக மக்களை முடக்குகிற செயற்பாடாகப் பார்க்கப்படவேண்டியது.

காலங்காலமாக எந்தவொரு காரியத்தைத் துவங்கும்போதும் சமய அனுஷ்டானங்களுடனும் வழிபாடுகளுடனும் துவங்குவது ஐதீகம். மத நம்பிக்கையற்றவர்கள் போக எந்த சமயத்தை நம்பிக்கைகளைச் சார்ந்தவர்களும் இதற்கு விதிவிலக்கில்லை...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஏனைய இந்து மதம் சார்ந்த அரசியல் தலைவர்கள் இந்து ஆலயங்களுக்குச் சென்று வழிபடுவதும் கடவுளின் ஆசியுடன் கருமத்தைத் துவங்க விருப்புக் கொள்வதும் கடவுளின் சந்நிதானத்தில் தரப்படுகின்ற நூல்களைக் கட்டிக் கொள்வதும், புனித தீர்த்தத்தை தலையில் தெளித்துப் பருகுவதும், முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் காங்கிரஸில் அல்லாத முஸ்லிம் அரசியல் தலைவர்கள் பள்ளிவாயில்களுக்குச் சென்று விஷேட துவாஆப்பிரார்த்தனைகளில் ஈடுபடுவதும் “அல்லாஹு அக்பர்” என்று கோஷமிட்டப்படி ஊர்வலமாகச் சென்று பிரார்த்திப்படியாக பணிகளைத் துவங்குவதுமெல்லாம் நம்பிக்கை சார்ந்த செயற்பாடுகளே.

இந்த நம்பிக்கையாளர்கள் பல நிலைகளில் இருக்க இடமுண்டு. சிலர் சன்மார்க்கத் தலைவர்கள், குருக்கள், மதபோதகர்களின் ஆலோசனைகளை மிக நுட்பமாக பின்பற்றுவார்கள். நேரம் காலம் இடம் பொருள் அனைத்தையும் கணித்துக் காரிய மாற்றுவார்கள். இங்கு, மஹிந்த ராஜபக்ச கட்டிக் கொள்கின்ற நூல் மட்டும் மந்திரித்ததாகவும், அவர் கையிலும் தலையிலும் தடவிக் கொள்கிற புனித தீர்த்தம் மாந்திரீக தைலமாகவும் மாறிவிடுவதுதான் வேடிக்கை.

மஹிந்த ராஜபக்ஷ மந்திரத்தினால் தான் வெற்றி பெற்றார் என்ற கருத்து அவர் இரண்டாம் முறையாக ஜனாதிபதியானதிலிருந்தே இருந்து வருந்துகிறது. எதிர்காலத்தை கணிப்பிடக்கூடிய மந்திர சக்திகளும், தாம் எண்ணியப்படியாக காரியசித்தம் பெறக்கூடிய வலிமையுடையவர்களும் மஹிந்தவை வழி நடத்துகிறார்களாக இருந்தால், அவரது அரசவையிலிருந்த மைத்திரி விலகிச் செல்வதற்கான மறைமுக சதிகள் நீண்டகாலமாக இடம்பெற்றும் கண்டறியாமல் போனது எப்படி சாத்தியமாக முடியும்?

மஹிந்த ராஜபக்ஷ மேசையின் உட்புறமாக சென்று வேட்புமனுவைக் கையளித்தது அவரது மதபோதகரின் ஆலோசனையின் பெயரிலாகவோ அல்லது மந்திர சதியாகவோ இருக்கட்டும். அதனாலென்ன? அவரது மந்திரத்தை முறியடிக்கும் தந்திரத்துடன் வியூகம் வகுக்கக்கூடிய அரசியல் சாணக்கியர்களாக இருந்தால் இதையெல்லாம் ஒரு பொருட்டாகக் கருத வேண்டியதேயில்லை. பிரச்சினையே அப்படியானவர்கள் இங்கு எவருமில்லை என்பதுதான்!

இந்த முறையும் அவரே வென்றுவிடக்கூடுமோ என்கிற பதற்றத்துடன் இருப்பவர்களுக்கு இந்தக் கதைகள் ஒரு சாக்கு. வெற்றிக்காகவும் அரசியல் மாற்றத்திற்காகவும் பாடுபடாது குறைந்த பட்சம் சிந்திக்கத்தானுமில்லாது இருந்துவிட்டு வென்ற பின்னர் சொல்லிக் கொள்ளலாம் “மந்திரத்தாலேயே வென்றார்” என்று.

# மனிதர்களும் உரிமைகளும்

– சா. கந்தசாமி கட்டுரையிலிருந்து.

மனித உரிமைகள் என்பது புதிய சொல்லாட்சி. ஆனால் மனித உரிமைகள் பழைமையானவை. மனிதர்கள் பிறப்பின் வழியாகப் பெற்றவை. பல்லாயிரம் ஆண் டுகளாகச் சமூகத்தின் பண்பாக இருந்து வருகின்றவை. ஞானிகள் சொல்லி வருவதிலும், சமயங்கள் பிரசாரம் செய்து வருவதிலும் அடிநாதமாக இருந்து வருவது மனித உரிமைகள்தான்.

உலகம் என்பது பூமிதான். அதாவது, பூமி உண்டே தவிர, நாடுகள் கிடையாது. பின்னால், அரசு என்று ஒன்று ஏற்பட்டபோது, பூமிக்கு எல்லை போட்டார்கள். மனிதர்களின் சுதந்திரமான நடமாட்டத்தை, முடக்கினார்கள். ஆறுகள், மலைகள், சமுத்திரங்களைத் தங்களுடையது என்று வசப்படுத்திக் கொண்டார்கள்.

மனிதர்களின் இயற்கை நீதி அவர்களிடம் இருந்து பறிக்கப்பட்டது. ஒவ்வொரு சமூகமும், சமயமும் தனக்கு உகந்த மாதிரி இயற்கை நீதி, மனித உரிமைகள் என்பதைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்தன. எல்லா நாகரிக சமூகங்களிலும் மனித உரிமைகள் பேணப்பட்டது போலவே, மனித உரிமைகள் மீறலும் நடைபெற்றது.

உயர்ந்த நாகரிகம், பண்பாடு கொண்ட சமூகம் என்றறியப்பட்டதில்கூட பலர் மனிதனை அடிமையாக வைத்துக் கொண்டிருந்தார்கள்.

மனித உரிமைகள் என்பவை தனிப்பட்ட மனிதனின் உரிமைகள் என்றால் அவை மற்றொரு மனிதனையோ, சமூகத்தையோ பாதிக்கிறதா என்பதையும் கவனிக்க வேண்டியிருக்கிறது.

ஒருவன் அராஜகவாதி. தன் விருப்பம் போல செயற்பட உரிமைகள் உண்டென சொல்கிறான். அப்போதுதான் பொதுச் சட்டத்தை மீறுவது வருகிறது.

எவையெல்லாம் சமூகத்திற்குத் தீமையானவை என்று ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தனவோ அவற்றையெல்லாம் பொதுவில் வைத்து மனித உரிமைகள் என்கிறார்கள். தனி மனித உரிமைகள் முக்கியம்தான். ஆனால், அது வரையறைக்குள் கட்டுப்பட்டது.

மனிதர்களை ஞானிகள் என்றும், பேரறிவும் பெருந்தன்மையுங் கொண்டவர்கள் என்றும் சொல்லிக்கொண்டு வந்தாலும், கொடுமைகள் செய்வதில் அவர்களே முதல் ஜீவராசியாக இருக்கிறார்கள். உலகத்தில் ஏற்பட்ட இயற்கைப் பேரழிவுகளைவிட, விலங்குகளால் ஏற்பட்ட உயிர் இழப்புகளைவிட மனிதர்கள் சக மனிதர்களுக்குப் புரிந்த கொடுமைகள் அதிகம்.

மனிதர்களுக்குப் புலியைப்போல வேகமாக ஓடும் திறனோ, நாயைப் போன்று மோப்ப சக்தியோ, யானையைப்போல பலமோ, கழுகுபோல பறக்கும் ஆற்றலோ இல்லை. ஆனாலும் அவன் அறிவு என்னும் மகத்தான ஆற்றல் பெற்றிருக்கிறான். அற்புதமான நினைவாற்றல் பெற்றிருக்கிறான். பேசவும், எழுதவும் கற்றிருக்கிறான். விலங்குகள், பறவைகளுக்கு இல்லாத ஆற்றலால் உலகத்தை வதம் செய்திருக்கிறான்.

இரண்டாவது உலகப் போரில், ஐரோப்பிய நாடுகளான இங்கிலாந்து, பிரான்ஸ் உள்பட பல நாடுகள் ஜெர்மானிய சர்வாதிகாரி அடோல்ப் ஹிட்லருக்கு எதிராகப் போரிட்டன. ஹிட்லர் ஆறு லட்சம் யூத இன மக்களை வதை முகாம்களில் போட்டுக் கொன்றான்.




ஜப்பான், தென்கிழக்காசிய நாடுகளைப் போரில் வென்று முன்னேறிக் கொண்டிருந்தது. அது திடீரென்று பசிபிக் சமுத்திரத்தில் இருந்த அமெரிக்காவிற்குச் சொந்தமான பெல்துறை முகத்தைத் தாக்கி பெரும் சேதத்தை ஏற்படுத்தியது. அதனால் அமெரிக்கா இரண்டாவது உலகப் போரில் நேரடியாக இறங்கியது.

ஹிரோஷிமா, நாகசாகி - ஆகிய ஜப்பானிய நகரங்கள் மீது அணுகுண்டை வீசியது. அது புது ஆயுதம். முதன்முறையாக ஜப்பானிய நகரங்களில் அமெரிக்கா குண்டு வீசி ஆயிரக்கணக்கானவர்களைக் கொன்றது. ஜெர்மனியின் ஹிட்லர் ஒரு சர்வாதிகாரி என்றால், ஜனநாயக அமெரிக்கா முரட்டுத்தனமாக அணுகுண்டு வீசி சர்வநாசத்தை ஏற்படுத்தியது.

இரண்டாம் உலகப் போர், நாடுகளுக்கிடையிலான போர். மனித உயிர்களை அதிகமாகப் பலி வாங்கியது. மனிதர்கள் அறிவால் கண்டுபிடித்த ஆயுதங்கள், போரோடு சம்பந்தமே இல்லாத எளிய மனிதர்களைக் கொன்று குவித்தன. பல நாடுகளிலும் மனித உரிமைகள் மீறப்பட்டிருப்பது தெரிந்தது.

இனி வருங்காலங்களில் மனித உரிமைகள் மதிக்கப்பட வேண்டும். அதற்கென சட்டங்கள் வகுக்க வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் கோரி வந்தார்கள். அதற்கான முன் முயற்சியை ஐ.நா. சபை எடுத்துக் கொண்டது. பல கட்டங்களில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. இறுதியாக ஒரு பிரகடனம் வெளியிடப்பட்டது.

ஐ.நா. சபை, டிசம்பர் - 10ஆம் திகதியை சர்வதேச மனித உரிமைகள் தினம் என்று அறிவித்தது. அதன் பிரகடனத்தில், மனித உரிமைகள் முப்பதென்று வரையறுத்தது. அதனை ஒவ்வொரு நாடும் கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டது. அதன் முக்கிய ஐந்து வாசகங்கள்:

**எல்லா மனிதர்களும் சுதந்திரமானவர்கள் சமமானவர்கள்.**
**எவரிடமும் வேறுபாடு காட்டக் கூடாது.**
**எல்லா மனிதர்களும் வாழ உரிமையுடையவர்கள்.**
**எவர் ஒருவரும் அடிமை இல்லை.**
**எவரையும் கொடுமைப்படுத்துதல் கூடாது.**

ஐக்கிய நாடுகள் சபை, 2012இல், இணையத்தில் தொடர்பு கொள்வது அனைவரின் அடிப்படை உரிமை எனவும், அதில் பேச்சு மற்றும் எழுத்துரிமைக்குச் சுதந்திரம் தரப்பட வேண்டும் என்பதனையும், அறிவித்தது. அது மட்டுமின்றி, அனைவருக்கும், கட்டுப்படியான கட்டணத்தில், இணைய இணைப்பு வழங்கப்பட வேண்டும் என்றும் அறிவித்தது.

## கட்டுப்படியான கட்டணத்தில் இணையம் நம் உரிமை!




இது எத்தனை பேருக்குத் தெரியும்? இந்த உரிமையை உணர்ந்திருக்கின்றனரா.... உலக அளவில் இது குறித்து அண்மையில் ஓர் ஆய்வு நடத்தப்பட்டது. இதன் பின் வெளியிடப்பட்ட அறிக்கையில், இணையம் பயன்படுத்துவோரில், 83வீதம் பேர்,. அதனைத் தங்கள் அடிப்படை உரிமை என்பதனை அறிந்திருக்கிறார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. 24 நாடுகளில், தேர்ந்தெடுக்கப்பட்ட 23 ஆயிரம் இணையப் பயனாளர்களிடம் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. 2014இல், அக்டோபர் 7 முதல் நவம்பர் 12 வரை இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

# இன்றைய ஆன்மிகம்!




இன்றைய ஆன்மிகத்தின் கசப்பான யதார்த்தம் இதுதான். அந்த இறைவனையே இவர்களுடைய இன்ப வாழ்க்கைக்கு ஒரு கருவியாகத்தான் பயன்படுத்துகிறார்கள். கடைகளில் தொங்கிக் கொண்டிருக்கும் ஆன்மிகப் பத்திரிகைகளைக் கொஞ்சம் பாருங்களேன்.

"கடன் தொல்லை தீர யாரை வணங்க வேண்டும்?"

"நீண்டநாள் நோய் தீர எந்தத் தெய்வத்திடம் முறையிட வேண்டும்?"

"ஆதித்ய ஹ்ருதயம் சொல்வதால் உண்டாகும் நன்மைகள்?"

இப்படித் தலைப்புகள் இருந்தால்தான் ஆன்மிகப் புத்தகங்கள் விற்கின்றன. இந்த வார்த்தைகளுடன் இருக்கும் பத்திரிகையைக் கண்டால் அவை கயிற்றில் தொங்கிக் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. ஆன்மிகமே தூக்கில் தொங்கிக் கொண்டிருப்பதுபோல் தோன்றுகிறது.

இன்று நம்மிடையே அட்டவணை ஆன்மிகம் வந்துவிட்டது! ஆம்... கடன் தொல்லை தீர ஒரு கடவுள்ளு காதல் கைகூட மற்றொரு கடவுள்; மகளுக்குத் திருமணமா மற்றொரு தெய்வம்; பதவி உயர்வுக்கு ஒன்று, பந்தயத்தில் ஜெயிக்க வேறொன்று, நோயில்லாமல் வாழ ஒரு தெய்வம், வம்பு வழக்கில்லாமல் வாழ ஒரு தெய்வம்!

இப்போதெல்லாம் கடவுளின் சட்டையைப் பிடித்துக் கேட்கத் தொடங்கி விட்டோம். உன்னை வணங்கினால் எனக்கு என்ன தருவாய்?

நம் அறியாமையை நினைத்து ஆண்டவன் சிரித்துக் கொண்டிருக்கிறான். ஆனால் இடையில் இருக்கும் சில ஆன்மிகத் தரகர்கள் நம் அறியாமையையும் அன்பின்மையையும் வைத்துத் தொழில் செய்து கொண்டு பணம் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள்! இதுதான் இன்றைய அவல நிலை.

என் நண்பர் ஒருவர் - அமெரிக்காவில் ஒரு பெரிய கார் தொழிற்சாலையில் உயர்ந்த பதவியில் இருக்கிறார். இந்தியாவை விட்டுப்போய் பல வருடங்கள் ஆகிவிட்டன. திடீரென்று ஒருநாள் தனது 14 வயது மகனுடன் ஏதோ நேர்த்திக்கடன் பாக்கியாம். அதை நிறைவேற்ற வந்திருந்தார். கோயிலில் நேர்த்திக்கடன் செலுத்தி தரிசனம் செய்துகொண்டு வெளியே வந்தோம். இவர் தனது மகனிடம் ஒரு 100 ரூபாய் நோட்டைக் கொடுத்து வாயில் உண்டியலில் போட்டுவிட்டு வரச்சொல்லிவிட்டு என்னுடன் வெளியே பேசிக் கொண்டிருந்தார்.

நெடுநேரம் ஆயிற்று. பையனைக் காணவில்லை. உள்ளே சென்று பார்த்தால் உண்டியலின் எதிரே அதையே உற்றுநோக்கியபடி நின்று கொண்டிருந்தான். என்ன விஷயம் என்று கேட்டதற்கு, "அமெரிக்காவில் இயந்திரங்களில் பணம் போட்டால் ஒரு கோகோ கோலா வரும். ஒரு பர்கர் வரும். குறைந்தபட்சம் ஒரு சின்ன சொக்ளேற்றாவது வரும். இந்தியாவில் 100 ரூபாய் போட்டும் ஒன்றும் வரவில்லையே. இந்த இயந்திரம் பழுது ஆகியிருக்கிறது என்று நினைக்கிறேன்." என்றான்!

அவன் சொன்னதைக் கேட்டு நாங்கள் சிரித்து விட்டோம். அதன்பின் உண்டியலைப் பற்றியும் இந்திய வழிபாட்டு முறைகளையும் விளக்கினோம். ஆனால் உண்மையில் கோயில் உண்டியலில் பணம் போட்டு கோக்கோ கோலாவை எதிர்பார்ப்பதற்கும், உண்டியலில் பணம் போட்டதால் புண்ணியத்தை எதிர்பார்ப்பதற்கும் பெரிய வித்தியாசம் ஒன்றும் இல்லை!

அமெரிக்க நண்பனோ தனது பழைய நேர்த்திக்கடனைச் செலுத்தாததால் தன் பதவி உயர்வு தள்ளிப் போகிறதோ என்று சந்தேகித்து சில லட்சங்களைச் செலவழித்துக் கொண்டு டெக்ஸாசில் இருந்து திருவல்லிக்கேணி வந்திருக்கிறான்! நேர்த்திக் கடனைச் செலுத்திவிட்டு இறைவனிடம் பதவி உயர்வு தர வேண்டுகிறான். பிள்ளையோ உண்டியலில் போட்ட நூறு ரூபாய்க்கு கோகோ கோலா போன்ற பொருளை எதிர்பார்க்கிறான்! இதில் எந்த வித்தியாசமும் இல்லைதானே!

"தனக்குத் தர வேண்டிய நேர்த்திக் கடனை நிர்த்தாட்சண்யமாக வசூல் செய்யும் கந்துவட்டிக்காரனாக நீ கடவுளைப் பார்த்தாய். உன் மகன் கடவுளை ஒரு வியாபாரியாகப் பார்த்தான். எனக்கு என்னவோ உன்னைவிட உன் மகன் பரவாயில்லை என்றுதான் தோன்றுகிறது!" என்றேன் நண்பனிடம்.

நண்பனுக்குப் பேச்சு வரவில்லை. அவன் பார்வையில் இப்போது ஒரு புரிதல் உணர்வு இருந்தது!

(ரெங்கசாமி "கண்ணா வருவாயா!" என்ற நூலில்).


---

# மடிக்கணனி மின்கல பராமரிப்பு

டெஸ்க் ரொப் கம்ப்யூட்டர்களைக் காட்டிலும், லப் ரொப் கம்ப்யூட்டர்கள் தான் அதிக எண்ணிக்கையில் இப்போது பயன்படுத்தப் பட்டு வருகின்றன. இதனைப் பராமரிப்பதில், இதன் பற்றரிகளே முதல் இடம் பெறுகின்றன. பற்றரி பராமரிப்பிற்கான சில குறிப்புகள்:

எப்போதும் இணைப்பில் வேண்டாம்: உங்கள் லப்ரொப் கம்ப்யூட்டரை முதன் முதலில் சார்ஜ் செய்திடுகையில், அதனை 100வீத சார்ஜ் செய்திடவும். அதன் பின்னர், அதன் சார்ஜ் 40 வீதம் முதல் 80 வீதம் வரை என்ற அளவில் இருக்க வேண்டும். பற்றரியில் உள்ள இலத்திரன்கள் எப்போதாவது அங்கும் இங்கும் நகர்வதற்கான இடம் இருக்க வேண்டும். இந்நிலையில் பற்றரியை வைத்திருந்தால், பற்றரியின் வாழ்நாள் நான்கு பங்கு அதிகரிக்கும். எப்படி இந்த அளவினைக் கண்காணித்து வைத்திருப்பது? என்று கேட்கிறீர்களா? இதனை கம்ப்யூட்டர் திரையின் ஓரமாகக் கவனிக்கலாம். லப்ரொப் கம்ப்யூட்டரில் வேலை பார்க்கவில்லையா? உடன் அதனை நிறுத்தி, மூடி, மின்சக்தியிலிருந்து விடுவித்து, வீட்டில் வைக்கவும். மேசை அல்லது அதைப் போன்ற பரப்பில் வைக்கவும். மெத்தை போன்றவற்றில் வைக்க வேண்டாம். பற்றரியின் வெப்பம் வெளியேறுவதனை மெத்தை போன்ற பரப்பு தடுக்கும். இது பற்றரியின் வாழ்நாள் பயன்பாட்டினைக் குறைக்கும். அப்படிப்பட்ட பரப்பில் வைத்து இயக்குவதும் தவறு.

சார்ஜ் செய்தல்: மாதம் ஒருமுறையேனும், பற்றரியை முழுமையாக (100வீதம்) சார்ஜ் செய்திட வேண்டும். அதே போல, ஒரு முறையேனும், முழுமையாக அதன் மின்சக்தியைக் காலி செய்து பின் சக்தி ஏற்ற வேண்டும்.



குளிர்ச்சியாக இருக்கட்டுமே: தற்போது வரும் நவீன பற்றரிகள் அனைத்தும், லித்தியம் அடிப்படையாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டவை. எனவே இவற்றை 50 முதல் 95 பரனைட் (10 முதல் 30 செல்சியஸ்) அளவில் வைத்திருக்க வேண்டும். எனவே, நாம் பணியாற்றும் அறையைச் சற்றுக் குளிர் தன்மையுடன் வைத்திருக்க வேண்டும். அத்துடன் லப்ரொப் கம்ப்யூட்டரில் காற்று வெளியேறும் வழிகளைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். வெப்பக் காற்று விரைவாக வெளியேறுகிறதா என்பதனைக் கண்காணிக்க வேண்டும்.

அப்டேட் செய்திடுக: பல நிறுவனங்கள், தங்களின் சொப்ட்வேர் அப்ளிகேஷன்களை மேம்படுத்துகையில், பற்றரியின் திறனை மேம்படுத்தும் வழிகளையும் தங்கள் பைல்களில் தருகின்றன. எனவே, நாம் லப்ரொப் கம்ப்யூட்டரில் பயன்படுத்தும் சொப்ட்வேர் அப்ளிகேஷன்கள் அனைத்திற்கும் அவ்வப்போது, அப்டேட் செய்திடுவது பற்றரியின் வாழ்நாட்களையும் அதிகரிக்கும்.

நீண்ட நாட்கள் பயன்படுத்தாமல் இருப்பது நல்லதல்ல: ஏதேனும் காரணத்தினால், லப்ரொப் கம்ப்யூட்டரைப் பயன்படுத்தாமல், பல மாதங்கள் விட்டுவிடுவதாக இருந்தால், அதற்கான மாற்று ஏற்பாடுகளை மேற்கொள்ளவும். பற்றரியில் 50வீதம் மின் சக்தியுடன், குளிர்ச்சியான இடத்தில் அது வைக்கப்படுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். மொத்தமாக மின் சக்தி இல்லாத நிலையில் உள்ள பற்றரிகளுடன், லப்ரொப் கம்ப்யூட்டரைப் பல மாதங்கள் விட்டு வைப்பது, பின் எப்போதும் பயன்படுத்த இயலாத நிலைக்கு பற்றரியைக் கொண்டு சென்றுவிடும்.

---



# நில அபகரிப்பு தொடர்பாக...

## - சண்டே லீடர் பத்திரிகையில் எஸ்.நேரு என்னும் புலம்பெயர்தமிழர்

"நான் நீண்ட காலமாக பிரித்தானியாவில் வாழ்ந்த பின்னர் எனது சொந்த இடமான யாழ்ப்பாணத்திற்குத் திரும்பிச் சென்றேன். ஆனால் தனியார் ஒருவரால் எனது நிலம் அபகரிக்கப்பட்டிருந்தது. எனது நிலத்தில் குடியிருந்ததற்கான எவ்வித வாடகையும் அவர் என்னிடம் தரவில்லை. நான் நீதிமன்றில் வழக்குத் தொடுத்தேன்.

இரண்டு ஆண்டுகளாகியும் இது தொடர்பாக எவ்வித தீர்ப்பும் வழங்கப்படவில்லை. இந்த வழக்குத் தொடர்பாக நீதிமன்றில் விவாதிக்கப்படுகின்ற போது, எனது எதிராளியின் சார்பாக வாதிடும் சட்டவாளர் இதனை ஒத்திவைக்குமாறு கோருகிறார். யாழ்ப்பாண நீதிமன்றில் இவ்வாறான நில அபகரிப்பு வழக்குகள் மிகவும் அதிகமாகக் காணப்படுகின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பொதுமக்களின் நிலங்களைப் பாதுகாப்புப் படையினர் கையகப்படுத்தியுள்ளனர் எனக் கூறுகின்றனர். ஆனால் உள்நாட்டில் வாழும் தமிழ் மக்கள் பாதுகாப்புப் படையினரை விட அதிகமாக பொதுமக்களுக்குச் சொந்தமான நிலங்களை அபகரித்துள்ளனர்.

சிறியதொரு நிலப்பகுதியில் 10 ஆண்டுகளுக்கு மேலாக வாழும் தமிழ் மகன் ஒருவர் அது தனது காணி என வாதிடுகிறார். எனது நிலத்தில் குடியிருப்பவர் எனக்கு வாடகையாக ஒரு சதமேனும் தரவில்லை. ஆனால் இவர் தற்போது எனது நிலத்தை விட்டு வெளியேற மறுக்கிறார்.

இவ்வாறான வழக்குகளைத் தீர்மானிப்பதற்கான எவ்வித வழிகாட்டல்களையும் நீதிமன்றம் கொண்டிருக்கவில்லை. இந்த வழக்குகளை ஆறு மாதங்களுக்கு மேல் இழுத்தடிக்கக் கூடாது என நீதிபதிகளிடம் கூறவேண்டும். வழக்குக்களை விவாதிப்பதற்குத் தேவையான நீதிமன்றங்கள் இல்லாவிட்டால் அரசாங்கம் மேலதிக நீதிமன்றங்களை அமைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

நிலத்திற்குச் சொந்தமான உறுதி மற்றும் பத்திரங்களை வைத்திருப்பவர்களிடம் நிலத்தைத் திருப்பிக் கொடுக்க வேண்டும். ஒரு சில நிமிடங்களில் முடிவெடுக்கக் கூடிய மிகச் சாதாரணமான விவகாரமாக் இது காணப்படுகின்ற போதிலும் இந்த வழக்குகளுக்குத் தீர்வு காண்பதற்கு 5-6 ஆண்டுகள் எடுக்கின்றன.

நில உறுதியை அல்லது பத்திரத்தைக் கொண்டிருக்காத எவருக்கும் இலங்கை மின்சார சபை மின்வழங்கலை வழங்கக் கூடாது. வாடகைக்கு குடியிருப்பவராயின் வாடகையை உறுதிப்படுத்தும் பத்திரங்கள் வழங்கப்பட வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ வேறெந்த அரசியற் கட்சிகளோ இந்த விவகாரம் தொடர்பான கருத்துக்களை முன்வைப்பதில்லை.

காங்கேசன்துறை உயர் பாதுகாப்பு வலயத்தில் 6700 ஏக்கர் நிலப்பரப்பு இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ளது. இவை பாதுகாப்பு நோக்கங்களுக்காகவே எடுக்கப்பட்டுள்ளன. இந்த நில சுவீகரிப்பை - வீடுகளை மற்றும் நிலங்களை சட்டரீதியற்ற வகையில் அபகரித்து புலம்பெயர் தமிழ் நில உரிமையாளர்களை ஏமாற்றும் தமிழ் மக்களின் நில அபகரிப்புடன் ஒப்பீடு செய்ய முடியாது."




முனியாண்டி அடுக்குப் பானையில் நகைகளைப் பத்திரப்படுத்திக் கொண்டிருந்தான்.

" அப்பா நேற்று திருடினீங்களா?" என்றவாறே வந்தான் ரமணி.

" டேய் .. வேலையைப் பாருடா.."

# குற்றம் குற்றமே!

எரிந்து விழுந்தான். முனியாண்டி

" அப்பா ... திருடுவது பாவம்பா.. இந்த மோசமான தொழிலை விட்டுடுங்கப்பா.." சொல்லும் போதே ரமணியின் கண்களில் நீர் உருகியது.

" இந்தா முளைத்து மூணு இலை விடல. அதுக்குள்ள அப்பனுக்கே புத்தி சொல்லிறியா? சின்னப்பயலே.. வாயைப் பொத்திகிட்டு அந்தப்பக்கம் போய்த் தொலை.."என்று தன் மகனின் கழுத்தைப்பிடித்து தள்ளிவிட்டு வெளியே கிளம்பினான். தந்தை முனியாண்டி. அவன் தள்ளியதில் சுவரில் போய் மோதினான். ரமணி. தலையில் லேசாய்க் கசிந்த ரத்தத்தைத் துடைத்துக் கொண்டே விசும்பினான்.

அப்போது அங்கு வந்தாள் அவன் பாட்டி

" டேய் ரமணி .. உங்கப்பன் சரியான முரடன் அவனை என்ன சொன்னாலும் திருத்த முடியாது. அவன் புத்தி பேதலிச்சுப் போய் திருடுறான். நீ ஏண்டாவாயை குடுத்து வாங்கிக்கட்டுற? என்று சொன்னவாறே ஆதரவாய் அவன் தலையைக் கோதி விட்டாள். பாட்டி

" பாட்டி ...பணத்தை இழந்தவங்க எப்படித்துடிப்பாங்க தெரியுமா பாட்டி? இவரு பத்து நாளைக்கு முன்னால் ஒரு வீட்ல போயி திருடியிருக்காரு. பாவம் அந்த வீட்டுக்காரர் அவரோட ஒரே மகளுக்கு இருபது பவுண் நகையைக் கல்யாணத்துக்காகச் சேர்த்து வைச்சிருக்காரு. அப்பா அந்த நகையைத் திருடவும்..."

அந்த வீட்டுக்காரரு அழுதாரு: புலம்பினாரு: கடைசியில் அவர் வாழ்க்கையை முடிச்சுக்கிட்டாரு: பாவம் இப்ப அவரோட மகள் ஆதரிக்க யாருமில்லாம இருக்குதாம். நாலு நாளைக்கு முன்னால இந்தச் செய்தி பேப்பர்ல வந்துச்சு. நீயே சொல்லு பாட்டி திருடுறது. பாவம் தானே? இதுக்கு அந்த ஆண்டவன் அப்பாவை ஒருநாள் தண்டிச்சே தீருவான்?"

விசும்பலுடன் காட்டமாய்ச் சொன்னான் ரமணி

"டேய் மெதுவாப் பேசடா... உங்கப்பன் காதுல விழுந்தா போகுது. சின்னஞ்சிறுசு உனக்கிருக்கிற மனசு உங்கப்பனுக்கில்லையே? அவனைப் பெத்த என் வயிறு பத்தி எரியுதடா." என்று பாட்டி பேசிக் கொண்டிருக்கும் போதே அங்கு வந்தான் முனியாண்டி

"ஏய் கிழவி ... அவன்தான் புரியாமப் சேறான்னா அவனுக்கு நீ தூபம் போடுறியா? அடிச்சுக் கையைக் காலை உடைச்சுப் போட்டுட்வேன்.." உறுமினான்.

' அதையாவது செய்யுடா, பாவி.. உன்னைப் பெத்த பாவத்துக்கு அந்தத் தண்டனையாவது கிடைக்கட்டும்.'

"இதோபார்... புரியாமப் பேசாதே பணம் தான் எல்லாமே. பணம் இல்லாட்டா நம்மை ஒருத்தனும் மதிக்க மாட்டான். இரண்டு மாதத்துக்கு முன நால பணமில்லாத காரணத்தாலே மரகதத்தைப் பறிகொடுத்தேன். அவ வயித்துலே வளர்ந்த கட்டியை நீக்குறதுக்கு ஆபரேஷன் செய்யனுமுன்னு சொன்னாங்க. அப்ப மட்டும் முப்பதாயிரம் இருந்திருச்சுன்னா நான் அவளைக் காப்பாத்தியிருப்பேன் . கண்டவன் காலிலே எல்லாம் பணத்துக்காக விழுந்தேன். ஆனா ஒருபய கடன் குடுக்கல பாவி மக ... ஆபரேஷன் செய்ய முடியாமலேயே நம்மைத் தவிக்கவிட்டுட்டுப் போயிட்டா. அன்னைக்குத்தான் முடிவெடுத்தேன். பணம்தான் உலகம்னு. பணம் மட்டும் இருந்தா இந்த உலகத்துல எதை வேணும்னாலும் சாதிக்கலாம். பணத்துக்காக திருட ஆரம்பிச்சேன். இது தப்பா? நான் திருடுறது நமக்காகத்தானே?"

"ச்சீய். எடுபட்டபயலே.. திருடுறதே தப்பு. அதுக்கு நீ நியாயம் வேற கற்பிக்கிறியா? இதோ பாருடா.. பணம் முக்கியம்தான் ஒத்துக்கிறேன். ஆனா அந்தப்பணம் உழைப்பால நேர்மையான வழியில் கிடைச்ச பணமா இருக்கணும். அப்பத்தான் அது நிலைக்கும் பாரேன்... நீ ஒரு நாளைக்கு போலீஸ்காரங்கிட்ட மாட்டத்தான் போற..".

" கிழவி சாபம் விடுறியா?"

" ஆமாடா..பலநாள் திருடன் ஒரு நாள் அகப்படுவான்னு சொல்லுவாங்க நீ திருடிப் பணம் சேர்த்தது போதும் இன்னும் உன் ஆசை அடங்கலையா? இதோட விட்டிடுடா.."

"ப்ச்.. அதெல்லாம் முடியாது. போய் முதல்ல உன் வேலையைப் பாரு.." என்று கோபத்துடன் சொல்லிவிட்டு வெளியே கிளம்பினான். முனியாண்டி இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த ரமணி, தன் தந்தையை நினைத்து வெறுப்பும், ஆத்திரமும் அடைந்தான்.

அன்று அமாவாசை.

முனியாண்டி சுற்றும் முற்றும் பார்த்தவாறே அந்ததெருவுக்குள் நுழைந்தான். அந்தத் தெருவிலேயே டாக்டர் சுப்பிரமணியன் வீடுதான் பெரியது. வீட்டுக்குள் மெதுவாக நுழைந்தான். ஜன்னல் வழியாக உள்ளே எட்டிப்பார்த்தான். அனைவரும் நன்றாக உறங்கிக் கொண்டிருந்தார்கள்.

கள்ளச்சாவி போட்டு கதவைத் திறந்து உள்ளே புகுந்தான். அலுமாரியை நெருங்கினான். அதையும் கள்ளச்சாவி போட்டுத் திறந்தான். உள்ளே 50 ரூபாய்க்கட்டுக்கள் மூன்று இருந்தன. பணக்கட்டுக்களை எடுத்து தன் பையில் பத்திரப்படுத்தினான்.

"அய்யோ திருடன் ... திருடன் யாராவது ஓடிவாங்க.."

பலத்த சத்தம் ஜன்னல் வழியாகக் கேட்டது.

திடுக்கென அதிர்ந்தான். முனியாண்டி வந்த வழியே விரைந்து ஓட எத்தனித்தான். ஆனால் கதவு வெளியே தாழ்ப்பாள் போட்டு பூட்டப்பட்டிருந்தது. தான் வகையாக மாட்டிக்கொண்டதை. உணர்ந்து படபடக்கும் இதயத்தோடு வேறு ஏதாவது வழி இருக்கிறதா என்று சுற்றும் முற்றும் பார்த்தான்.

"அய்யோ.. திருடன் ... அய்யோ .. திருடன் என்று ஜன்னல் வழியாக மீண்டும் அந்தக்குரல் கேட்டது. அதே நேரத்தில் வீட்டுக்காரர்கள் அந்த அறையைச்சூழ்ந்து கொண்டார்கள். மின் விளக்குகள் போடப்பட்டன

முனியாண்டி வகையாக மாட்டிக்கொண்டான். அனைவரும் ஜன்னல் வழியாக முனியாண்டி பணப்பையுடன் இருப்பதையும் அலுமாரி திறந்திருப்பதையும் கண்டு அதிர்ச்சியடைந்தார்கள். வெளித்தாழ்ப்பாள் அப்படியே போடப்பட்டிருக்க. யாரும் கதவைத்திறக்கவில்லை.

டாக்டர் சுப்பிரமணியன் பொலிஸக்கு போன் செய்தார். "ஆமா திருடன் திருடன்னு யார் கூப்பிட்டது? என்று சுற்றும் முற்றும் தேடினார்.

ஜன்னல் ஓரமாக ரமணி நின்றிருந்தான்.

"தம்பி யாருப்பா நீ? எப்படி இங்கே வந்தே என்று கேட்டார். டாக்டர் சுப்பிரமணியன்.

"என்பேரு ரமணி..."

"வெரிகுட் ... நீ ஒரு திருடனைக் காட்டித்தந்திருக்கே.. நீ மட்டும் இல்லேன்னா எங்க பணமெல்லாம் திருட்டுப் போயிருக்கும்."

அவன் முதுகில் தட்டிக்கொடுத்தார்.

சற்று நேரத்தில் பொலிஸ் வந்து முனியாண்டியைக் கைது செய்தது."

அடே பாவிப்பயலே.. பெத்த அப்பன்னுகூட பார்க்காம இப்படிக்காட்டிக் குடுத்துட்டியேடா.."என்று பொருமினான் முனியாண்டி

ரமணிக்கு லேசாகக் கண்கள் கலங்கின.

வீட்டுக்காரர்கள் பொலிஸ்காரர்கள். அனைவருக்கும் ஒரே அதிர்ச்சி!

என்னது? .. இந்தச்சிறுவன் திருடனின் மகனா? என்று அதிர்ச்சியுற்றார்கள்.

"தம்பி.. அவன் உன்னோட அப்பனா? "

"ஆமா..." என்று தலையசைத்தான் ரமணி



"கைகுடுதம்பி. பெத்த அப்பன்னு கூடப் பார்க்காம இவனைக்காட்டித் தந்திருக்கே யு.ஆர்.வெரி கிரேட்.." இன்ஸ் பெக்டரின் முகத்தில் மகிழ்ச்சி பரவியது." சார் இவ்வளவு நாளா திருடுறது பாவம்னு எங்கப்பாகிட்ட சொல்லிப் பார்த்தேன். அவர் திருந்தல. இன்றைக்கு அவருக்குத் தெரியாமலே அவருக்குப் பின்னால வந்து ஒளிச்சிருந்து திருடன் திருடன்னு கத்தி. காட்டிக் கொடுத்திட்டேன். குற்றம் யார் செஞ்சாலும் குற்றம் தான்சார்... அப்பா மகன்னு உறவு கிடையாது நான் ஒரு திருடனைக் காட்டிக்கொடுத்திருக்கேன். அவ்வளவு தான்.""தம்பி ... உனக்கு அம்மா இருக்காங்களா?"

"இல்ல சார் ...எனக்குத் தாத்தாவும் பாட்டியும் தான் இருக்காங்க.."

இனிமே எங்கே தங்குவாய்"..." கலங்கியவாறு நின்றிருந்தான் ரமணி.

இன்ஸ்பெக்டர் வாஞ்சையோடு கேட்டார்.

"தம்பி நீ என்னோட வந்துடுறியா? எனக்குக் குழந்தையே இல்லை. உன்னை எம் புள்ளையா வளர்க்கிறேன். நல்லாப்படிக்க வைத்துப் பெரிய உத்தியோகம் வாங்கித் தர்றேன்.."

"ரமணி சரியென்று தலையசைத்தான்.

இன்ஸ்பெக்டர். முனியாண்டியை ஜீப்பின் பின்புறம் கைவிலங்கிட்டு அமர வைத்தார். ரமணியைத் தன்னுடன் அமர வைத்துக்கொண்டு ஸ்டேஷனை நோக்கிக்கிளம்பினார்.

ஏனோ முனியாண்டிக்கு மனம் கனத்தது!

"குற்றம் செய்தவர் யாராக இருந்தாலும் அவர் பாகுபாடு இல்லாமல் தண்டிக்கப்பட்டே தீரவேண்டும்."

# கிளி.மாவட்ட கமக்கார அமைப்புக்கள் மீளமைக்கப்பட வேண்டும்

## விவசாயிகள் கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் பல கமக்கார அமைப்புக்கள் மிக நீண்ட காலமாக ஜனநாயக ரீதியாக தெரிவு செய்யப்படாமல் காணப்படுவதாக விவசாயிகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கிராமங்களில் காணப்படுகின்ற மக்கள் அமைப்புக்கள் அதாவது கிராம அபிவிருத்திச் சங்கம்,மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்,கமக்கார அமைப்பு போன்றன ஜனநாயக ரீதியாக இரண்டு வருடத்திற்கு ஒரு முறை மக்களால் தெரிவு செய்யப்பட வேண்டும். ஆனால் கிளிநொச்சியில் பல அமைப்புக்களில் மிகவும் நீண்ட காலமாக ஒரே நிர்வாகத்தினரே காணப்படுகின்றனர்.சில கிராமங்களில் குறிப்பிட்ட சில நபர்கள் நிர்வாகத்தில் வரவேண்டும் என்பதற்காக முறைப்படி நிர்வாகத்தெரிவுக்கு அழைப்பு விடுத்து கூட்டங்கள் கூட்டினாலும் அங்கு திட்டமிட்டு மக்களை கலந்துகொள்ளச்செய்யாது கோரமின்னையை காரணம்காட்டி பதவிகளில் இருப்பவர்கள் தொடர்ந்தும் தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றனர்.

உதாரணமாக கிளிநொச்சி அக்கராயன்குளம் நாகதம்பிரான் கமக்கார அமைப்பு 26 வருடங்களாகவும், ஊரியான் கமக்கார அமைப்பு 29 வருடங்களாகவும், முரசுமோட்டை கமக்கார அமைப்பு 18 வருடங்களாகவும் ஒரே நிர்வாகத்தின் கீழே செயற்பட்டு வருகின்றது என அந்தபிரதேசங்களின கமக்காரர்கள் தெரிவித்துள்ளனர். எனவே இந்த நிலைமைகளை மாற்றி புதிய நிர்வாகத்தெரிவுகளை மேற்கொண்டு ஆரோக்கியமான செயற்பாடுகளுக்கு வழி சமைக்க வேண்டும் என பிரதேச கமக்காரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்

சில இடங்களில் இதற்கு பொறுப்பாகவுள்ள அதிகாரிகளும் ஒத்துழைப்பு வழங்கி வருவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.இதேவேளை கடந்த வாரம் இடம்பெற்ற கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சந்திரகுமார் மற்றும் சிறிதரன் ஆகியோர் இது தொடர்பாக மாவட்ட கமநல சேவைகள் உதவி ஆணையாளரிடம் கேள்வி எழுப்பினார்கள். இதற்கு பதிலளித்த உதவி ஆணையாளர் தயாரூபன் எதிர்வரும் ஜனவரி மாதம் 31 இற்கு முன்னர் ஜனநாயக முறையில் தெரிவுகளை மேற்கொண்டு முடிப்பதாக உறுதியளித்தார். (29)

# சிறப்புற நடைபெற்றது மாற்றுத்திறனாளிகள் தினம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், வடமாகாண மாற்றுத்திறனாளிகள் தின நிகழ்வுகள் கைதடி நவீல்ட் பாடசாலையில் வடமாகாண சமூக சேவைகள் திணைக்கள பணிப்பாளர் திருமதி நளாயினி இன்பராஜ் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.



வடமாகாணத்திலுள்ள 33 பிரதேச செயலர் பிரிவுகளில் இருநதும் சிறந்த சமூகசேவைகள் செய்த தலா ஒவ்வொரு மாற்றுததிறனாளி தெரிவு செய்யப்பட்டு சிறப்பு பரிசில் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

மாவட்ட ரீதியாக மாற்றுத் திறனாளிகளிடையே நடாத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.

மாற்றுத்திறனாளிகள், சங்கங்கள் ஒழுங்கு செய்த கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. இந்நிகழ்வுகளுக்கு பிரதம அதிதியாக யாழ். போதனா வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் கே.நந்தகுமார் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ் தேசிய கல்வியியல் கல்லூரி விரிவுரையாளரும் வாழ்வக நிறுவன தலைவருமான ஆ.ரவீந்திரன், கைதடி நவீல்ட் பாடசாலை அதிபர் வி.எஸ்.மகேந்திரன், நல்லூர் இந்து தமிழ் கலவன் பாடசாலை அதிபர் ந.சத்தியபாலன், குடும்ப புனர்வாழ்வு நிறுவனத்தின் வடமாகாண இணைப்பாளர் வி.பிறேம்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர். (90)

## கலாசார விழா

ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தின் கலாசார விழா எதிர்வரும் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை அனலைதீவு ஐயனார் ஆலய திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கடந்த 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடை பெறவிருந்த இவ்விழா. தவிர்க்க முடியாத காரணத்தால் எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு பிற்போடபபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



பிரிட்டிஷ் கவுன்சிலின் ஏற்பாட்டில் யாழ் பொது நூலகத்தில் சிறுவர்களுக்கான கதை சொல்லும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இதன்போது பிரிட்டிஷ் கவுன்சிலின் யாழ். கிளை அதிகாரி மண்டா கதை சொல்வதைக் காணலாம்.

# பதிவிறக்கப் பெட்டகம்

நாங்கள் முதலில் இயற்கையை வழிபட்டவர்கள். பிள்ளையார் என்பது இயற்கைக்கு கொடுத்த உருவகம். சிறிது மாட்டின் சாணத்தை உருட்டி அதன் மீது அறுகம் புல்லைச் சொருகிவிட்டு பிள்ளையார் என்கிறோம். இது இயற்கையான உருவகம் அல்லவா.

இதை முன்வைத்துத்தானே எல்லாக் காரியங்களையும் செய்கிறோம். எங்கே குளத்தோரம் பெரிய மரம் நிற்கிறதோ அங்கே அதன்கீழ் ஒரு கல்லை வைத்துவிட்டு மரத்தை வணங்குகிறோம். உண்மையில் மரத்தைத்தானே வணங்குகிறோம்.

நானும் சிறுவயதிலிருந்தே மரத்தை அதன் சூழலை நேசித்து வணங்கி வளர்ந்தவன். வறுமை வேறு. வெய்யிலோடும் புழுதியோடும் மழையோடும் வெள்ளத்தோடும் பனியோடும் இசைந்தே வாழ்ந்தோம். மாரிகாலம் வந்தால் தவளைச் சத்தமின்றி தூக்கமில்லை. மாசிக் குளிருக்கு அம்மாவின் பழஞ் சேலையை விட்டால் வேறு போர்வை இல்லை. பங்குனி, சித்திரையில் சஞ்சீவி மலைபோல் வெள்ளத்தோடு வந்த எல்லா வகையான புல்பூண்டுகளும் எங்கள் வளவில் முளைக்கும்.

இதுதான் என் வாழ்வியல். எவ்வளவு வசதிவந்த போதும் இந்த வாழ்வையே மனம் அவாவுகிறது. இனிக் கிடைக்கப் போவதில்லை என்று தெரிந்தும் இந்த வாழ்வே எனக்குள் நிறைநதும் கிடக்கிறது. கவிதையும் அதனூடு இசைந்ததே.

**– திருமாவளவன்**

ஒருமுறை ஒரு கிராமவாசி நபியவர்களிடம் வந்து, 'நீங்கள் சிறு பிள்ளைகளையெல்லாம் முத்தமிடுகிறீர்களாமே? நாங்களெல்லாம் அவர்களை முத்தமிடுவதில்லை' என்றார். அப்போது நபிகள் நாயகம், 'இறைவன் உமது இதயத்திலிருந்து அன்பைக் கழற்றி விட்ட பிறகு உமக்காக நான் என்ன செய்ய முடியும்?" என்று கேட்டார்கள்.

குழந்தைகள் மீது அன்பை வெளிப்படுத்தும் வகையில் அவர்களைக் கொஞ்சுவது, முத்தமிடுவது போன்றவை நபி வழியாகும். குழந்தைகள் மீது கோபம் கொள்வதும், அவர்களைத் திட்டுவதும் நபிவழிக்கு எதிரானவை. குழந்தைப் பருவத்தை அனுபவிக்க குழந்தைகளை நாம் அனுமதிக்க வேண்டும். அவர்களது வயதிற்கப்பாற்பட்ட, சக்திக்கு மீறிய விஷயங்களை அவர்கள் மீது திணிக்கக் கூடாது. சொல்லாலும் செயலாலும் குழந்தைகளுக்கு நாம் கற்றுத் தரும் எல்லாப் பாடமும் பயிற்சியும் அன்பையும் மையப்படுத்தியதாகவே இருக்க வேண்டும்.

**– பேராசிரியர் ஸாஹிர் ஹுஸைசன்**

புத்தர் போதித்ததின் சாராம்சம்தான் என்ன? 1) பொய் சொல்லாதீர் 2) களவு செய்யாதீர் 3) கொலை செய்யாதீர் 4) போதை மது குடிக்காதீர் 5) பிறன்மனை நயவாதீர்.

என்றால், எல்லாக் குழந்தையும் புத்தன்தான். வளர்ந்து வருகையில் என்ன நேர்கிறது? குடும்பம், தனிச்சொத்து, அரசு குறுக்கிடுகிறது. சிக்கலும் அங்குதான். ஆனால் ஒருவன் 'சகோதரத்துவம்' மூலம் இதை வெல்லலாம் என்கிறார் அம்பேத்கர்.

**ஒரு 'ஜென்' பௌத்தக் கதை:**

இரண்டு துறவிகள், பனிப்பொழிவில் நெடுந்தூரம் நடந்து வந்து, பொழுது மங்கிய பொழுதில் ஆசிரமத்தை அடைந்தனர். அங்கே ஒரு மரக்கட்டை கிடந்தது. அதை வெட்டி விறகாக்கி, தீமூட்டி, இருவரும் குளிர்காய்ந்தனர். விடிந்து பார்த்தால் அவர்கள் வெட்டி விறகாக்கிய மரக்கட்டையோ புத்தர் சிலை. குருவானவர் சொன்னார், "இதற்குக் கூடப் பயன்படவில்லை என்றால், அப்புறம் அவர் என்ன புத்தர்?" **– ராஜசுந்தரராஜன்**

'குருவே சரணம்' என்று மந்திரித்து விட்ட அடிமைகள் போல் கும்பிடுபவர்கள் நிச்சயம் கல்வியறிவு பெற்று சமூகத்தின் உயர்நிலையில் உள்ளவர்களாகத்தான் இருப்பார்கள். ஆட்டு மந்தை கல்விக்கும் பகுத்தறிவிற்கும் உள்ள வித்தியாசம் இதுவே. சமயங்களில் இவர்களை விட பாமரர்களே சுயசிந்தனை உள்ளவர்களாக இருக்கிறார்கள். பொருளாதார ரீதியில் உயர்ந்த நிலையில் இருந்தாலும் இந்த கல்விமான்களிடம் உள்ள தாழ்வுணர்வும் குற்றவுணர்வும் பேராசையுமே போலிச் சாமியார்களிடம் மண்டியிட வைக்கிறது.

அதன் நிறைகுறைகளோடு பெரியார் என்கிற ஆளுமை மாத்திரம் மலர்ந்திருக்காவிட்டால் இந்தப் பிரதேசமே குருட்டுத்தனமான ஆட்டுமந்தைகளால் நிரம்பி பண்டாரங்கள் ஆளும் பைத்தியக்கார விடுதியாகியிருக்கும். நினைத்துப் பார்க்கவே பயங்கரமாக இருக்கிறது. **– சுரேஷ் கண்ணன்**

# மேலும் 800 பேருந்துகள் சீனாவிலிருந்து இறக்குமதி

(கொழும்பு)

சீனாவிலிருந்து மேலும் 800 பஸ்கள் இந்த மாத இறுதியில் இறக்குமதி செய்யப்படவுள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது.

கிராமிய போக்குவரத்து சேவைகள் மற்றும் நகரங்களுக்கிடையிலான சேவைகளுக்காக இந்த பஸ்களை பயன்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபையின் பிரதித் தலைவர் எல்.ஏ.விமலரத்ன தெரிவித்துள்ளார்.

சீனாவில் கொள்வனவு செய்யப்பட்ட 2,200 பஸ்களில் இதுவரை i,600 பஸ்கள் ஏற்கனவே நாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

அதில் பெரும்பாலான பஸ்கள் ஏற்கனவே இலங்கை போக்குவரத்துச் சபை டிப்போக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாக எல்.ஏ.விமலரத்ன மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# அமெரிக்கத்தூதுவர் இலஞ்சம் தர முயற்சியா? முற்றாக மறுக்கும் அமைச்சர் குணரத்ன

## உரை திரிவுபடுத்தப்பட்டதாகவும் தெரிவிப்பு



(கொழும்பு)

அரசாங்கத்துக்கு எதிராகச் செயற்படுவதற்கு, அமெரிக்கத் தூதுவராக இருந்த மிச்சேல் ஜே சிசன் தனக்கு இலஞ்சம் தர முயற்சிக்கவில்லை என மீள் குடியேற்ற அமைச்சர் குணரத்ன வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கத் தூதுவராக இருந்த மிச்சேல் சிசன், அரசாங்கத்துக்கு எதிராகச் செயற்படுவதற்காக, தனக்கு அமெரிக்காவில் வீடு, கிறீன்கார்ட் வதிவிட உரிமை, உள்ளிட்ட சலுகைகளைத் தர முயன்றார் என்று, அண்மையில் அரசியல் கூட்டம் ஒன்றில் உரையாற்றியிருந்தார் அமைச்சர் குணரத்ன வீரக்கோன்.

இந்தக் குற்றச்சாட்டு குறித்த தகவல்கள் பரபரப்பாக ஊடகங்களில் வெளியான நிலையில், அவர் கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றிடம், தாம் அவ்வாறு கூறவில்லை என்று தெரிவித்துள்ளார்.

ஊடகத் தகவல்கள் பொய்யானவை. எனக்கு அவ்வாறு எந்த சலுகைகளும் அளிக்க முன்வரவில்லை.

இதுதொடர்பான எனது விளக்கத்தை ஏற்கனவே வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிசுக்கு அனுப்பியுள்ளேன். 2012 ஆம் ஆண்டு எனது அமைச்சில், அமெரிக்கத் தூதுவருடனான கலந்துரையாடல் இடம்பெற்றது.

அப்போது அவர் மீள்குடியேற்றப் பணிகளுக்கு அமெரிக்கா உதவும் என்று வாக்குறுதி அளித்தார். அந்தக் கலந்துரையாடலின் போது, உயர்பாதுகாப்பு வ்லயங்களில் இருந்து படையினரை அகற்றுவது சாத்தியமா என்று அமெரிக்கத் தூதுவர் கேள்வி எழுப்பியிருந்தார்.

மீள்குடியேற்ற அமைச்சர் என்ற வகையில், எனக்கு உயர் பாதுகாப்பு வலயங்களில் இருந்து படையினரை அகற்றும் அதிகாரங்கள் இல்லை என்று அமெரிக்கத் தூதுவருக்குப் பதிலளித்தேன்.

இதுதொடர்பாக ஆயுதப் படைகளின் தளபதி என்ற வகையில், ஜனாதிபதியும், பாதுகாப்புச்செயலரும் தான் நடவடிக்கைகளை எடுக்க முடியுமெனவும் அவரிடம் கூறினேன். அண்மையில் அரசியல் மேடை ஒன்றில் நான் உரையாற்றிய போது இது குறித்து குறிப்பிட்டவற்றில் தேவையான பகுதிகள் நீக்கப்பட்டு, ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டுள்ளன.

அதனால், எனது உரை தவறாக அர்த்தப்படுத்தப்பட்டு, பாரிய குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஜனாதிபதித் தேர்தல் குறித்த ஊடக எதிர்வுகூறல்கள் பொய்

## அரசாங்கம் தெரிவிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக சில ஊடகங்கள் வெளியிட்ட எதிர்வுகூறல்கள் பிழையானது எனவும் இந்த எதிர்வுகூறல் கணக்குகள் சிறுவர் பாடசாலை மாணவர்கள் போடும் கணக்கிற்கு நிகரானது எனவும் அரசாங்கம் தெரிவித் துள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதம் 8ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் சில ஊடகங்களில் தகவல் வெளியிடப்பட்டிருந்தது.

எனினும், இந்த தகவல்களில் உண்மையில்லை என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

ஆளும் கட்சியிலிருந்து வலகி எதிர்க்கட்சியில் இணைந்து கொண்டவர்களின் வாக்குகளை கணக்கிட்டு அதன் அடிப்படையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ தோல்வி யைத் தழுவுவார் என சிலர் தப்புக் கணக்கு போடுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கணக்குகள் சிறுவர் பாடசாலை மாணவர்கள் போடும் கணக்கிற்கு நிகரானது என அவர் தெரிவித்துள்ளார்.

ஆளும் கட்சியிலிருந்து விலகியவர்களின் வாக்குகளை மைத்திரிபால சிறிசேனவின் கணக்கில் சேர்க்க முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மைத்திரிபால சிறிசேனவிற்கு ஆதரவளிக்கும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸவிற்கு எதிராகவே கடந்த காலங்களில் செயற்பட்டுள்ளதாகவும் இந்த ஜனாதிபதித் தேர்தலிலும் எதிராகவே செயற்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# 10 முஸ்லிம் இளைஞர்களை புலிகள் கடத்திச் சென்றனர்

## வவுனியாவில் சாட்சியம்

வவுனியா, செட்டிகுளம் பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணையின் போது முஸ்லிம் இளைஞர்கள் பத்துப் பேரை விடுதலைப் புலிகள் கடத்தினர் என்று உறவினர்கள் சாட்சியமளித்தனர்.

1990 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 09 ஆம் திகதி அதிகாலை ஒரு மணியளவில் மாசிம் பிலர்கட கிராமத்தில் உள்ள எங்களது வீடுகளுக்குள் புகுந்த புலிகள் எமது பிள்ளைகளையும் உறவுகளையும் கடத்திச் சென றனர்.

கைகளை பின்னால் கட்டி அவர்களை கொண்டு சென்றவர்கள் இன்று வரை அவர்களை விடவில்லை. அவர்கள் இருக்கிறார்கள் என்ற நம்பிக்கை எமக்கில்லை என்று உறவினர்கள் சாட்சியம் அளித்துள்ளனர். இதன்போது ஆணைக்குழுவினர், மரணச் சான்றிதழைப் பெறப் போகின்றீர்களா எனக் கேட்டனர்.


இதற்கு ஆம் எனத் தெரிவித்த அவர்கள் மரணச் சான்றிதழ்களையும், நஷ்டஈட்டையும், சமுர்த்தி உதவிகளையும் பெற ஆணைக்குழுவிடம் இணக்கம் தெரிவித்தனர்.

# அரசு பக்கம் தாவினார் ஐ.தே.க. மாகாண உறுப்பினர்

ஐக்கிய தேசியக் கட்சியின் ஊவா மாகாண சபை உறுப்பினர் ஜானக திஸ்ஸ குட்டியாராச்சி ஆளும் கட்சியில் இணைந்து கொண்டுள்ளார்.

ஜனாதிபதி மாளிகைக்கு நேற்று சென்ற திஸ்ஸ குட்டியாராச்சி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவு அளிப்பதாக கூறியுள்ளார்.

கடந்த ஊவா மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் மொனராகலை மாவட்டத்தில் போட்டியிட்ட திஸ்ஸ குட்டியாராச்சி 18 ஆயிரம் விருப்பு வாக்குகள் பெற்று மாவடடத்தில் மூன்றாம் இடத்தில் வெற்றிபெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.



# தேர்தல் பதற்றம் தீரமுன்னர் பாப்பரசர் வருவது பொருத்தமல்ல

## அநுராதபுரம் பேராயர் தெரிவிப்பு

(கொழும்பு)

பாப்பரசர் முதலாம் பிரான்ஸிஸ் எதிர்வரும் ஜனவரி 13ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்வது பொருத்தமற்றது என அனுராதபுரம் பேராயர் நோபட் அந்ராதி ஆண்டகை தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனவரி மாதம் 13ஆம் திகதி பாப்பரசர் இலங்கைக்கு விஜயம் செய்வது பொருத்தமற்றது என்பதே எனது தனிப்பட்ட கருத்தாகும்.

எதிர்வரும் ஜனவரி மாதம் 8ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது.


தேர்தல் முடிவுகள் வெளியாகி பதற்ற நிலைமை தணிவதற்கு முன்னதாக பாப்பரசர் இலங்கைக்கு விஜயம் செய்வது எந்தளவிற்கு பொருத்தமானது என்பதனை பொறுப்பு வாய்ந்தவர்கள் தீர்மானிக்க வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்று முடிந்த உடனேயே பாப்பரசர் இலங்கைக்கு விஜயம் செய்வது பொருத்தமற்றது.

பேராயர் சபையில் அங்கம் வகிக்கும் பல பேராயர்களின் நிலைப்பாடும் இதுவாகவே உள்ளது.

சில அரசியல்வாதிகள் பாப்பாண்டவரின் படத்தை ஜனாதிபதி தேர்தல் பிரசார பணிகளுக்கு பயன்படுத்திக் கொண்டுள்ளமை வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டுமென நோபட் அந்ராதி ஆண்டகை தெரிவித்துள்ளார்.

# இரண்டு வாரத்தில் உயர்தர பெறுபேறு




(கொழும்பு)

கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளை அடுத்த இரண்டு வாரங்களுக்குள் வெளியிடவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

பெறுபேறுகளை பட்டிய லிடும் நடவடிக்கை இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ.எம்.என்.ஜே.புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

இம்முறை உயர் தரப் பரீட்சையில் இரண்டு இலட்சத்து 34 ஆயிரத்து 197 பாடசாலை பரீட்சார்த்திகளும், 62 ஆயிரத்து 134 தனியார் பரீட்சார்த்திகளும் தோற்றியிருந்தனர்.

இதேவேளை, நடைபெற்று வருகின்ற கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் முறைகேடு இடம்பெற்றதாக இதுவரை எவ்வித தகவலும் பதிவாகவில்லை எனவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் கூறியுள்ளார்.

# தேர்தல் காலத்தில் கைபேசி குற்றம் சாட்டுகிறது கபே



(கொழும்பு)

அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தேர்தல் காலத்தில் பொதுமக்களுக்கு கையடக்கத் தொலைபேசி வழங்கியுள்ளதாக கபே அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

தேர்தல்கள் ஆணையாளரினால் 2014.12.04 ஆம் திகதி வெளியிடப்பட்ட PCE/2015/19/ ALL D 16 எனும் கடிதத்தில் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் 'கலகுன' எனும் நிகழ்ச்சியை எதிர்வரும் ஜனவரி 15 ஆம் திகதி வரை ஒத்தி வைக்குமாறு அமைச்சர் ரஞ்ஜித் சியம்பலாப்பிட்டியவுக்கு அறிறுத்தல் வழங்கப்பட்டிருந்தது.

இருப்பினும் இந்த அறிவுறுத்தலை மீறி இந்நிகழ்ச்சியை அவர் நடாத்தியுள்ளதாக அமைச்சருக்கு எதிராக கபே அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது. மாத்தறை சணச மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றின் போது அமைச்சர் கையடக்கத் தொலைபேசி வழங்கியுள்ளதாக அவ்வமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளது.

20) தோடம்பழம் ஒன்றின் விலை யாது? (1) ரு 10 (2) ரூ. 6 (3) ரூ.4

21) மாம்பழம் 4 இனதும் தோடம்பழம் 2 இனதும் விலை யாது?
(1) ரு 30 (2) ரூ. 28 (3) ரூ. 26

மடித்து படத்தில் காட்டப்பட்டவாறு வெட்டும்போது கிடைக்கும் அமைப்பு யாது?

22)





வெற்றுக்கூட்டில் வரும் விடை யாது?

23) 617, 167 , 176, 716 , ☐ (1) 671 (2) 761 (3) 176

24) 2233, 2323, 2332, 3223, 3232, ☐ (1) 3322 (2) 2233 (3) 2323

வட்டத்தினுள் வரும் விடை யாது?


25)




(1) 22 (2) 42 (3) 21

புள்ளிக்கோட்டில் வரும் விடையின் கீழ் கோடிடுக.

26)




(1) 14 (2) 16 (3) 18

## நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

(01) 1. 2 2. 1 3. 1 4. 1 5. 3 6. 1 7. 2 8. 1 9. 3
10. 1 11.3 12.2 13. 1 14.2 15.2 16.2 17.1 18.1
19.2 20.1

(02) 1. 24,26 2. 38,40 3. 59,61

(03) 4. 04,28 5. 83 6. 97 7. 72

(04) 8. 54 9.30 10. 29 11.66

(05) 12. 8மணி 13. 9 மணி 14. 11 மணி

(06) 1. 21 2. 51 17.பி.ப.5மணி 18. 30 19. 16 20. செவ்வகம்
21. 12,18,25,36 22. 54.00 23.8 24. 40 25. 31

(07) 26. 2 27. 1 28. 3 29. 1



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2015

பகுதி - I
1.30 மணி


# கல்வி முரசு

வெளியீடு 1




முதல் உருவை ஒத்திராத உருவின் கீழ் கீறிடுக.

01)



(1) (2) (3)


02)



(1) (2) (3)

கீழே தரப்பட்ட அமைப்பு இரண்டு கூட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அதில் சரியாக பிரிக்கப்பட்ட கூட்டம் எதுவெனக் கண்டு கீறிடுக.


03)



A B C D E F

(1) A.F (2) B.C (3) D.F

04)




A B C D E F

(1) A.F (2) B.C (3) D.F

05)




(1) (2) (2)

06) 

(1) (2) (3)

கணிதச் செய்கையை அவதானித்து சரியான விடையின் கீழ் கோடிடுக

07) 

(1) 2x6 =12 92) 3x7 =21 (3) 4x5=20

இருபுறமும் எல்லா எழுத்தும் சரியாக உள்ள கூட்டம் எது.


08)

(1) DEKFSGH - DEKFSGH

(2) அஆஅஇஈஅ - அஆஅஇஈஅ

(3) 1564321 - 1563421

புள்ளிக்கோட்டில் வரும் இலக்கம் யாது?


09) 

(1) 13

(2) 14


.... (3) 16


கணிதச் செய்கையை அவதானித்து விடை தருக

10) 

இன் பெறுமானம் என்ன?


(1) 12 (2) 10 (3) 8



11)  ----------------இன் பெறுமானம் என்ன?

(1) 26 (2) 32 (3) 36

தரப்பட்ட தகவலை நன்கு அவதானித்து விடை தருக.




12) A இற்கு கிடைக்கும் இலக்கங்கள் எவை?

(1) 1 4 5 6 1 0 2) 1 4 6 7 9 3) 1 4 5 6 9

13) B இற்கு கிடைக்கும் இலக்கங்கள் எவை?


(1) 2 3 5 7 8 2) 2 3 5 7 9 3) 1 2 3 56



14) 

(i) 2 , 5 (ii) 1 , 2 (iii) 2 , 1

படத்தில் காட்டப்பட்ட அமைப்புக்கு ஏற்ப இலக்கம் இறுதியாக அமையப்பெறும் முறை எது?

15) 

(i) (ii) (iii)

கணிதச் செய்கையை அவதானித்து விடை தருக

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| N | E | C | K | = | 1 | 2 | 5 | 4 |
| C | O | C | K | = | 1 | 5 | 3 | 1 |

16) N வின் பெறுமானம் யாது?

(1) 1 (2) 4 (3) 5

17) K யின் பெறுமானம் யாது?


(1) 5 (2) 2 (3) 1

கட்டத்தினுள் வரும் விடைக்கு பொருத்தமான விடை யாது?

18) 70 + [58 - 19] + 109

(1) [27 - 6] (2) [76 - 57] (3) [84 -45]

கீழே தரப்பட்ட கணிதச் செய்கையை அவதானித்து விடை தருக.



ரூ. 16 ரூ. 32 ரூ. 42

19) மாம்பழம் ஒன்றின் விலை யாது? (1) ரூ.4 (2) ரூ.5 (3) ரூ.8

# கடனை அடைக்க அரசுடன் இணைவா?

# ஆதாரத்தை நிருபிக்க வேண்டும்

## சவால் விடுக்கும் கம்மன்பில



(கொழும்பு)

வங்கியில் பெற்ற 800 மில்லியன் ரூபா கடனை இரத்துச் செய்வதற்காகவே அரசாங்கத்துடன் மீண்டும் இணைந்து கொண்டேன் என்பதை எவராவது ஆதாரத்துடன் நிரூபித்தால் 800 மில்லியன் ரூபா பணத்தையும் அவருக்கே வழங்கப் போவதாக ஹெல உறுமய கட்சியின் அரசாங்கத்துடன் இணைந்து கொண்ட மேல் மாகாண சபை உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இந்த சவாலை முன்வைத்துள்ளார்.

எனது கடன் தொகை 800 மில்லியன் ரூபா என்றும் 15 மில்லியன் என்றும் பல்வேறு தகவல்கள் கூறப்படுகின்றன. அவ்வாறு வரப்பிரசாதங்கள் எதற்கும் ஆசைப்பட்டு நான் அரசாங்கத்துடன் இணையவில்லை.

கட்சி செல்லும் வழி சரியில்லை என்பதாலேயே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்தேன். கட்சியா நாடா என வரும் போது நாடு எனத் தீர்மானித்தே மீண்டும் இணைந்து கொண்டேன். நாட்டில் பிரிவினையை ஏற்படுத்த முயற்சித்த ரணில் விக்ரமசிங்க மற்றும் நாட்டைக் காட்டிக்கொடுத்த சந்திரிகா குமாரதுங்க ஆகியோருடன் ஜாதிக ஹெல உறுமய கூட்டுச் சேர்ந்திருப்பது தவறானது. கடந்த காலங்களில் விமர்சித்தவர்களுடன் கட்சி தற்பொழுது கூட்டுச் சேர்ந்திருப்பது தொடர்பில் மக்களிடம் பகிரங்க மன்னிப்புக்கோர வேண்டும்.

நான் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்துள்ளேன். நான் முன்வைத்திருக்கும் கேள்விகளுக்கு ஜாதிக ஹெல உறுமய சரியான பதில்களை வழங்க வேண்டும். இதனை விடுத்து இணையத் தளங்கள் மற்றும் சமூக வலைத்தளங்கள் மூலம் சேறுபூசும் செயற்பாடுகளை முன்னெடுக்கக் கூடாது. சேறுபூசுபவர்களுக்கு நான் ஒன்று கூறவிரும்புகிறேன்.

நீங்கள் உங்கள் கைகளில் சேற்றை அள்ளி எடுத்து வீசும் போது சில வேளைகளில் அது உங்கள் மீதும் படலாம். இருந்த போதும் உங்கள் கைகள் சேறாவதை ஒருபோதும் தடுக்க முடியாது.

பொது வேட்பாளராகக் களமிறங்கியிருக்கும் மைத்திரிபால சிறிசேனவுக்கு கட்சி என ஒன்றும் இல்லை. சந்திரிக்காவுக்கு ஆதரவு வழங்கும் சுதந்திரக் கட்சியினரும், ரணில் தலைமையிலான ஐ.தே.க உறுப்பினர்களும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுமே உள்ளனர் என்றும் தெரிவித்தார்.

## புனித செசிலியா விருதுக்கான கரோல் பாடல் இறுதிப் போட்டி



மன்னார் கலையருவி ஏற்பாடு செய்திருந்த புனித செசிலியா விருதுக்கான கரோல் பாடல் இறுதிப் போட்டி கடந்த சனிக்கிழமை காலை மன்னார் நகர சபை மண்டபத்தில் இடம் பெறறது.

மன்னார் கலையருவியின் இயக்குநர் அருட்தந்தை தமிழ் நேசன் அடிகளார் தலைமையில் இடம் பெற்ற குறித்த நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசேப்பு ஆண்டகை கலந்து கொண்டு சிறப்பித்தார்.

சிறப்பு விருந்தினர்களாக பேசாலை பற்றிமா ம.ம.வி பாடசாலை அதிபர் அருட்சகோதரர் ஸ்ரனிஸ்லோஸ் , அடம்பன் கார்மேல் கன்னியர் இல்ல முதல்வர் அருட்சகோதரி எஸ்.எலிசபெத் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இதன் போது வரவேற்பு நடனம் இடம் பெற்றதோடு, சிறப்பு கரோல் கீதங்கள் இசைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது

## விபத்தில் மூவர் காயம்

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் சந்தியில் இடம் பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஆலய பூசகர், அவரது ஐந்து வயது சிறுவன் உட்பட மூவர் படுகாயமடைந்து தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் மல்லாகம் மகா வித்தியாலயத்திற்கு முன்பாக நடைபெற்றுள்ளது.

வட்டி அழகொல்லை பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த இரத்தின ஐயர் மகாலிங்க சர்மா (வயது-53) என்ற பூசகரும் அவருடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த அவரது ஐந்து வயது மகனும் காயமடைந்தனர்.

மற்றைய மோட்டார் சைக்கிளில் வந்த மல்லாகம் நீதிமன்ற காவலாளியாக கடமையாற்றும் அரியாலை, பாரதி வீதியைச் சேர்ந்த சிங்கராசா மயூரன் (வயது-30) சிறுகாயங்களுக்குள்ளாகி மயக்கமுற்ற நிலையில் மூவரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

# ஐயப்ப சுவாமி விரதம் கடைப்பிடிப்பது எப்படி?

சபரிமலைக்கு இரு முடி தாங்கி பதினெட்டாம் படி ஏறி பகவான் ஸ்ரீ ஐயப்பனைத் தரிசிக்க விரும்புபவர்கள் 41 நாட்கள் விரதத்தைக் கடைப்பிடித்தல் மிக அவசியம். ஐயப்பன்மார்கள் எல்லா வகையிலும் எளிமையாகவும் தூய்மையாகவும் இருத்தல் வேண்டும். அணிகின்ற மாலையிலிருந்தே எளிமையைக் கடைப்பிடிக்கலாமே உறுதியான துளசி மாலை ஒன்றை அணிந்தாலே போதுமானது. அணிகின்ற வேட்டி கறுப்பு அல்லது நீலத்தில் இருத்தல் நல்லது. காவி பச்சை மஞ்சள் நிறங்களில் ஆன உடைகளை உடுத்துவது இரண்டாம் பட்சம்.

மாலை அணிந்தவர்கள் காலையிலும் மாலையிலும் குளிர்ந்த நீரில் நீராடி ஐயப்பனை வழிபடுதல் வேண்டும். "மந்திரங்கள் தெரியவில்லையே" என்று கவலைப்பட வேண்டாம். சுவாமியே சரணம் ஐயப்பா என்று ஆத்மார்த்தமாகச் சொல்லியே வழிபடலாம். மாலைபோட்ட நாளிலிருந்து விரதத்தை முடிக்கும் வரை முடி வெட்டுதல் சவரம் செய்து கொள்ளுதல் கூடாது. எவ்வித அசைவ உணவுகளையும் உட்கொள்ளக்கூடாது. தீவிர பிரமச்சரிய விரதத்தைக் கடைப்பிடித்தல் அவசியம்.. மெத்தை தலையணை உபயோகிக்காமல் தலையின் கீழ் ஜமுக்காளம் ஒன்றை உபயோகித்துப் படுக்க வேண்டும். காலணிகள் தவிர்த்து நடக்கப் பழகினால் சபரிமலை பயணத்திற்கு மிகவும் உதவியாக இருக்கும்.

மது அருந்துதல், புகைப்பிடித்தல், வெற்றிலை, பாக்கு, புகையிலை போடுதல் மற்றும் பொடி போன்ற லாகிரி வஸ்துக்களை உபயோகத்தல் அறவே கூடாது. புலன்களை அடக்கத் தெரியாதவர்கள், அடக்க இயலாவர்கள் மாலை போடாமலோ இருமுடி கட்டாமலோ பதினெட்டாம் படி ஏறாமல் பின்வழியாகச் சென்று இறைவனை வழிபடலாம். விரதநாட்களில் பொய் பொறாமை குரோதம் காமம் இல்லாமலிருத்தல் அவசியம். பேச்சைக்குறைத்து மௌனத்தை கடிப்பிடித்தலே உத்தமம். மற்றவர்களிடம், சாந்தமாகப் பழக வேண்டும். மற்றவர்கள் மனம் புண்படும்படி பேசக்கூடாது.

விரத நாட்களில் பெண்களை சகோதரிகளாகவும், தாயாராகவும் கருத வேண்டும். மாதவிலக்கான பெண்களைப் பார்த்தல், பழகுதல் கூடாது. ஆனால் வேலைக்குச் செல்லும் இடத்திலோ, பிரயாணம் செய்யும் பொழுதோ ஒருவேளை பார்க்க அல்லது பேச நேரிட்டாலோ, பெரிதாக மனக்கிலேசமோ அல்லது குற்ற உணர்ச்சியோ கொள்ள வேண்டிய அவசியமில்லை. மாதவிலக்கான பெண்கள் ஐயப்பன்மார்களைப் பார்ப்பதைத் தவிர்க்க வேண்டும். விரத சமயத்தில் மாலை அணிந்தவர்களுக்கு மிகவும் துன்பங்கள் ஏற்படும் என்பதும் சோதனைகளுக்கு உள்ளாவார்கள் என்பதும் தவறான கருத்துகளாகும். அணிந்திருக்கின்ற ஒரே மாலை தவறுதலாக ஒரு வேளைஅறுந்துபோக நேரிட்டால் அதைச் செப்பனிட்டு அணிந்து கொள்ளலாம் தவறு ஏதுமில்லை. எந்தவிதமான தவறும் செய்யாமல் விரதத்தைக் கடைப்பிடிக்கும் பட்சத்தில் மாலை அறுந்துவிட்டதே என்ற வீண் மன சஞ்சலம் அடைய வேண்டியதில்லை.

மரணம் போன்ற துக்க காரியங்களில் ஐயப்பன்மார்கள் கலந்துகொள்ளக் கூடாது. மிகவும் நெருங்கிய உறவினர்கள் இறந்து விட்டாலும் அவர்களுடைய துக்க காரியங்களில் கலந்து கொள்ள நேரிட்டாலும் தான் அணிந்து இருக்கும் மாலையைக் கழற்றி ஐயப்பன் படத்தில் மாட்டிய பிறகுதான் கலந்து கொள்ள வேண்டும். ஒருமுறை மாலையைக் கழற்ற நேர்த்தால் ஒருவருடம் கழிந்தே பிறகுதான் மறுபடியும் மாலை அணிய வேண்டும்.

தாய், தந்தை, மனைவி சகோதர சகோதரி யாரேனும் இறந்தால் ஒரு வருட காலத்திற்கு மாலை அணிதல் வேண் டாம். தாயார் மனைவி வழியில் தீட்டு இல்லை. தந்தை வழியிலும் தீட்டு இல்லை தந்தை வழியில் இறந்தால் மூன்று மாத காலத்திற்கு மாலை அணிதல் கூடாது. மனைவி கருவுற்றிருக்கும் போது மாலை அணிந்து மலைக்குச் செல்வதில் தவறேதும் இல்லை. ஆனால் மாலை போடும் சமயத்தில் எவ்விதமான பயமோ, சந்தேகமோ, குற்ற உணர்ச்சியோ இருத்தல் கூடாது.

அப்படி மனச்சஞ்சலம் இருந்தால் மாலை பேடுவதைத் தள்ளிப் போடுதல் வேண்டும் விரத காலங்களில் முடிந்த அளவு வசதி இல்லாதவர்களுக்கும் மாலை அணிந்த மற்ற ஐயப்பன் மார்களுக்கும், தன்னுடைய பொருளாதார வசதிக்குத் தகுந்தாற்போல் அன்னதானம் செய்வது நல்லது.

கன்னி ஐயப்பன்மார்கள் தமது வடுகளிலேயே கூட்டு வழிபாடு செய்வது நல்லது ஆனால் கடன்வாங்கிக் கன்னி பூஜை செய்வதோ ஆடம்பரமாக அன்னதானம் செய்வதோ விரும்பத்தக்கதல்ல, ஐயப்ப விரதத்தில் வீட்டில் இருக்கும் மனைவி மற்றும் பெண்களின் தொண்டும், அப்பழுக்கற்ற பக்தியும் மிகவும் உயர்வானதும் போற்றத்தக்கதுமாகும். விரத காலங்களில் மனைவியோ, தாயாரோ தன்னுடன் சேர்ந்து விரதத்தைக் கடைப்பிடித்து இருப்பார்களேயானால் இருமுடி கட்டும் சமயத்திலும் தேங்காயில் நெல் நிரப்பும் போதும் அவர்களையும் அத்தேங்காயில் நெய் நிரப்பச் செய்வதில் தவறு ஒன்றுமில்லை.

இருமுடி கட்டும் வைபவத்தில் தனது வீட்டிலேயே வைத்துக் கொள்ளுதல் நல்லது. வீடு சுபீட்சமாக இருக்கும் சபரிமலை பிரயாணத்திற்குப் புறப்படுகையில் எவரிடமும் "போய் வருகிறேன்" என்று கூறக்கூடாது. மாலை அணிந்து சபரிமலை க்குச் செல்லும் நோக்கம். தனைனையே புனிதப்படுத்தி சத்தியமான பதினெட்டாம் படியில் ஏறிப்பகவான் ஐயப்பனைத் தரிசித்தல். தன் புலன்களை எல்லா வகையிலும் கட்டுப்படுத்தி நெறியான வாழ்க்கை வாழ்ந்து மனம் உடல் இவைகளைத் தூய்மைப்படுத்தல் தான் மட்டும் சுத்தமாக இருப்பதோடு அல்லாமல் வீட்டையும் வீட்டில் உள்ளவர்களையும் சுத்தமாக இருக்க வைத்து அவர்களையும் பக்தி நெறிக்கு உட்படுத்துதல் .

மாலைக்கு மதிப்பளித்து ஒரு மண்டல கால விரத முறைகளை நெறியாகவும் முறையாகவும் கடைப்பிடித்து தான் என்னும் அகங்காரத்தை விட்டொழித்து இறைவனிடம் முழு நம்பிக்கை வைத்து முழு சரணாகதி அடைந்து ஒரு முகமாக வழிபட்டால் இறைவனின் அருட்கடாட்சம் குறை வில்லாமல் கிடைக்கும். படிகள் ஏற ஏற அவர்கள் தம்வாழ்வில் உயர்ந்து கொண்டே இருப்பார்கள். என்பது சத்தியம் கன்னி சாமிகளுக்கும் மற்ற சீடர்களுக்கும், ஐயப்பன் பெருமையைப் பற்றியும் சபரிமலை யாத்திரையின் உயர்வைப் பற்றியும் விரதத்தை நெறியாக முறையாகக் கடைப்பிடித்தலின் அவசியம் பற்றியும் எடுத்துச் சொல்லி அவர்களைச் சரியான வழியில் நடத்திச் செல்லுதல் உத்தமம் ஆகும்.

எந்தவிதமான சுயநலத்திற்கும் உட்படாமல் ஐயப்பனுக்கும் ஐயப்ப பக்தர்களுக்கும் சேவை செய்வது மிகவும் அவசியமானதும் போற்றக் கூடியதும் ஆகும்.



தேசமான்ய கலாநிதி, சிவஸ்ரீ.து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் J.P வீளைவேலி ஆதீனம்

# ஆஸி சிட்னி நகரில் பொதுமக்கள் பிணைக் கைதிகளாக சிறைப்பிடிப்பு




அவுஸ்ரேலியாவின் சிட்னி நகரில் உள்ள லிண்ட் கபே என்ற பிரபல ஹோட்டலில் இருந்த பொது மக்கள், ஊழியர்கள் உட்பட 30 பேரை துப்பாக்கி ஏந்திய மர்ம நபர் ஒருவர் பிணைக் கைதிகளாக சிறைபிடித்து வைத்திருப்பதால் அங்கு பதற்றம் ஏற்பட்டுள்ளது.

இது குறித்த தகவல் வெளியானதும் பொலிஸாரும், தொலைக்காட்சி செய்தியாளர்களும் அங்கு விரைந்தனர். தொலைக்காட்சி சனலில் காட்டப்பட்ட காட்சி ஒன்றில், ஹோட்டலுக்குள் பிடிபட்டிருக்கும் பொதுமக்கள் சிலர் ஜன்ன லோரம் நிறுத்திவைக்கப்பட்டிருப்பதும், அவர்கள் கைகளில் கறுப்புக்கொடி கொடுக்கப்பட்டுள்ளதும் பதிவாகியுள்ளது.

அந்தக் கொடியில், வெள்ளை நிறத்தில் அரபு மொழியில் ஏதோ எழுதப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். எனவே, இது இஸ்லாமிய போராளிகள் அமைப்பான ஐ.எஸ்.ஐ.எஸ். இன் செயலாக இருக்கலாமோ என சந்தேகிப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், அஸ்ரேலிய பிரதமர் டோனி அபாட், அமைச்சரவை கூட்டத்தை அவசரமாகக் கூட்டியுள்ளார். ஹோட்டலில் பிணைக்கைதிகள் பிடித்து வைக்கப்பட்டுள்ளது குறித்து ஆலோசித்து வருகிறார.

அஸ்ரேலியாவுக்கு தீவிரவாத அச்சுறுத்தல் இருப்பதாக அபாட் ஏற்கனவே எச்சரித்திருந்தார் என்பது கவனிக்கத்தக்கது.

சிரியா, ஈராக்கில் போராடி வரும் ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்புக்கு எதிராக அமெரிக்காவுடன் அவுஸ்ரேலியாவும் கூட்டுச் சேர்ந்துள்ளது. இதற்கு பதிலடியாக ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பு இத்தகைய தாக்குதலை நடத்தியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

ஹோட்டலில் ஊழியர்கள், பொது மக்களை சிறைப்பிடித்து வைத்துள்ள மர்ம நபரை பொலிஸார் தொடர்பு கொண்டுள்ளதாக கூறப்படுகிறது. பிணை கைதிகளை பிடித்துவைக்க காரணம் என்ன? அரசிடம் இருந்து என்ன எதிர்பார்க்கிறார் என விசாரித்து வருவதாக பொலிஸ் தரப்பு தெரிவித்துள்ளது.

இந்நிலையில், ஹோட்டலில் இருந்து 5 பிணைக் கைதிகள் தப்பிவந்தனர். அவர்களிடம் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். இத்தகவலை, மெல்போர்ன் பொலிஸ் துணை ஆணையர் கேத்தரின் பர்ன் உறுதிப்படுத்தியுள்ளார்.

சிட்னி நகரின் மார்டின் பிளேஸில் பிணைக் கைதிகள் பிடித்து வைக்கப்பட்டிருக்கும் சம்பவம் வருத்தமளிக்கிறது. இருப்பினும், அவுஸ்ரேலியர்கள் பீதியடைய வேண்டாம். அவுஸ்ரேலியாவின் பாதுகாப்பு நிறுவனங்கள் நிலைமையை திறம்பட கையாண்டு வருகிறது என ஆஸ்திரேலிய பிரதமர் டோனி அபாட் தெரிவித்துள்ளார்.




# ஜப்பானில் பிரதமர் தேர்தல் சின்சோ அபே மீளவும் வெற்றி



சமீபத்தில் 475 உறுப்பினர்களைக் கொண்ட ஜப்பான் நாடாளுமன்ற கீழ் சபைக்கு தேர்தல் நடந்தது. இதில் சின்சோ அபே தலைமையிலான விடுதலை ஜனநாயக கட்சி கூட்டணியும், பிரதான எதிர்க்கட்சியான ஜப்பான் ஜனநாயகக் கட்சி கூட்டணியும் அதிகாரத்தை கைப்பற்றப் போட்டியிட்டன.

கருத்துக் கணிப்புகளின்படி அபே தலைமையிலான கட்சி பெரும்பான்மையான இடங்களில் வெற்றி பெறும் என்று தெரிவிக்கப்பட்ட நிலையில், தேர்தல் முடிவுகள் வெளியாகின.

இதில் மூன்றில் இரண்டு பகுதி தொகுதிகளைக் கைப்பற்றி சின்சோ அபே தலைமையிலான விடுதலை ஜனநாயக கட்சியும் அதன் கூட்டணிக் கட்சியான கோமிடோவும் வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் 2 ஆவது முறையாக பிரதமராக பொறுப்பேற்கும் சின்சோ அபே 2018 ஆம் ஆண்டு வரை தொடர்ந்து பிரதமராக நீடிப்பார்.

# மொரீஷியஸ் பிரதமராக அனிருத் ஜகநாத் தெரிவு

(போர்ட் லூயிஸ்)

மொரீஷியஸ் பிரதமராக, அனிருத் ஜகநாத் நியமிக்கப்பட்டுள்ளார் என, அந்நாட்டின் ஜனாதிபதி மாளிகை அறிக்கை வெளியிட்டுள்ளது. மொரீஷியஸ் நாடாளுமன்றத் தேர்தலில், முன்னாள் அதிபர் அனிருத் ஜகநாத் (84) தலைமையிலான எதிர்க்கட்சி கூட்டணி, 4 இல் 3 பங்கு இடங்களை கைப்பற்றியது.

இக்கூட்டணி, மொத்தமுள்ள 62 நாடாளுமன்றத் தொகுதிகளில், 47 இடங்களில் வெற்றி பெற்றது. ஆளும் கூட்டணியில், பிரதமராக பதவி வகித்த ராம்கூலம், தன் தொகுதியில் தோல்வியடைந்து, 23 ஆண்டு காலமாக வகித்து வந்த எம்.பி., பதவியை இழந்தார். ஆளும் கூட்டணி, நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வியடைந்ததை அடுத்து, பிரதமர் ராம்கூலம், தம் பதவி விலகல் கடிதத்தை, ஜனாதிபதி கைலாஷ் புரியாகியிடம் அளித்தார்.

அதை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி, புதிய பிரதமராக அனிருத் ஜகநாத்தை நியமிப்பதாக அறிவித்துள்ளார்.

ராம்கூலம், ஜகநாத் ஆகிய இருவரும், 1982 ஆம் ஆண்டு முதல், (2003 05 நீங்கலாக) பிரதமர், ஜனாதிபதி என, மாறி மாறி இரு பதவிகளை வகித்து வந்துள்ளனர்.ஜகநாத், 2003 12 வரை, மொரீஷியஸ் அதிபராகவும் பதவி வகித்துள்ளார்.

# கொங்கோவில் படகு மூழ்கி 129 பயணிகள் உயிரிழப்பு

(லுபும்பாசி)

ஆபிரிக்க நாடான கொங்கோவில் கடாங்கா மாகாணத்தில் தன்கான் யிகா என்ற ஏரி உள்ளது. இங்கு படகு போக்குவரத்து நடைபெறுகிறது.

இந்த நிலையில் மொபாவில் இருந்து காலெமி என்ற இடத்துக்கு ஒரு படகு பயணிகளை ஏற்றிக்கொண்டு புறப்பட்டது. அதில் 232 பேர் பயணம் செய்தனர்.

படகு சென்று கொண்டிருந்த போது திடீரென தண்ணீரில் மூழ்கியது.

தகவலறிந்ததும் மீட்பு படையினர் அங்கு விரைந்து சென்றனர். அதற்குள் ஏராள மானவர்கள் தண்ணீரில் மூழ்கினர். அவர்களில் சிலரை மட்டுமே மீட்க முடிந்தது.

இந்த விபத்தில் 129 பேர் பலியானதாக தகவல் வெளியாகி உள்ளது. மேலும் பலரை காணவில்லை. எனவே சாவு எண்ணிக்கை மேலும் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அளவுக்கு அதிகமாக ஆட்களை ஏற்றியதே படகு தண்ணீரில் மூழ்கியதற்கான காரணம் என கூறப்படுகிறது. மேலும் பலத்த காற்று வீசியதும் படகு விபத்துக்கு காரணமாக கருதப்படுகிறது.

# மதுபானசாலையில் சீனாவில் 11 பேர் பலி



சீனாவில் ஹெனான் மாகாணத்தில் ஹயாங்குயான் கராயோக் என்ற இடத்தில் மது நிலையம் உள்ளது. நேற்று அங்கு திடீரென தீ பிடித்தது. உடனே அங்கு மது குடித்துக் கொண்டிருந்தவர்கள் திடீரென வெளியேறி ஓட்டம் பிடித்தனர்.

இருந்தும் 11 பேர் தீயில் கருகி பரிதாபமாக இறந்தனர். 38 பேர் காயமடைந்தனர். அவர்களுக்கு ஆஸ்பத்திரியில் சிகிச்சை அளிக்கப்பட்டது.

தீ விபத்துக்கான காரணம் தெரியவில்லை. இது குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

# கண்டுபிடிக்கப்பட்ட எரிகல் பூமிக்கு ஆபத்து இல்லை

நாசா அறிவிப்பு

ரஷ்ய விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ள எரிகல்லால் பூமிக்கு எந்தவித ஆபத்தும் இல்லை என நாசா அறிவித்துள்ளது.


ரஷ்யாவில் உள்ள கிஸ்லோவோட்ஸ்க் (Kislovotsks) ஆய்வு மையத்தில் உள்ள விஞ்ஞானிகள் 1, 312 அடி எரி கல்லை கடந்த அக்டோபர் மாதம் 27 ஆம் திகதி கண்டுபிடித்தனர்.

2014 யுஆர்116 என்று பெயர் வைக்கப்பட்டுள்ள அந்த எரிகல்லால் பூமிக்கு ஆபத்து என ரஷ்ய விஞ்ஞானிகள் தெரிவித்திருந்தனர்.

ஆனால் எரிகல்லால் பூமிக்கு அடுத்த 150 ஆண்டுகளுக்கு எந்தவித பிரச்சினையும் இல்லை என நாசா மற்றும் அமெரிக்காவின் மசாசுசெட்ஸ் (Masaasusets) மாநிலம் கேம்பிரிட்ஜ் (Cambridge) நகரில் உள்ள மைனர் பிளானட் சென்டர் (Minor planet centre) ஆகியவை தெரிவித்துள்ளன.

இதுகுறித்து நாசா அதிகாரிகள் கூறுகையில், அண்மையில் ரஷ்ய விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ள எரிகல்லால் பூமிக்கு ஆபத்து என பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன என்றும் எரிகல்லின் சுற்றுப்பாதை பூமிக்கு அருகில் இல்லாததால் பூமிக்கு ஆபத்து ஏதும் இல்லை எனவும் கூறியுள்ளனர்.

# பழம்பெரும் நடிகர் சர்மா மாரடைப்பால் மரணம்



எம்.ஜி.ஆர்., சிவாஜி கணேசன், அமிதாப்பச்சன், திலீப்குமார் உள்ளிட்ட முன்னணி கதாநாயகர்களுடன் இணைந்து நடித்த பழம் பெரும் நடிகர் பி.ஜே.சர்மா மரணம் அடைந்தார்.

அவருக்கு வயது 82. பி.ஜே.சர்மா தமிழ், தெலுங்கு, இந்தி, கன்னட மொழிகளில் 500 இற்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார். தொலைக்காட்சி தொடர்களிலும் நடித்துள்ளார்.

பி.ஜே.சர்மாவுக்கு திடீர் மாரடைப்பு ஏற்பட்டது. டாக்டர்கள் தீவிர சிகிச்சையளித்தும் பலனின்றி மரணம் அடைந்தார்.

தெலுங்கில் முன்னணி நடிகராக உள்ள சாய்குமார் இவரது மகன் ஆவார். தெலுங்கு படங்களில் கதாநாயகனாக நடிக்கும் ஆதி இவரது பேரன் ஆவார். இரு தினங்களுக்கு முன்தான் ஆதியின் திருமணம் நடந்தது.

மரணமடைந்த பி.ஜே. சர்மா உடலுக்கு தெலுங்கு நடிகர் சிரஞ்சீவி நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார். தெலுங்கு பட உலகினர் ஏராளமானோர் அவருக்கு அஞ்சலி செலுத்தினர்.

## வடமாகாண...

மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள், திணைக்கள அதிகாரிகளுக்கு பாதீட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு, ஆராயப்பட்டுள்ளது.

அதன் போது, ஆளும் கட்சி உறுப்பினர்கள் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுடன் கலந்தாலோசித்து,வரவு, செலவு திட்ட அறிக்கை தயாரிக்கப்படவில்லை என்று உறுப்பினர்கள் பலர் தெரிவித்துள்ளனர்.

எந்தவித அறிவித்தலுமின்றி மக்கள் பிரதிநிதிகளுக்கு வரவு செலவு திட்ட அறிக்கையினை சமர்ப்பித்து அங்கீகரிக்குமாறு, கோருகின்றனர்.

தன்னிச்சையாக வரவு செலவுத்திட்டம் தயாரித்துவிட்டு உறுப்பினர்களுக்கு காட்டுகின்றார்கள், அதில் உறுப்பினர்களுக்கு உடன்பாடு இல்லை. வரவு செலவு திட்ட அறிக்கையினை தயாரிப்பதாக இருந்தால், உறுப்பினர்களின் கருத்துக்கள் கேட்கப்பட வேண்டும். அந்த அறிக்கையினை மக்கள் பார்வைக்கு வைக்க வேண்டும். பத்திரிகைகளில் வெளியிட வேண்டும். ஆனால், வரவு செலவு திட்ட அறிக்கையை அங்கரிப்பதற்கு உறுப்பினர்களுடன் கலந்துரையாடவும் இல்லை. மாவட்டம் மற்றும் பிரதேச அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் உள்ளடக்கி தயாரிக்க வில்லை என்றும் உறுப்பினர்கள் குற்றஞ் சாட்டினார்கள்.

இந்த நடவடிக்கை பலாத்காரம் செய்து அங்கீகாரம்பெற முயற்சிப்பது போன்று இருக்கின்றது. அமைச்சரவை தீர்மானம் தரவில்லை. அமைச்சரவை தீர்மானத்தினை பத்திரிகைகளில், மாகாண சபையில் சமர்ப்பிப்பதில்லை.

வாரிய நிதி வேலைத்திட்டங்கள் சகல உறுப்பினர்களுக்கும் தெரியப்படுத்தி நடப்பாண்டிற்கான வேலைதிட்டங்களுக்கு குழப்பமாக இருக்கின்றது. இவ்வாறு காரசாரமான விவாதங்களுடன், வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திசிறிக்கு ஒதுக்கப்பட்ட 60 இலட்சம் நிதி தொடர்பில் தமிரசு கட்சி உறுப்பினர்கள் விவாதித்துள்ளனர்.

அதற்கு, பிரதம செயலாளர் ரமேஸ் விஜயலக்சுமி தெரிவிக்கையில், அனைத்து மாகாண ஆளுநர்களுக்கும் வழங்கப்படுவது போலவே வடக்கு ஆளுநருக்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று பதிலளித்துள்ளார்.

அந்தவகையில், வடமாகாண சபை எதிர்க்கட்சி தலைவர் சின்னத்துரை தவராசா, வரவு செலவு திட்ட அறிக்கை தொடர்பில் கடுமையான விவாதங்களை முன்வைத்துள்ளார். வேலைத்திட்டங்களுக்கு தலைப்பிடாமல் நிதி மொட்டையாக போடப்பட்டுள்ளது. இவ்வாறான அறிக்கை அதிருப்தி தருவதாக தெரிவித்துள்ளார்.

அந்தவகையில், வரவு செலவு திட்ட அறிக்கையினை திருத்துவதற்கான கால அவகாசம் இல்லை.ஆனால் திருத்துவதாக தெரிவித்திருக்கின்றார்கள். உட்கட்சி சர்வாதிகாரம், தமிழ்த்தேசிய கூட்டமைப்பிற்குள் நடைபெறுகின்றது. அரசை இலஞ்ச ஊழல் என விமர்சிக்கும் கூட்டமைப்பினரை எவ்வாறு கூறுவது என்று தெரியவில்லை. என்றும் தெரிவித்தனர். (25)

## ஜனாதிபதி...

மான மொடு நோகுச்சி என்பவரே ஆறாவது நிபுணராக நியமிக்கப்பட்டவர் ஆவார்.

குறித்த ஆணைக்குழுவுக்கு ஆலோசனை வழங்குவதற்காக மேலைத்தேய மற்றும் ஆசிய நாடுகளிலிருந்து இதுவரை 6 நிபுணர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். டெஸ்மெண்ட் டி சில்வா, ஜோவெரி நைஸ், பேராசிரியர் டேவிட் கிரேன், அவ்தாஷ் கௌஷால் அஹ்மிர் பில்லாஹ் சூஃபி மற்றும் நீதிபதி மொடு நோகுச்சி ஆகியோரே இந்த அறுவர் ஆவர்.

இந்த ஆணைக்குழு, கடந்த 2004ஆம் ஆண்டு சட்ட அம்சங்கள் உள்ளடக்கியதாக அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

## காணாமற்..

வாய்மூல சாட்சியங்களை பெற்றுக்கொள்ளும் நோக்கிலேயே இவ்வமர்வு இடம்பெற்றுள்ளது. குறித்த ஆணைக்குழுவின் தலைவர் நீதிபதி மக்ஸ்வெல் பரணகம தலைமையில் நேற்று முன்தினம் இவ் அமர்வு ஆரம்பிக்கப்பட்டது.

## சுமந்திரன்...

வாக்களித்தேன் 10 பேர் ஆதரித்தனர். அது யார், யார் என அனைவருக்கும் புரியும்.

நான் சுமந்திரனை பார்த்து கேட்கிறேன் 45 கோடியையும் வைப்பதற்கு ஒரு இடத்தை ஒழுங்குபடுத்தித் தருமாறு.

இதேவேளை சரத்பொன்சேகா எதிரணி வென்றால் பாதுகாப்பு அமைச்சராக தமிழ் மக்களை கொன்றதற்காக புதிய பட்டம் பெற்று பதவியேற்பாராம் தமிழ் மக்கள் வாக்களிக்கவேண்டும். அது யாருக்கு என்பது அவர்களின் முடிவு. பொது எதிரணிகளுடன் இணைந்து தேசிய அரசு ஒன்று உருவாகுமேயானால் அதில் அமைச்சுப் பொறுப்புக்கள் தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்குக் கிடைக்கும் என ஒரு சிலர் கனவு கண்டு வருகிறார்கள் இதனால் சர்வதேசத்தின் உதவி கிடைக்காது போகும் நிலை ஏற்படும்.

மகிந்தவிடம் பணம் பெற்ற கள்வன் நான் என்றால் ஏன்என்னை வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிட அனுமதித்தீர்கள்?

இனப்படுகொலை தொடர்பாக நான் கொண்டுவந்த பிரேரணையை ஜனவரிக்குப் பின்முன் மொழிவோம் என முதலமைச்சர் ஆக்ரோசமாக தெரிவித்திருந்தார்.

ஆனால் வரும் மார்ச் வரை இப்பிரேரணையை அனுமதிக்க மாட்டோம் என சுமந்திரன் தெரிவித்துள்ளார். அதன் பின்னணி என்ன மார்க்கம் என்றால் ஜெனிவாவில் கூட்டம் நடைபெறப் போகிறது. அதற்கிடையில் யாருடைய நிகழ்ச்சி நிரலுக்காக அவர்கள் எதையும் செய்யத்தயாராக இருக்கிறார்கள் என்பது தெளிவாக புலனாகிறது.

ஜனாதிபதித் தேர்தலில் கோடிகள் புரள்வது யார் யார் கைகளில் என்பதை விரைவில் அனைவரும் அறிவார்கள் அப்போது அவர்களைப் பற்றி புரியும் மக்கள் இதில் தெளிவாக இருக்கிறார்கள். ஒரு வேட்பாளரை தேர்தலில் நிறுத்தி பேரம் பேசும் சந்தர்ப்பத்தை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இழந்து விட்டது. என தெரிவித்த சிவாஜிலிங்கம் சுமந்திரனின் கருத்துக் குறித்து காரசாரமாக சாடினார். (இ,25)

# மகிந்த....

கேட்கின்றோம்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களின் தலைமையிலான அணியினரை எதிர்த்து, எதிரணியில் நிற்பவர்கள் எவரும் அரசியலுக்குப்புதியவர்கள் அல்லர். ஏற்கனவே அவர்களும் இந்தநாட்டை ஆண்டவர்களே.

## யுத்தத்திற்கு முற்றுப்புள்ளி

மாறி, மாறி ஆட்சிக்கு வந்த அனைத்து ஆட்சியாளர்களும் அழிவு யுத்தத்தை முடிவிற்குக் கொண்டுவரும் நோக்கத்துடனேயே செயற்பட்டார்கள். ஆனாலும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் காலத்திலேயே யுத்தம் முடிவிற்கு வந்தது. இன்று அழிவுகள் இங்கில்லை. அச்சம் எங்குமில்லை!

ஒவ்வொரு ஆட்சிகளின் போதும் அரசியல் தீர்விற்குக் கிடைத்த வாய்ப்புக்களை சக தமிழ் அரசியல் கட்சிகள் மற்றும் இயக்கத்தலைமைகள் சரிவரப் பயன்படுத்த மறுத்ததாலேயே இங்கு அழிவுகளே நடந்தன.

இதனால், இன்றைய அமைதிச் சூழலை உருவாக்க தமிழ் பேசும் மக்களும் தமது விலைமதிப்பற்ற உயிர்களை அர்ப்பணம் செய்திருக்கிறார்கள்.

## சாத்தியமான வழி எது?

ஆனாலும். மலர்ந்திருக்கும் சமாதான சூழலில் எமது வரலாற்று வாழ்விடங்களை தூக்கிநிறுத்தி, அழிவுகளில் இருந்து நாம் மீண்டெழும் திட்டங்கள் எமது இணக்க அரசியல் (உரிமைக்குக்குரல்,உறவுக்குக் கரம்) வழிமுறைகளுக்கூடாகவே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எமது மக்களின் அரசியலுரிமைக்கான தீர்வைப் பொறுத்தவரை, 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதில் இருந்து தொடங்குவது,.. அதற்குத் தேவையான மேலதிக அதிகாரங்களைப் பெறுவதற்கும், அதைச் செழுமைப்படுத்துவதற்கும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவைப் பயன்படுத்தி, அதிலிருந்து எமது அரசியல் இலக்கு நோக்கிச்செல்வது,.. இதுவே நடைமுறைச்சாத்தியமான வழிமுறையாகும்.

## துணிச்சல் யாரிடம் உள்ளது

எனது ஜனநாயக வழி அரசியல் பயணத்தில் முன்னாள் ஜனாதிபதிகளான பிரேமதாச, டி.பி விஜயதுங்க, சந்திரிகா குமாரணதுங்க, முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க, மற்றும் இன்றைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ என்று பலரையும் நான் சந்தித்திருக்கின்றேன், பழகியுமிருக்கின்றேன். தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள் குறித்தும்,அதற்கான அரசியல் தீர்வு குறித்தும் வாதாடியும் வந்திருக்கின்றேன்.

முன்பிருந்த எந்தவொரு ஆட்சியாளர்களுக்கும் அதை நடைமுறைப்படுத்தும் துணிச்சலும் இருந்திருக்கவில்லை. விருப்பமும் இருந்திருக்கவில்லை.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எமது கோரிக்கையினை ஏற்றுக்கொண்டிருந்தார். கிழக்கிலும், வடக்கிலும் மாகாணசபைத் தேர்தல்களை நடத்தியதன் மூலம் 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தும் தீர்வு முயற்சியை முன்னெடுக்க ஆரம்பித்திருக்கிறார்.

எதிரணியினர், ஜனாதிபதிமகிந்த ராஜபக்ஷ முன்னெடுத்துவரும் இதே திட்டங்களை முன்னெடுக்கப் போவதர்க் வாக்குறுதி அளித்தாலும், அதை நடைமுறைப்படுத்தும் ஆளுமையும், துணிச்சலும் அவர்களுக்கு இல்லை. இது கடந்தகாலங்களில் நான் அவர்களிடம் கண்டுகொண்ட அனுபவங்கள்.

## தெற்கு நிலைவரம் என்ன?

பலத்த சவால்களுக்கு மத்தியிலும் மறுபடியும் வெல்லப்போவது ஜனாதிபதிமகிந்த ராஜபக்ஷ என்பது தென்னிலங்கையின் நிலைவரம். தமிழ் பேசும் மக்களின் வாக்குகளே ஜனா்திபதியின் வெற்றிக்குபலம் சேர்க்கவும் போகின்றது.

இதில் ஆளுமை மிக்க,துணிச்சல் மிக்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்வுக்கு தமிழ் பேசும் மக்கள் மேலதிக ஆதரவை வழங்குவதன் மூலம், எமதுஅரசியல் கோரிக்கைகளை முன்வைத்து நாம் ஜனாதிபதியுடன் பேரம் பேச இதுவே சந்தர்ப்பம். இதன் மூலம் அரசியல் பேரம் பேசும் மதிநுட்பசிந்தனையால் எமதுஅரசியல் இலக்கு நோக்கியும் நாம் தொடர்ந்தும் செல்லமுடியும்.

அரசியலுரிமை தொடக்கம் அபிவிருத்திவரை நாம் கோரிக்கை வைத்து,பேரம் பேச வேண்டியது மறுபடியும் ஆட்சிக்கு வரப்போகின்ற இன்றைய ஜனாதிபதியுடன் மட்டுமே. ஏனென்றால், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஒரு யதார்த்தவாதி, வெளிப்படைத்தன்மையானவர். ஆளுமைமிக்கவர், துணிச்சலானவர்.

## எதிரணியிடம் திட்டம் எதுவும் இல்லை

எதிரணியினரிடம் தமிழ் பேசும் மக்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பான உறுதியான, வெளிப்படையானதீர்வுகள் எவையுமில்லை. தேர்தலுக்கு இன்னும் சிலநாட்களே இருக்கின்ற நிலையிலும் அவர்கள் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகள் பற்றிவாய் திறக்கவில்லை.

மாறாக கபடத்தனமாக திரைமறைவுப் பேச்சுக்களையே நடத்துகின்றனர். மக்களை ஏமாற்ற தமிழ் அரசியல்வாதிகளுடன் பணப் பேரம் பேசுகின்றனர். குறுகிய அரசியல் நோக்கங்களுடனேயே போட்டிக் களத்தில் குதித்திருக்கின்றார்கள். அவர்களிடம் தூரநோக்குச் சிந்தனை இல்லை.

## வெற்றியின் பங்கு உங்களுக்கும் வேண்டும்

உண்டு என்றால் அது உண்டு, இல்லை என்றால் அது இல்லை?என்பதுபோல் தன் கருத்தை வெளிப்படையாகக் கூற முடிந்த, துணிச்சல் மிக்க, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வெற்றியில் தமிழ் மக்களும் பங்காளர்களாக இருக்க வேண்டும். இல்லை என்பது இல்லை. தமிழ் மக்களுக்கு சகலதும் உண்டு என்பதை நாம் உருவாக்க இதுவே அரிய சந்தர்ப்பம்.

எமதுமக்களின் அரசியலுரிமைக்கு எதிரானவர்கள் சிலரும் ஜனாதிபதிமகிந்த ராஜபக்ஷவுடன் இணைந்திருந்தனர். ஆனாலும், அவர்களை தன்னுடன் வைத்துக்கொண்டே அவர்களைக் கட்டுப்படுத்தி, ஆளுமை செலுத்தி, துணிச்சலோடு 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த ஆரம்பித்தவர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை மறுபடியும ஆட்சியதிகாரத்தில் உட்காரவைப்பது, எமது மக்களாகிய உங்களது உரிமைப்பயணத்தைநாம் விட்டகுறையில் இருந்துதொடர்ந்தும் முன்னெடுப்பதற்காகவே.

இன்றைய நீடித்த ஆட்சியிலேயே எமதுமக்களின் சகல உரிமைகளுக்குமான தீர்வுகளும் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு முடிவிற்குக் கொண்டுவரப்படும்.

இதுவே உண்மை! உறுதி!! நம்பிக்கை!!! இதற்கு நானே பொறுப்பு.

## நம்பியவர்கள் தோற்றதில்லை

இங்குநடந்ததும், நடந்துகொண்டிருப்பதும், இனி நடக்கப் போவதும் நான் சொன்னவைகளே. தவறான பாதையை நான் எமதுமக்களுக்கு ஒருபோதும் காட்டியதில்லை. என்னைநம்பிக்கையோடுபின் தொடர்ந்தவர்கள் தோற்றுப்போனதில்லை. இதுதான் எனதுவரலாறு.

எதிரணியினர் எழுதி கைச்சாத்திட்ட ஒப்பந்தத்தில் தமிழ் பேசும் மக்களின்

அரசியலுரிமைப் பிரச்சினைகள் குறித்து எதுவும் இல்லை. எமது மக்களின் நியாயமான உரிமைகளுக்கு எதிரானவர்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கூட செய்திருக்கிறார்கள்.

இதுவரை எடுத்த முயற்சிகளுக்குள் புகுந்து, எமது அரசியல், அபிவிருத்தி நோக்கிய பயணத்தை எதுவும் இல்லாமல் செய்து, இடையில் தடுத்து நிறுத்த நாம் அனுமதிப்பதா?

## தோற்றுப்போனவர்கள் நாங்கள் அல்ல

இதுவரை எமது கோரிக்கைகளை ஏற்று, செயற்படுத்தி வந்தவராகவும், தமிழ் மக்களுக்கு நியாயமான அரசியல் தீர்வை அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்ளும் வகையில் வழங்கவேண்டும் என்றும் உறுதியோடு இருக்கும் தலைவராகவுமே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை நான் பார்க்கின்றேன். அவரது காலத்திலேயே தீர்வு சாத்தியமாகும்.

ஆகவே,எதிர்வரும் ஜனாதிபதித்தேர்தலில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை ஆதரிக்க முன்வரவேண்டும் என்று தமிழ் பேசும் மக்களை நோக்கி நான் உரிமையோடு கேட்கின்றேன்.

வாய்ப்புகளை பயன்படுத்த மறுத்த தவறான வழிமுறைகள் தோற்றுப்போனாலும்,

எமதுமக்கள் தோற்றுப்போனவர்கள் அல்ல என்பதை உரக்கச் சொல்வோம்!

## தமிழராகவும் இலங்கையராகவும் வாழுவோம்

எமதுமக்கள் இலங்கையர்களாக வாழவேண்டும் என்பதற்காகத் தமிழர்கள் என்ற அடையாளத்தை இழக்கவோ,தமிழர்களாக வாழவேண்டும் என்பதற்காக இலங்கையர்கள் என்ற அடையாளத்தை இழக்கவோ தயாராக இல்லை. எமதுமக்கள் தமிழர்களாக வும்,அதே நேரம் இலங்கையர்களாகவும் வாழவே விரும்புகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# டெங்கு ஒழிப்பு விசேட செயற்றிட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் பரவிவரும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்த விசேட செயற்றிட்டம் ஒன்று எதிர்வரும் 18,19,20 ஆம் திகதிகளில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்று நேற்று நடைபெற்ற விஷேட கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட சுகாதார பரிசோதகர்களுக்காக முக்கிய கலந்துரையாடல் நேற்று திங்கட்கிழமை யாழ்.பொது நூலக மண்டபத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்திலேயே மேற்படி முடிவு எட்டப்பட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் 18,19,20 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம், போப்பாய், மானிப்பாய் ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலேயே விசேட டெங்கு ஒழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (25)

# பிரசாரத்தில் பின்னடிப்பு; சஜித்தின் நோக்கம் என்ன?

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச உரிய வகையில் தேர்தல் பிரசாரத்தை முன்னெடுக்கவில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் பிரசாரக் கூட்டங்களில் சஜித் பிரேமதாச முழு ஆர்வத்துடன் கலந்து கொள்ளவில்லை என ஆங்கில ஊடகமொன்று குற்றம் சுமத்தியுள்ளது.

தேர்தல் பிரசார மேடைகளில் தனக்கு என தனியான ஓர் அறிவிப்பாளரை அழைத்து வந்து அவரின் அறிவிப்பினைத் தொடர்ந்து சஜித் உரையாற்றுவதாகக் குறிப்பிடப்படுகிறது.

குறித்த அறிவிப்பாளர் எதிர்காலத் தலைவர், எதிர்கால கட்சியின் தலைவர் என சஜித் புகழ் பாடுவதாகவும் ரணில் பற்றியோ மைத்திரிபால பற்றியோ குறிப்பிடுவதில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கத்துடன் இணைந்து கொண்டு இவ்வாறு சஜித் செய்கின்றாரா என்ற கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் மேடையைப் பயன்படுத்தி சஜித் சுய பிரசாரம் செய்து வருவதாக இந்த ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

# பல்கலை மாணவன் மீது தாக்குதல் வங்கி ஊழியர் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

குற்றப்புலனாய்வுப் பிரிவினர் என பொய் கூறி பல்கலைக்கழக மாணவனை தாக்கிய வங்கி ஊழியர் ஒருவர் யாழ். பொலிஸாரினால் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 9.00 மணியளவில், திருநெல்வேலி தபால் கட்டை பகுதியில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

வவுனியாப் பகுதியைச் சேர்ந்த யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ நான்காம் வருட மாணவனே இவ்வாறு தாக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது, ஞாயிற்றுக்கிழமை இரவு யாழ். பல்கலைக்கழக நான்காம் வருட மாணவன், கிளிநொச்சியில் இருந்து வருகை தரவுள்ள தனது சக நண்பரை அழைத்துச் செல்வதற்காக யாழ். மத்திய பஸ் நிலையத்திற்கு வந்து நின்றுள்ளார்.

அதன்போது, அவரது கையடக்கத் தொலைபேசிக்கு அழைப்பு வந்துள்ளது. அந்த அழைப்பில், குற்றப் புலனாய்வு (சி.ஐ.டி) பிரிவில் இருந்து கதைக்கின்றோம். நீ எங்கு நிற்கின்றாய் என கேட்கப்பட்டது.

மாணவன் தான் நின்ற இடத்தினைக் கூற மோட்டார் சைக்கிளில் இருவர் அங்கு வந்து மாணவனை அழைத்துச் சென்று, யாழ்.பல்கலைக்கழகத்தில் பயிலும் ஒரு மாணவனை பற்றி விசாரித்ததுடன் தாக்கியுள்ளனர்.

பின்னர் அப்பகுதியால் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட இராணுவத்தினர் இந்த மாணவனை விசாரித்த போது, சம்பவம்தொடர்பாக தெரியப்படுத்தியவுடன், இராணுவத்தினர் யாழ். போக்குவரத்து பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

சம்பவ இடத்திற்கு வந்த போக்குவரத்து பொலிஸார் தாக்கப்பட்ட மாணவனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யுமாறு தெரிவித்தமைக்கு அமைவாக,

இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பாக தாக்குதலுக்கு இலக்காகிய மாணவன் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவ் செய்துள்ளார்.

அந்த முறைப்பாட்டின் பிரகாரம், திருநெல்வேலி பகுதியைச் சேர்ந்தவரும், யாழில் உள்ள தனியார் வங்கி ஒன்றில் கடமையாற்றும் ஊழியர் என்பதும் தாக்கப்பட்ட மாணவனினால் அடையாளம் காணப்பட்டு, யாழ். பொலிஸாரினால் குறித்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட நபரை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்துவதற்கான நடவடிக்கையினை யாழ்.பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (25)

# முடிவுக்கு வந்தது பணய நாடகம்

(சிட்னி)

அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரின் மத்தியில் உணவு விடுதி ஒன்றில் ஆயுததாரி ஒருவர் பணயக் கைதிகளாக மக்களை பிடித்துவைத்திருந்த சம்பவம் பொலிஸாரின் அதிரடித் தாக்குதல் மூலம் முடிவுக்கு வந்துள்ளது.

ஆட்களைப் பிடித்து வைத்திருந்த ஆயுததாரி உட்பட இருவர் உயிரிழந்துள்ளதாக உறுதிப்படுத்தப்படாத உள்ளூர் தகவல்கள் கூறுகின்றன.

49 வயதான ஈரானிய அகதியான இந்த ஆயுததாரியின் பெயர் மான் ஹரோன் மோனிஸ் என்று பொலிஸார் அறிவித்திருந்தனர். மேலதிக செய்தி 18 ஆம் பக்கத்தில்...

# தமிழகத்தில் நாசவேலைத்திட்டம்; சந்தேக நபரை ஒப்படையுங்கள்

பயங்கரவாத சந்தேகநபரை அனுப்பி வைக்குமாறு இந்தியா, இலங்கை அரசாங்கத்திடம் கோர உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சென்னையில் அமைந்துள்ள இஸ்ரேலிய மற்றும் அமெரிக்க கொன்சோல் காரியாலயங்களின் மீது தீவிரவாத தாக்குதல் நடத்த திட்டமிட்டதாக இலங்கையர் ஒருவர் மீது ஏற்கனவே குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த இலங்கையரை மலேசியா பொலிஸார் அண்மையில் கோலாலம்பூரில் வைத்து கைது செய்திருந்தனர். முஹமட் ஹுசெய்ன் என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

மலேசிய அரசாங்கம் குறித்த இலங்கையரை இலங்கைக்கு நாடு கடத்தியுள்ளது. குறித்த இலங்கையரை ஒப்படைக்குமாறு இந்தியா அப்போது கோரியிருந்த போதிலும் மலேசியா அந்தச் கோரிக்கையை நிராகரித்துள்ளது.

இலங்கைக்கு நாடு கடத்திய சந்தேக நபர் மீது விசாரணை நடத்தும் முனைப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# பொதுக்கிணற்றை புனரமைக்கும் "நாம் நண்பர்கள்" அமைப்பு

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு அருகாமையிலுள்ள பொதுக்கிணறு 'நாம் நண்பர்கள்' அமைப்பினரால் புனரமைக்கப்பட்டு வருகின்றது. நாளாந்தம் பலர் பாவிக்கும் இக்கிணறு பழமையானது என்பதாலும் கிணற்றின் முன் பகுதி பாதுகாப்பாக இல்லாமையாலும் வீதியிலுள்ள அழுக்குகள் கிணற்றினுள் செல்லும் என்பதால் 'நாம் நண்பர்கள்' அமைப்பினர் தாமாக முன் வந்து இக் கிணற்றை புனரமைத்து வருகின்றனர்.

கிணற்றின் முன்பக்க கட்டுக்கள் அமைக்கப்பட்டுள்ளதோடு கால்நடைகள் நீர் அருந்துவதற்கேற்ற வகையில் நீர்த்தொட்டி ஒன்றும் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் வெளியிலிருந்து வரும் குப்பைகள் கிணற்றினுள் செல்வதைத்தடுக்கும் விதத்தில் மூடி ஒன்றும் புதிதாக செய்து பொருத்தப்பட்டுள்ளது.

லண்டனில் வசிக்கும் புலம்பெயர் தமிழரான சண்முகம் குருபரன் இதற்கான முழுமையான அனுசரணையினை வழங்கியுள்ளார். முழுமையான புனரமைப்பு வேலைகளையும் 'நாம் நண்பர்கள்' அமைப்பினைச் சேர்ந்தவர்களே மேற்கொண்டு வருகின்றனர். புனரமைக்கபட்டு நிறைவடைந்ததும் பொதுக்கிணறு மக்கள் பாவனைக்கு மீள கையளிக்கப்படும் என 'நாம் நண்பர்கள்' அமைப்பினர் தெரிவித்தனர். (63)

# இந்திய சிறையில் வாடும் இலங்கை மீனவர்களின் விடுதலை

## நீர்கொழும்பில் ஆர்ப்பாட்டம்

இந்தியாவில் தடுத்துவைக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்களை விடுதலை செய்வதற்கு நடவடிக்கைகளை எடுக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்தும் ஆர்ப்பாட்டமொன்று நீர்கொழும்பில் நேற்று நடைபெற்றது.

இந்திய மீனவர்களை இலங்கை அரசு அண்மையில் விடுவித்திருந்தது.

நீர்கொழும்பு நகரில் ஒன்று கூடிய இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மீனவர்களின் உறவினர்கள் மற்றும் ஏனைய மீனவர்கள் இந்த ஆர்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.

போதைப்பொருள் கடத்தல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட ஐந்து இந்திய மீனவர்களை விடுதலை செய்வதற்கு இலங்கை அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்ட போதிலும் இந்தியாவில் தடுத்துவைக்கப்பட்டுள்ள எமது மீனவர்களை விடுவிப்பதற்கு இந்திய அரசாங்கம் இதுவரை எந்த விதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என்று ஆர்பாட்டத்தில் ஈடுபட்டோர் குற்றச்சாட்டுகளை முன்வைத்தனர்.

எமது மீனவர்களை விடுதலைசெய்வதற்கு இலங்கை அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து திப்தியடைய முடியாதென்று கூறிய ஆர்ப்பாட்டக்காரர்கள், எதிர்வரும் நத்தார் தினத்திற்கு முன்பு இவர்களை விடுதலைசெய்வதற்கு நடவடிக்கைகளை எடுக்குமாறு வேண்டுகோள் விடுத்தனர்.

ஆயினும் இது சம்பந்தமாக கருத்துகளை தெரிவித்துள்ள மீன்பிடித்துறை துணை அமைச்சர் சரத்குமார குணரத்ன இந்தியாவில் தடுத்துவைக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்களை விடுவிப்பதற்கான தலையீடுகளை. மேற்கொள்வதற்கு சட்டரீதியாக இலங்கை அரசாங்கத்திற்கு அவகாசம் இல்லை என்று கூறினார்.

# தபால் மூல வாக்களிப்பு ஏற்பாடுகள் யாவும் பூர்த்தி

(யாழ்ப்பாணம்)

நடைபெறவுள்ள ஜனாதிபதித தேர்தலுக்கு தபால் மூலம் வாக்களிக்க 14 ஆயிரத்து 328 பேர் தகுதி பெற்றுள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபரும், தெரிவு அத்தாட்சி அலுவலருமான சுந்தரம் அருமைநாயகம் நேற்று தெரிவித்தார்.

வாக்களிக்க தகுதி பெற்றுள்ள தபால் மூல வாக்காளர்களுக்கான வாக்குச் சீட்டுக்கள் அடங்கிய காப்புறுதி செய்யப்பட்ட பொதிகள் நேற்று திங்கட்கிழமை தபால் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தபால் மூல வாக்குசீட்டுகள் உரிய நேரத்தில் பாதுகாப்பாக அத்தாட்சிபடுத்தும் அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அந்த வாக்குச் சீட்டுக்கள் எதிர்வரும் 23 மற்றும் 24 ஆம் திகதிகளில் தபால் மூல வாக்காளர்களாக பதிவு செய்யப்பட்டுள்ளவர்களுக்கு அந்தந்த அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்கள் ஊடாக வழங்கி வைக்கப்படும்.

அத்துடன், தமது வாக்குகளை குறிக்கப்பட்ட தினங்களில் பதிவு செய்யத் தவறும் பட்சத்தில் யாழ். மாவட்ட செயலகத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தபால் மூல வாக்களிப்பு நிலையத்திற்கு வருகை தந்து, தமது வாக்குகளை பதிவு செய்ய முடியுமென்று யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். (25)

## பல்கலைக்...

ள்ளார். வடக்கில் சுமார் 600 இற்கும் மேற்பட்ட பல்கலைக்கழக மாணவர்களை விடுதலைப்புலிகள் கொலை செய்ததுடன். ஜே.வி.பி. சுமார் 400 பல்கலைக்கழக மாணவர்களை கொலை செய்ததாகத் தெரிவித்துள்ளார்.

பிரச்சினைகள் காரணமாக பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் நாட்டை விட்டு வெளியேறிச் சென்றதாகத் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பதவியைப் பொறுப்பேற்றுக் கொள்ளும் வரையில் பல்கலைக்கழக முறைமையில் பாரிய பின்னடைவு காணப்பட்டதாகத்தெரிவித்துள்ளார்.

2005 ஆம் ஆண்டில் 9000 மாணவர்களே பல்கலைக்கழகங்களுக்கு உள்ளீர்க்கப்பட்டதாகவும் 2014 ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 25000மாக உயர்த்தப்பட்டுள்ளது எனவும், 2020ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை ஒரு இலட்சமாக அதிகரிக்க திட்டமிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 டிசம்பர் 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.